# புதிய ஜனநாயகம்

அக்டோபர் 2014
ரூ.10.00




# பிரம்மஸ்ரீ கிரிமினல்கள்!

மற்ற மனிதர்கள் ஸ்ரீக்கள்; பார்ப்பனர்கள் பிரம்மஸ்ரீக்கள். அதாவது, பிரம்மாவின் நெற்றியில் ஜனித்த தனிப்பிறவிகள். குற்றங்கள் புரியும் மற்ற மனிதர்கள் கிரிமினல்கள்; இவர்களோ தனிப்பிறவிகள் என்பதால் பிரம்மஸ்ரீ கிரிமினல்கள். ஆகவே, பார்ப்பனர்கள் கிரிமினல் குற்றங்கள் புரிந்தாலும் தண்டிக்கப்படக்கூடியவர்கள் அல்ல என்பதுதான் மனுநீதி. அதைத்தான் இப்போதும் வலியுறுத்துகிறார்கள்.

# இதுதாண்டா அம்மா போலீசு!

## போலீசு கொட்டடியில் சந்திரா என்ற ஏழைத்தாய் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டிருப்பது பெண்களின் பாதுகாப்புக்கு முதன்மையான எதிரி போலீசுதான் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டெல்லியில் ஓடும் பேருந்தில் நடந்த நிர்பயா பாலியல் வல்லுறவு சம்பவத்தையொட்டி நடுத்தரவர்க்கத்தினரும் முதலாளித்துவ அறிவுத் துறையினரும் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளைத் தடுக்க சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் எனக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், இந்தியப் பெண்களின் முதன்மையான, அபாயகரமான எதிரி இந்த அரசமைப்புதான்; குறிப்பாக, சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் காக்கிச்சட்டை கிரிமினல்கள்தான் என்பதை விளக்கி சிறப்புக் கட்டுரையொன்றை பு.ஜ.வில் வெளியிட்டிருந்தோம். அம்மா ஆட்சியில் தமிழக போலீசும்; போலீசு யார், ரவுடி யார் எனப் பிரித்துப் பார்க்க முடியாதபடி ஆட்சி நடந்து வரும் புதுச்சேரியில் அம்மாநில போலீசும் சம்பந்தப்பட்டுள்ள இரண்டு சம்பவங்கள் நமது கூற்றை நிரூபிக்கும் இன்னொரு சான்றாக அமைந்துள்ளன.

உடுமலைப்பேட்டையில் உள்ள ஒரு தனியார் உணவகத்தில் சமையல் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த சந்திராவை, அவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக விசாரிப்பதற்கு கடந்த ஆகஸ்டு 14 அன்று உடுமலைப்பேட்டை போலீசார் அழைத்துச் சென்றனர். விசாரணை என்ற போர்வையில் குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லி அவரை போலீசார் அச்சுறுத்தினர். சந்திரா அதற்குப் பணிய மறுக்கவே, அவர் மீது பாலியல் வல்லுறவு உள்ளிட்ட கொடூரமான சித்திரவதைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஏவியது, போலீசு.

சந்திராவின் மகள் ராஜகுமாரி





வக்கிரமான சித்திரவதைகளால் நடைப்பிணமாக்கப்பட்ட சந்திரா.

முதலில் அவரது நகக் கண்கள் அனைத்தும் ஊசிகளால் துளைக்கப்பட்டன. அதற்குப் பிறகும் போலீசார் சொன்னபடி சந்திரா வாக்குமூலம் அளிக்க மறுக்கவே, சந்திரா நடுத்தர வயதை எட்டிய ஒரு தாய் என்றுகூட பாராமல், அவர் மீது பாலியல் வக்கிரம் நிறைந்த வன்முறை ஏவிவிடப்பட்டது. அவர் முழுமையாக நிர்வாணப் படுத்தப்பட்டு, தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு, பி.வி.சி. பைப்பால் தாக்கப் பட்டுள்ளார். அக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குப் பிறகும்கூட சந்திராவிடமிருந்து போலீசாரால் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெற முடியவில்லை. அதன்பின் அவர் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதோடு, அவரது பிறப்புறுப்பில் லத்தியைச் சொருகி சித்திரவதை செய்தது போலீசு. அவரது பிறப்புறுப்பிலிருந்து உதிரப் போக்கு ஏற்பட்டு அவர் மயங்கிச்சரியும் நிலை வரை இந்த சித்திரவதை நடந்திருக்கிறது. ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல, தொடர்ந்து ஐந்து நாட்கள் சந்திராவைச் சட்டவிரோதக் காவலில் அடைத்து வைத்து, சித்திரவதை செய்து, செய்யாத கொலையைச் செய்ததாக சந்திராவிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலத்தைப் போலீசார் பெற்றுள்ளனர்.

மதுரை மாவட்டம், மேலூரில் வசித்துவரும் சந்திராவின் மகள் ராஜகுமாரி சிறைச்சாலையில் உடலெங்கும் காயங்களோடு தனது தாயைப் பார்த்த பிறகுதான் உடுமலைப்பேட்டை போலீசார் பாலியல் வக்கிரத்தோடு நடத்தியிருக்கும் இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் வெளியுலகுக்குத் தெரிந்தது. இச்சித்திரவதை குறித்து நீதிமன்ற விசாரணை கோரி ராஜகுமாரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், உடுமலை போலீசாரால் சந்திரா பாலியல் ரீதியாகச் சித்திரவதை செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட சந்திராவிற்குத் தமிழக அரசு இரண்டு இலட்சரூபாய் நட்ட ஈடு தர வேண்டும் என்றும், இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தி வழக்குப் பதிவு செய்ய வேண்டுமெனவும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

புதிய
ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 29 இதழ்: 12
அக்டோபர் 2014

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# பிரம்மஸ்ரீ கிரிமினல்கள்

தனது குற்றங்களை அம்பலப்படுத்திய மற்றொரு பார்ப்பனனைக் கோரமாகப் படுகொலை செய்துவிட்டு எந்தத் தண்டனையுமில்லாமல் விடுவிக்கப்பட்டு, தனது பஞ்சமாபாதகங்களைத் தொடரும் காஞ்சி சங்கராச்சாரி, தன்னை ஒரு ''லோக குரு'' என்று சொல்லிக் கொண்டு நாடு முழுவதும் சுற்றித்திரிகிறார்.

நாடறிந்த அரசியல் தரகனாகவும், அரசியல் விபச்சாரியாகவும், அந்நிய நாடுகளின் உளவாளி - கைக்கூலியாகவும் ஊழியம் செய்து பிழைக்கும் பார்ப்பன அரசியல் சதிகாரன் சுப்பிரமணிய சுவாமி, ''நான் ஒரு பார்ப்பனன்; யாரிடம் வேண்டுமானாலும் உஞ்ச விருத்தி கேட்டு, யாசகம் பெற்று எப்படியும் ஜீவிப்பேன்'' என்று நரித்தனமாகப் பேசுகிறார்.

''ஆம், நான் ஒரு பாப்பாத்திதான். என்னை யாரும் ஆட்டவும் முடியாது, அசைக்கவும் முடியாது'' என்று சட்டப்பேரவையில் பகிரங்கமாகவே அறிவித்தார், ஜெயலலிதா. இதே திமிர்த்தனத்தோடு பல்வேறு கிரிமினல் குற்றங்கள் செய்துவிட்டு, கையுங்களவுமாகப் பிடிபட்ட பின்னரும், 18 ஆண்டுகள் ஜாரினியாகவும் ரஸ்புதீனுமாகவும் அரசபோகத்தில் மூழ்கித் திளைத்தார்கள், ஜெயலலிதாவும் சசிகலாவும். கடைசியில் அவர்களின் கண்களில் விரலைவிட்டு ஆட்டிவிட்டார், ஜெயா-சசி கும்பலின் சொத்துக்குவிப்பு வழக்கை விசாரித்து வந்த பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நடுவர் ஜான் மைக்கேல் குன்ஹா. ''நீதித்துறையில் ஒரு மாவீரன்'' என்று நேர்மையான சட்ட நிபுணர்கள் போற்றும் வகையில், பார்ப்பன அதிகாரப் பரிவாரங்களின் குறுக்கீடுகள், நிர்பந்தங்களையும் மீறி, ஜெயா - சசி கும்பலின் மிக மோசமான சீண்டல்கள், குரூரமான ஆத்திரமூட்டல்களைச் சகித்துக்கொண்டு ஒரு நாளைக்கு 18 மணி நேரம் வீதம் கடுமையாக உழைத்து, குற்றவாளிகள் தப்பிவிட முடியாதவாறு சட்டநுட்பங்களை ஆய்ந்து, இதுவரையிலான எல்லா சட்ட-நீதிகளிலும் விதிவிலக்கான ஒரு தீர்ப்பை, ஜான் மைக்கேல் குன்ஹா வழங்கி இருக்கிறார்.

மத்தியில் மோடி தலைமையிலான பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் ஆட்சியும் மாநிலத்தில் பொறுக்கி-கழிசடை அரசியல் மூலமாக ஜெயா-சசி கும்பலின் ஏகபோக ஆதிக்கமும் நிலைநாட்டப்பட்டு, இனித் தம்மை யாரும் ஆட்டவும் அசைக்கவும் முடியாது என்று பார்ப்பன - பாசிச சக்திகள் ஆணவமாகப் பேசியும் எழுதியும் வந்தார்கள். அந்த நிலையில் ஜெயா-சசி கும்பலை அரசியல் விளிம்பு நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது, நடுவர் ஜான் மைக்கேல் குன்ஹாவின் தீர்ப்பு. அந்த பார்ப்பன - பாசிச சக்திகள் என்ன சொல்லிக்கொண்டார்கள்? ''பார்ப்பன சமூகம்தான் இயல்பாகவே திறமையும் தகுதியும் வாய்ந்தது. நாட்டில் சமூக நீதி, இட ஒதுக்கீடு மூலமாகத் திறமையும் தகுதியும் வாய்ந்தவர்கள் பொறுப்புக்கு வர முடியாமல் போகிறார்கள்; இதனால்தான் நாடே பின்தங்கிப்போயுள்ளது.'' இப்படிப் பீற்றிக்கொள்ளும் பார்ப்பன சமூகம் தனது பிரதிநிதிகளாக சுப்பிரமணிய சுவாமி, காஞ்சி சங்கராச்சாரி ஜெயலலிதா போன்றவர்களைத்தான் முன்நிறுத்தியிருக்கிறது. இவர்களுக்கு மாறாக 'திறமையும் தகுதியும் இல்லாத' சமூகமாக, பார்ப்பனியத்தால் தள்ளிவைக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜான் மைக்கேல் குன்ஹா, சகாயம், உமா சங்கர் போன்றவர்கள்தாம் திறமையும் தகுதியும் மட்டுமல்ல, நேர்மையும் உறுதியும் வாய்ந்தவர்கள்.

ஜெயா-சசி கும்பலுக்குத் தண்டனையும் அபராதமும் வழங்கப்பட்டதோடு நின்றுவிட முடியாது. அக்கும்பல் 1996 வரையில் அடித்த கொள்ளையின் ஒரு பகுதிக்காகத்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறது. 1996- க்குப்பிறகு அது யோக்கியமானதாக மாறிவிட்டதா? அப்போதும் அதன் பிறகும் அடித்த கொள்ளையையும் செய்த கிரிமினல் குற்றங்களையும் கணக்கில் கொண்டுவந்து தண்டிக்க வேண்டியதில்லையா? இந்தத் தீர்ப்பை ஏற்று ஜெயா-சசி கும்பல் திருந்திவிட்டதா? இன்னும் தன்னை நிரபராதி என்று சொல்லிக்கொள்ளும் அக்கும்பல், தான் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணம்-கருப்புப்பணத்தைக் கொண்டு இந்தத் தண்டனையிலிருந்தும்

விடுபடவும் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கவும் தானே எத்தணிக்கும்? எனவே, ஜெயா-சசி கும்பல் குவித்து வைத்திருக்கும் கள்ளப் பணம்-கருப்புப் பணத்தையும் முழுவதுமாகப் பறிமுதல் செய்யவேண்டும். அப்போதுதான் அதன் கிரிமினல் குற்றங்கள் தொடர்வது தடுக்கப்படும். அதற்காகத் தமிழ் மக்கள் போராடவேண்டும். தண்டிக்கப்பட்ட கிரிமினல் குற்றவாளிகள் மீது அநீதியிழைக்கப்பட்ட நிரபராதியைப் போன்ற அனுதாபம் தோற்றுவிக்கப்படுவதையும் முறியடிக்கவேண்டும்.


காஞ்சிபுரத்தில் அ.தி.மு.க. காலிகளால் எரிக்கப்பட்ட அரசுப் பேருந்து.

ஜெயா-சசி கும்பலின் முகத்தில் அறைந்தாற்போன்று பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பை பார்ப்பனப் பரிவாரங்களும், ஜெயா-சசி கும்பல் வீசியெறிந்த எலும்புத் துண்டுகளைக் கவ்விக்கொண்டுள்ள எடுபிடிகளும் விசுவாசிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்கெனவே, ஜெயா-சசி கும்பல் தன் மீதான வேறு பல கிரிமினல் குற்ற வழக்குகளில் இருந்து ஏதேதோ தில்லுமுல்லுகள் செய்து, விடுதலையாகி வந்து, மீண்டும் முதலமைச்சரானதைப்போல நடந்துவிடும் என்று தமிழக மக்களை நம்பவைக்கும் முயற்சியில் இறங்கிவிட்டார்கள். இதுவொன்றும் ஜெயா-சசி கும்பலும் அதன் பார்ப்பன பாசிசப் பங்காளிகளும் சாதிக்கவே முடியாத நம்பிக்கையல்ல என்பதுதான் உண்மை.

இந்த உண்மையை, ஜெயா-சசி கும்பல் தம் மீதான சொத்துக் குவிப்பு வழக்கைப் பதினெட்டு ஆண்டுகள் இழுத்தடித்து, தண்டனையில் இருந்து தப்பித்துக் கொண்டுவந்தது, அதற்காக உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதியரசர்களையும் விலைக்கு வாங்கியது உட்பட அக்கும்பலின் சட்டத்துக்குப் புறம்பான எல்லாக் கிரிமினல் தனங்களையும் நினைவில் வைத்துள்ள எவரும் மறுக்க மாட்டார்கள்.

ஜெயா-சசி கும்பல் அ.இ.அ.தி.மு.க. வுக்குள் புகுந்து அதன் தலைமையையும் ஆட்சியையும் கைப்பற்றியதில் இருந்து, கடந்த மாதம் உள்ளாட்சி இடைத்தேர்தல்களில் தனது சகபாடிகளான பா.ஜ.க. மற்றும் மார்க்சிஸ்டு கட்சிகளுக்கும் ''அல்வா'' கொடுத்தது வரை 20 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழக அரசியலில் மோசடிகள், பச்சைப் புளுகு - பித்தலாட்டங்கள் பலவும் செய்துள்ளது. 13 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி நிர்வாகத்தில் மக்கள் மீதான கொடூரமான ஒடுக்குமுறை, பகற்கொள்ளை புரிந்துள்ளது. இவற்றோடு கட்சியின் அடிமட்ட எடுபிடிகள் முதற்கொண்டு உயர்ந்த மட்டத்திலுள்ள ஜெயா-சசி கும்பல் வரை இலஞ்ச-ஊழல், அதிகாரமுறைகேடுகளையும், (கறி-சாராய விருந்து, கள்ள வோட்டு-போலி அடையாள அட்டை, பணப்பட்டுவாடாவில் நிபுணத்துவம் என்று) கைதேர்ந்த தேர்தல் தில்லுமுல்லுகளையும் செய்து நாட்டிலேயே ஒரு பெரும் கிரிமினல், கழிசடை-பொறுக்கி அரசியல் குற்றக் கும்பலாகவே அ.இ.அ.தி.மு.க. உள்ளது.

அதோடு முக்கியமாக, பெரும் கார்ப்பரேட் முதலாளிகள், போலி கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா தேசிய, பிராந்தியக் கட்சிகளின் தலைவர்கள், நிழல் மனிதர்கள், கருப்புப்பண-கள்ளச்சந்தை முதலைகள், கிரானைட் பி.ஆர்.பி., மணற்கொள்ளை வைகுண்டராஜன், சாராய முதலாளிகள் கர்நாடக மல்லையா மற்றும் ஆந்திர சுப்பாரெட்டி, ஏகபோக கரும்பு ஆலை அதிபர் சரத்பவார், உச்சநீதிமன்ற நீதியரசர்களாகவும் மத்திய அரசின் உயர் அதிகாரிகளாகவும் உள்ள டெல்லி பார்ப்பனப் புள்ளிகள் ஆகியவர்களோடு தனிப்பட்ட ''நட்பு'' வைத்துக் கொண்டு சட்டத்துக்குப் புறம்பான அதிகாரமையமாக ஜெயா-சசி கும்பல் இவ்வளவு காலமும் தலைவிரித்தாடுகிறது.

இலஞ்ச-ஊழல், அதிகாரமுறைகேடுகளுக்காக இவ்வளவு காலத்துக்குப் பிறகாவது சட்டப்படி தண்டிக்கப்பட்ட கிரிமினல் குற்றவாளிகளுக்கு ஆதரவாகவும், அவை எதிர்த்தரப்பின் சூழ்ச்சி காரணமாக, அரசியல் பழிவாங்கும் நோக்கோடு போடப்பட்ட பொய் வழக்குதானென்றும் கோயபல்சுத்தனமாகப் புளுகுப் பிரச்சாரம் செய்வதும், அவர் விடுதலையாகி, மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடுவார் என்று மக்களிடையே நம்பிக்கையூட்டுவதும் அதற்கு ஆதரவு திரட்டும் வகையில் மக்களை ''பிளாக் மெயில்'' செய்யும் வகையில் ஒரு குற்றக்கும்பல் அராஜகமான ''போராட்டங்கள்'' நடத்துவதும் நாட்டில் பரவிவரும் கிரிமினல், கழிசடை-பொறுக்கி அரசியல் கலாச்சாரத்தை மேலும் வலுவாக்குவதுதான். கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும் பிரமுகர்கள் எல்லோருமே ''தனக்கு எதிரான சூழ்ச்சி-சதி'' என்று சொல்லித்தான் தப்பித்துக்கொள்ள எத்தணிக்கிறார்கள்.

நியாயமான கோரிக்கைகளுக்காக முன்னரே அறிவித்து ''பந்த்-கடையடைப்புகள்,'' வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவதை எதிர்த்து ஆத்திரமடையும் நீதியரசர்களும் அரசு நிர்வாகமும் ''பயங்கரவாதம், துப்பாக்கிக் கலாச்சாரம்'' என்றெல்லாம் பீதிகிளப்பும் பார்ப்பனிய நியாயவான்களும் அறிவுஜீவிகளும் ஊடகங்களும் இவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருப்பதும், ஜெயா-சசி கும்பலின் தலைமையிலான கிரிமினல், கழிசடை-பொறுக்கி அரசியல் படைக்கு உடந்தையான செயலாகவே உள்ளது.

இவற்றைத் தனித்துப் பார்க்கக்கூடாது. இப்போது நாட்டின் அனைத்து சமூக, பொருளாதார, அரசுக் கட்டுமானங்களும் ஒட்டுமொத்தக் கட்டமைப்புமே கடும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது. அதன் ஒரு பகுதியாகத்தான் தேர்தல் அரசியல்வாதிகளும், அரசியல் கட்சிகளும், தேர்தல் அரசியல் கட்டுமானங்களும் சீரழிந்து போயுள்ளதையும் காண வேண்டும். ஏற்கெனவே உள்ள அரசும் ஆட்சியாளர்களும் ஆளும் வர்க்கங்களும் ஆளமுடியாமல் போனதையும், ஆளும் நியாயவுரிமையை இழந்துவிட்டதையும், ஆளத் தகுதியிழந்து போயுள்ளதையும் வலியுறுத்த வேண்டும். •

## சுப்பிரமணிய சாமி:

# ‘தேசிய’ அசிங்கம்!

**என்னதான் இருந்தாலும் சு.சாமி பார்ப்பனன் என்பதாலேயே, அவரது விபச்சாரத்தனங்கள் அனைத்தும் மறைக்கப்பட்டு, அவர் அறிவார்ந்த அரசியல்வாதி போல பார்ப்பன ஊடகங்களால் முன்னிறுத்தப்படுகிறார்.**

அக்கிரகாரத்து மாமாப்பயல், அண்டப் புளுகன், ஆட்சிக் கவிழ்ப்பு சதிகாரன் - என்றெல்லாம் இழிவாகச் சித்தரிக்கப்படும் சுப்பிரமணிய சாமி, ‘‘எல்லை தாண்டி வந்து மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களது படகுகளைச் சிறைபிடித்து வைத்துக் கொள்ளுங்கள் என்று இலங்கை அரசுக்கு நான்தான் ஆலோசனை வழங்கினேன். அதைத்தான் இப்போது இலங்கை அரசு செய்து கொண்டிருக்கிறது’’ என்று தனது தமிழர்விரோத திமிர்த்தனத்தை இப்போது மீண்டும் கக்கியிருக்கிறார்.

மைய அரசுக்குத் தெரிந்துதான் இலங்கைக்குச் சென்றேன்; தமிழக முதலாளிகளின் படகுகளைப் பிடித்துக் கொண்டு கூலித் தொழிலாளிகளான மீனவர்களை விடுவிக்குமாறு நான்தான் ராஜபக்சேவிடம் சொன்னேன் என்று அயலுறவு அமைச்சரைப் போலப் பேசுகிறார் சு.சாமி. தமிழர்களை ரவுடிகள் என்று சாடும் சு.சாமி, ராஜபக்சேவுக்கு ஆதரவாக இனப் படுகொலையை ஆதரித்து திமிராகப் பேட்டியளிக்கிறார். இருப்பினும், தமிழகத்தைத் தவிர வேறு எந்த பா.ஜ.க. தலைவர்களும் இவருக்கு எதிராகக் கண்டன அறிக்கைகூட வெளியிடவில்லை. இவர் பா.ஜ.க.வின் அகில இந்திய செயற்குழு உறுப்பினர்களில் ஒருவர் என்று கூறப்பட்டாலும், பா.ஜ.க.வில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத சு.சாமியின் பேச்சுக்கு பதில் சொல்ல முடியாது என்று நழுவிக் கொள்கிறார் மத்திய அமைச்சரான பொன் ராதாகிருஷ்ணன். அதேசமயம், சு.சாமிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு அளித்துக் கொண்டிருக்கிறது மோடி அரசு.

யார் இந்த சு.சாமி? ஒரு அரசியல்வாதிக்குரிய சமூக ஆதரவோ, மக்களிடம் மதிப்போ இல்லாத ஒரு நபரால் இது எப்படி சாத்தியமாகிறது? அடிக்கடி விமானத்தில் பறக்கும் சு.சாமிக்கு எப்படி இவ்வளவு சொத்துக்களும் வருமானமும் கிடைத்தது? அவரது தொழில்தான் என்ன?

சில பத்திரிகையாளர்கள் தேர்தல் கூட்டணியை உருவாக்க ஒரு ஏற்பாட்டைச் செய்து, அதைத் தமது ஏடுகளில் முதன்மைச் செய்தியாக்கி எப்படி மாமா வேலை செய்கிறார்களோ, அதேபோல அரசியலில் இத்தகைய வேலையைச் செய்பவர்தான் சு.சாமி. தில்லானா மோகனாம்பாள் திரைப்படத்தில் வரும் வைத்தி என்ற கதாபாத்திரத்தின் மறு அவதாரம்தான் சு.சாமி. இத்தகைய நிழல் மனிதர்கள்தான் ‘‘சோர்ஸ்’’ என்ற பெயரில் அங்கேயும் இங்கேயும் தகவல்களைப் பரிமாறும் நபர்களாக இருக்கின்றனர். இத்தகைய அரசியல் - அதிகாரத் தரகர்களைப் பிடித்து தேர்தல் கூட்டணிக்கு நோட்டம் பார்ப்பதென்பது ஓட்டுக்கட்சிகளின் உத்தியாக உள்ளது. அந்தத் தரப்பின் கோரிக்கை என்ன, எதிர்பார்ப்பு என்ன, பலவீனம் என்ன என்பதையும், அதற்கு இந்தத் தரப்பின் கருத்து என்ன என்பதையும் பரிமாற்றம் செய்யும் இரகசிய இணைப்புச் சங்கிலியாக இவர்கள் இருக்கின்றனர்.

விபச்சார வழக்கில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட நடிகை புவனேஸ்வரி, சாதிக் கட்சியான மருத்துவர் சேதுராமனின் மூவேந்தர் முன்னேற்றக் கழகம் கட்சியில் சேர்ந்து மாநில மகளிர் அணிச் செயலாளராகியுள்ளார். அவரை விபச்சாரி என்பதா, அல்லது அரசியல்

ஈழத் தமிழின அழிப்புப் போர்க்குற்றவாளி பாசிச ராஜபக்சேவுடன் உறவாடும் தமிழ் விரோத-தமிழர் விரோத பார்ப்பன அரசியல் அதிகாரத் தரகன் சு.சாமி.



பிரமுகர் என்பதா? இப்படித்தான் சு.சாமி போன்ற பேர் வழிகளும் உள்ளனர். சினிமா மற்றும் வீட்டுமனைத் தொழிலில் இவர்கள் மீடியேட்டர்கள் என்ற பெயரில் குறிப்பிடப்படுகின்றனர். அரசியல், சினிமா, வீட்டு மனைத் தொழில், பெருந்தொழில் நிறுவனங்கள், மத நிறுவனங்கள், பண்பாட்டு அமைப்புகள் - என அனைத் திலும் இத்தகைய நபர்கள் நீக்கமற நிறைந்துள்ளனர். சசிகலா நடராசன் எத்தகைய அரசியல் தரகர் என்பது தமிழக மக்களுக்குத் தெரியும். இருந்தாலும், தமிழினப் பிழைப்புவாதிகள் அவரைப் பயன்படுத்திக் கொள்வதை ஒரு உத்தியாகக் கொண்டுள்ளனர். அதேபோலத்தான் பல வண்ணப் பிழைப்புவாதிகளும் சு.சாமியைப் பயன் படுத்திக் கொள்வதும், மறுபுறம் இதைக் கொண்டு தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள சு.சாமி ஆட்டம் போடுவதும் நடக்கிறது.

தமிழகத்தின் சோழவந்தானைப் பூர்வீகமாகக் கொண்ட பார்ப்பன குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சு.சாமி, பொருளாதாரப் பட்டம் பெற்று முதலாளித்துவச்சந்தைப்



பார்ப்பன பாசிஸ்டுகளின் கூட்டணி: கொலைகார பார்ப்பன சங்கராச்சாரி,இந்துவெறி அசோக் சிங்காலுடன் கூடிக்குலாவும் சு.சாமி.

பொருளாதாரத்தை ஆதரித்து கம்யூனிசத்தை வெறியோடு எதிர்த்தார். அதனாலேயே அன்று சோவியத் ஆதரவு இந்திரா காந்தியின் ஆட்சியை எதிர்த்து இந்துத்துவ ஜன சங்கத்தை ஆதரித்தார். இந்திராவின் அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில் தலைமறைவாகி அமெரிக்கா, பிரிட்டன் முதலான நாடுகளுக்குச் சென்று அங்குள்ள அதிகாரத் தரகர்கள் மூலம் இந்திரா காந்தியின் சோவியத் ஆதரவு ஆட்சிக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டார். அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மற்றும் இஸ்ரேலிய மொசாத் கும்பலுடன் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார். பின்னர் ஜனதா கட்சியின் நிறுவனர் களில் ஒருவராகி, அதன் தலைவராகவும் செயல்பட்டார்.

இது தவிர, இரகசிய உலகப் பேர்வழிகளான போலிச் சாமியார் சந்திராசாமி, ஆயுதபேரத் தரகன் ஆதனன் கஷோகி முதலானோரின் நெருங்கிய கூட்டாளியான சு.சாமி, ராஜீவின் போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையை மூடி மறைக்க இரகசிய உலகப் பேர்வழிகளுடன் சேர்ந்து போலி ஆவணங்களைத் தயாரித்ததோடு, அப்போதைய பிரதமர் வி.பி.சிங்கின் மகனுக்கு செயிண்ட் கிட்டீஸ் தீவில் உள்ள வங்கிகளில் இரகசியக் கணக்கு உள்ளதாக போர்ஜரி செய்தார். சகுனித்தனங்கள், தரகு வேலைகள் மூலம் பிரபலமாகி அப்போதைய சந்திரசேகர் ஆட்சியில் நீதி மற்றும் சட்டத்துறை அமைச்சராகவும் செயல் பட்டார். அதன் பிறகு காங்கிரசுக்கு வெளியே இருந்து கொண்டு நம்பகமான தரகனாக இயங்கிய சு.சாமி, நர சிம்மராவ் ஆட்சிக் காலத்தில் டங்கல் (காட்) ஒப்பந்தக் கமிட்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அந்த ஒப் பந்தத்தில் இந்தியாவின் சார்பில் கையெழுத்திட்டதன் மூலம், இந்தியப் பொருளாதாரத்தை அமெரிக்காவுக்கு அடகு வைக்கும் தலைமைத் தளபதியாகச் செயல் பட்டார்.

1992-ஆம் ஆண்டிலேயே ஜெயா ஆட்சிக்கு எதிராக மூன்றாவது அணியைக் கட்டிவருவதாகக் கூறிக் கொண்ட சு.சாமி, அதற்காக ஜெயாவின் உடன்பிறவா சகோதரி சசிகலாவின் கணவரும் அதிகாரத் தரகனுமாகிய நடராசனுடன் கைகோர்த்தார். ஆளுநரைச் சந்தித்து மனு கொடுத்துவிட்டு, ஜெயலலிதாவின் சொத்துக்குவிப்புக்கு எதிராக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 1996-ஆம் ஆண்டில் வழக்கைத் தொடுத்தார். அதன் பிறகு சு.சாமியும் ஜெயலலிதாவும் சமரசமாகி, அ.தி.மு.க. ஆதரவோடு இரண்டாவது முறையாக வாஜ்பாய் தலைமையில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அமைந்தது. அப்போது மதுரை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான சு.சாமியை நிதி யமைச்சராக்க வேண்டுமென்றும், சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டு மென்றும் வாஜ்பாய் அரசுக்கு ஜெயலலிதா நிர்ப் பந்தங்கள் கொடுத்து வந்தார். பின்னர் எதிர்த்தரப் பின் பிழைப்புவாதத் தலைவர்களை ஒருங் கிணைத்து டீ பார்ட்டி வைத்து வாஜ்பாய் அரசுக்கு அளித்துவந்த ஆதரவைத் திரும்பப் பெற்று அவரது ஆட்சியை ஜெயலலிதா கவிழ்த்ததில் முக்கிய தரகனாகச் செயல்பட்டவர்தான் சு.சாமி.

தமிழக மற்றும் வட இந்தியப் பார்ப்பனக் கும்பலால் தூக்கி நிறுத்தப்படும் அரசியலதிகாரத் தரகன் என்பதால், நீதிபதிகள்கூடப் பதவி உயர்வுக்காக சு.சாமியிடம் உறவு வைத்துக் கொள்கிறார்கள். அதனால்தான் வக்கீலாக இல்லாத சு.சாமி நீதிமன்றத்தில் சர்வசாதாரணமாகப் புழங்க முடிகிறது. அதிகாரத் தாழ்வாரங்களில் உள்ள இரகசியங்களைத் தெரிந்து கொண்டு பிளாக்மெயில் செய்வதும், உயர் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றத்தில் உள்ள பார்ப்பன அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளை வைத்து காரியம் சாதிப்பதென்பதும் சு.சாமியின் தொழிலாக உள்ளது. இதனால்தான் தில்லைக் கோயிலைக் கைப்பற்ற தீட்சிதர்கள் தொடுத்த வழக்கு உள்ளிட்டு, ஒரு குறிப்பிட்ட வழக்கை ஒரு குறிப்பிட்ட நீதிமன்றம்தான் விசாரிக்க வேண்டும், குறிப்பிட்ட நீதிபதிகள் குழுதான் விசாரிக்க வேண்டும் என்று சு.சாமியால் செல்வாக்கு செலுத்த முடிகிறது.

1995-ஆம் ஆண்டில் ஹவாலா தொடர்பான ஒரு வழக்கை மையப் புலனாய்வுத்துறை விசாரித்து வந்த நிலையில், அதிகாரத் தரகனும் ஹவாலா தொழில் செய்து வந்தவருமான சுரேந்திர ஜெயின் என்ற ஹவாலா பெருச்சாளியும் சிக்கினார். அவரது டைரியில் காங்கிரசு - பா.ஜ.க. அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அதிகாரிகள் உள்ளிட்டு அப்போது மையப் புலனாய்வுத் துறையின் இயக்குனராக இருந்த விஜய் கரனும் இலஞ்சம் வாங்கியவர் பட்டியலில் இருந்தார். கூடவே சு.சாமியின் பெயரும் அதிலே இருந்தது. இலஞ்ச ஊழலை எதிர்க்கும் தூய்மையான அரசியல்-பொருளாதார மேதையாகச் சித்தரிக்கப் படும் சு.சாமியின் யோக்கியதைக்கு இந்தச் சான்று ஒன்றே போதுமானது.



இரகசிய உலக பேர்வழியும் போலி சாமியாருமான சந்திராசாமியின் (இடது) தொழில் கூட்டாளியான சு.சாமி, ‘‘நான் பிராமணன்; ஒரு பிராமணன் யாரிடமிருந்து வேண்டுமானாலும் கையேந்தி யாசகம் பெறலாம்’’ என்று தனது விபச்சாரத்தனத்தைப் பச்சையாகவே வெளிப்படுத்தியிருக்கிறார்.

பார்ப்பானும் ஆதிக்க சாதியினரும் இலஞ்ச ஊழலில் ஈடுபட்டால் தவறல்ல; ஆனால், சூத்திரனும் தாழ்த்தப்பட்டனும் ஈடுபட்டால் அது மிகப் பெரிய குற்றம் என்பதுதான் சு.சாமியின் நியாயவாதம். ‘‘2ஜி ஊழல் விவகாரத்தில் எனக்கு முன்பிருந்த அமைச்சர்கள் எத்தகைய வழிமுறைகளைக் கடைபிடித் தார்களோ அதையேதான் நானும் பின்பற்றினேன்; நான் குற்றமற்றவன் என்று ஆ.ராசா திரும்பத் திரும்பக் கூறு கிறாரே?’’ என்ற கேள்விக்கு, ‘‘ராசாவுக்கு முன்பிருந்த பா.ஜ.க. அமைச்சர்கள் என்ன செய்தார்கள் என்பது எனக்குத் தேவையில்லை’’ என்றார் சு.சாமி. (குமுதம் ரிப்போர்ட்டர், 5.12.2010) ஏன் தேவையில்லை என்று அவர் விளக்கவில்லை. 2ஜி ஊழல் விவகாரத்தில் மன்மோகன், சிதம்பரம் ஆகியோர் கூட அவருக்கு முக்கி யமில்லையாம்; ராசாதான் அவருக்குக் குறியாம். அது ஏன்?

தனியார்மயம் - தாராளமயம் என்பதே ஊழலுக்கும் கார்ப்பரேட் முதலாளிகளின் கொள்ளைக்கான தாகவும் உள்ள நிலையில், அதில் 2ஜி விவகாரத்தில் நடந்த ஊழல் மோசடியை மட்டும் பூதாகரமான தாக்கி, தி.மு.க.வை அரசியல் அரங்கிலிருந்தே ஒழிக்க சு.சாமி மூலமாக பார்ப்பன கும்பல் மீண்டும் ஒரு தாக்குதலை நடத்திய தையே சு.சாமி அளித்துள்ள பேட்டி நிரூபித்துக் காட்டுகிறது. இதற்கு முன்னர், தி.மு.க.வுக்கு எதிரான ஆயுதமாக ராமன் பாலம் விவ காரத்தை வைத்து ஆட்சிக் கவிழ்ப்புச் சதிகளில் இறங்கினார் சு.சாமி. 2007-இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் சேதுசமுத்திரத் திட்டத்துக்கு எதிராக சு.சாமி தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக, சு.சாமியின் வாதத்தை அங்கீகரித்து இந்த வழக்கை உச்சநீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தார், தலைமை நீதிபதி ஷா. உச்சநீதிமன்றத்தில் தொல்லியல் துறை தாக்கல் செய்த மனுவை எதிர்த்து, இது இந்து நம்பிக்கைக்கு எதிரானது என்று அத்வானியும் இந்துத் துவ பரிவாரங்களும் அலறினர். இதனாலேயே பார்ப்பன எதிர்ப்பு மரபை தமிழகத்திலிருந்து ஒழித்துக் கட்டி, எப்படியாவது பார்ப்பன பாசிசத்தை நிலைநாட்டும் தங் களது பொது நோக்கத்துக்காக சங்கராச்சாரி கைதை யொட்டி ஏற்பட்ட பகையை மறந்துதுக்ள் ‘‘சோ’’வும், சு.சாமியும், அத்வானியும், ஜெயலலிதாவுடன் கைகோர்த்தனர்.

> **அதிகாரத் தாழ்வாரங்களில் உள்ள இரகசியங்களைத் தெரிந்து கொண்டு பிளாக்மெயில் செய்வதும், உயர் நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றத்தில் உள்ள பார்ப்பன அதிகாரிகள் மற்றும் நீதிபதிகளை வைத்து காரியம் சாதிப்பதென்பதும் சு.சாமியின் தொழிலாக உள்ளது.**

ஈழ விடுதலைக்கு எதிராகவும் தமிழர்களுக்கு எதிரா கவும் திமிராகப் பேசிவந்த சு.சாமி, உயர்நீதி மன்ற புறக்கணிப்புப் போராட்டத்தை வழக்குரைஞர்கள் நடத்திவந்த நிலையில், அதைக் கேலி செய்யும் வகையில் தில்லை தீட்சிதர்களுக்காக வாதாட வந்தார். போராடும் வழக்குரைஞர்களைத் தீவிரவாதிகள், ரவுடிகள் என் றெல்லாம் கேவலமாகப் பேசி வந்த சு.சாமி மீது வழக் குரைஞர்கள் அழுகிய முட்டையை வீசி உரிய முறையில் மரியாதை கொடுத்தனர். அதைத் தொடர்ந்து வழக்குரைஞர்கள் மீது கொலை வெறித் தாக்குதலை போலீசு கட்டவிழ்த்துவிட்டதைத் தமிழக மக்கள் நன்கறிவார்கள். சு.சாமியோ வழக்குரைஞர்கள் மீதான தாக்குதலை நியாயப் படுத்தியதோடு, வழக்குரைஞர் களைப் பொறுக்கிகள், காலிகள் என்றெல்லாம் வசைபாடினார்.

அமர்த்தியா சென்னுக்கு நோபல் பரிசு கிடைத்தபோது

அதை கிறித்துவ சதி என்றும், கொலைகார சங்கராச் சாரியின் கைதுக்கு சோனியாவின் சதிதான் காரணம் என்றும் சு.சாமி அரிய கண்டுபிடிப்புகளை அவிழ்த்து விட்டார். முஸ்லிம்களின் பிறப்பு விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், எதிர்காலத்தில் முஸ்லிம்களே இந்த நாட்டில் பெரும்பான்மையாகிவிடுவார்கள்; இது பேரபாயம் என்று சாமியாடினார். அவரது உளறல்களும் நடவடிக்கைகளும் எப்படியிருப்பினும், பார்ப்பன பாசிச சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள அதிகாரத் தரகர்தான் சு.சாமி. அன்று உ.பி.யில் சமாஜ்வாதி கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் இணைந்து ஆட்சியைப் பிடித் ததும், அது பார்ப்பனர்களுக்கு ஆபத்து என்று அலறிய சு.சாமி, பிராமண சுயாபிமான் அந்தோலன் சமிதி என்ற அமைப்பை உருவாக்கி, ஆட்சிக் கவிழ்ப்பு சதிகளில் ஈடு பட்டார். இன்று பா.ஜ.க.வில் சங்கமித்து சமஸ் கிருதத்தைத் தேசிய மொழியாக்க வேண்டும் என்று பார்ப்பன வெறியைக் கக்குகிறார்.

தனிநபர், கட்சியின் பலவீனத்தையும் உள்விவகாரங் களையும் தெரிந்துகொண்டு பிளாக்மெயில் செய்வ தென்பது சு.சாமியின் தொழில். அது தெரிந்திருந்தும் தமது அரசியல் ஆதாயத்துக்காக பலதரப்பட்ட பிழைப்பு வாதிகளும் இந்த அரசியல் விபச்சாரியிடம் உறவு வைத்துக் கொள்கிறார்கள். சு.சாமிக்குத் தகவல்களையும் ஆதாரங்களையும் கொடுத்து காரியம் சாதிக்கப் பார்க் கிறார்கள்.

''தனியொரு மனிதனாக நின்று, உலகம் சுற்றிவந்து இப்படி அரசியல் பண்ணுகிறீர்களே, உங்களுக்கு எங்கிருந்து நிதி கிடைக்கிறது?'' என்று சு.சாமியிடம் கேட்டபோது, ''நான் பிராமணன்; ஒரு பிராமணன் யாரிடமிருந்து வேண்டுமானாலும் கையேந்தி யாசகம் பெறலாம்; தவறில்லை'' என்று தனது விபச்சாரத் தனத்தைப் பச்சையாகவே கூறினார்சு.சாமி. இருப்பினும், சு.சாமியின் அரசியலதிகாரத் தரகு வேலைகளைக் காட்டி பார்ப்பனசமூகம் பெருமைப்பட்டுக் கொள்கிறது. அன்று சு.சாமியைக் கைது செய்ய ஜெயலலிதா முயற்சித்த வேளையில், அவர் மாறுவேடம் பூண்டு கண்ணாமூச்சி விளையாடிபோது, இந்தத் துணிச்சல் யாருக்கு வரும் என்று பார்ப்பன பத்திரிகைகள் வெகுவாக சிலாகித்து எழுதின.



வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்க்க ஜெயலலிதாவின் முக்கிய தரகனாகச் செயல்பட்ட சு.சாமி, காங்கிரசின் சோனியா உள்ளிட்டு எதிர்த்தரப்பு பிழைப்புவாதத் தலைவர்களை ஒருங்கிணைத்து நடத்திய டீ பார்ட்டி.

சு.சாமியின் கொட்டங்களுக்கு அவர் பார்ப்பனராக இருப்பதும், சட்டம், நீதி, போலீசு, இராணுவம், அதிகாரிகள், ஊடகங்கள் - என அனைத்திலும் பார்ப்பன கும்பல் ஆதிக்கத்தில் இருப்பதும் முக்கிய காரணமாகும். தத்தமது தேவைக்கேற்ப இவரைப் பயன்படுத்திக் கொண்டு ஆதாயமடைவதால், பார்ப்பன கும்பல் இவரை தூக்கிப் பிடிக்கிறது. அதனால்தான் பார்ப்பன ஊடகங்கள் இவருக்கு மதிப்பும் மரியாதையும் அளித்து, இவரைப் பற்றிய செய்திகளை முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் போடுகின்றன. ஒருபுறம் கோமாளி என்றும், ஆதாரமில்லாமல் புளுகுவதாகவும் அவரைக் கிண்டல் செய்தாலும், மறுபுறம் அவரது நடவடிக்கை களுக்கு முக்கியத்துவம் அளித்து, அவரிடம் கருத்துக் கேட்புகளை நடத்துகின்றன.

இன்றைய அரசியல் கட்டமைப்பில் சு.சாமி போன்ற கழிசடைப் பேர்வழிகள் கொட்டமடிக்க முடிகிற தென்றால், அது இந்த கட்டமைப்பின் பலவீனத்தைத் தான் காட்டுகிறது. மேலும், பெரு முதலாளிகள், ஏகாதி பத்தியவாதிகள், கொள்கை வகுப்பாளர்கள் - என அனைத்து அரங்குகளிலும் தொடர்புகளை வைத்துள்ள சு.சாமிக்கு தனது பார்ப்பன பாசிச நோக்கங்களுக்கு ஏற்ப அரசியல் தரகுவேலை செய்வதும், காரியம் சாதிப்பதும் சுலபமாக உள்ளது.

போபர்ஸ் பீரங்கிக் கொள்ளையை மூடிமறைக்க இரகசிய உலகப் பேர்வழிகளுடன் சேர்ந்து போலி ஆவணங்களைத் தயாரித்து போர்ஜரி வேலைகளில் ஈடுபட்ட சு.சாமி.யுடன் பீரங்கித் திருடன் ராஜீவ்.



அரசியலும் சமூகமும் சீரழிந்து கிடப்பதால் இத்தகைய அதிகாரத் தரகர்கள் இன்னமும் ஆட்டம் போடுகின்றனர். இதனால்தான் அழுகிய முட்டையை முகத்தில் அடித்தாலும், அம்மண ஆட்டம் நடத்தி ஜெயாகும்பலால் இழிவுபடுத்தப் பட்டாலும் கூச்சநாச்சமின்றி சு.சாமி போன்ற பேர் வழிகள் இன்னமும் கொட்டமடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், தமிழர் களுக்கு எதிராகப் பேசும் சு.சாமியைத் தமிழகத்தில் நுழைய விடாமல் துரத்தியடிப்பதும், அதனைப் பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான போராட்டமாக முன்னெடுத்துச் செல்வதும்தான் இன்றைய அவசியமாக உள்ளது.

● மனோகரன்

## இடைத்தேர்தல் தோல்விகள்:

# மதவெறியைக் கைவிடுமா பா.ஜ.க.?

**இடைத்தேர்தல் தோல்வி காரணமாக சங்கப் பரிவாரம் மதவெறியைக் கைவிட்டு விடுமா? அல்லது முதலாளித்துவ ஊடகங்கள் சிபாரிசு செய்வதைப் போல வளர்ச்சியைச் சாதிக்கும் பொருட்டு மோடி அவர்களைத் தற்காலிகமாகவேனும் "ஸ்விட்ச் ஆஃப்" செய்து வைப்பாரா? இரண்டும் நடக்கப் போவதில்லை.**

மோடி அலை என்பது ஆளும் வர்க்க ஊடகங்களால் திட்டமிட்டே உருவாக்கப் பட்ட ஒரு மாயைதான் என்பதை சமீபத்திய உ.பி., இராஜஸ்தான், குஜராத் மாநில இடைத்தேர்தல் முடிவுகள் முகத் திலறைந்தாற்போல நிரூபித்திருக்கின்றன. உ.பி. மாநிலத்தில் பதினொரு தொகுதி களில் ஒன்பதில் சமாஜ்வாதி கட்சியும், இராஜஸ்தானில் நான்கில் மூன்று தொகுதி களில் காங்கிரசும், குஜராத்தில் ஒன்பதில் மூன்று தொகுதிகளில் காங்கிரசும் வெற்றி பெற்றிருக்கின்றன.

பா.ஜ.க. நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளைக் காட்டிலும் உ.பி யில் 10%, ராஜஸ்தானில் 11%, குஜராத்தில் 11.5% வாக்குகள் குறைந்திருக் கின்றன. மோடியின் வாரணாசி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ரோகானியா தொகுதியில், நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளைக் காட்டிலும் இரு மடங்கு வாக்குகளை சமாஜ்வாதி பெற்றிருக்கிறது. அதே போல, மோடி வெற்றி பெற்ற குஜராத்தின் வதோதரா தொகுதியிலும் பா.ஜ.க.வின் வாக்குகள் கணிசமாக வீழ்ச்சி அடைந் திருக்கின்றன.

இது மட்டுமல்ல, கடந்த மே மாதம் மோடி பதவியேற்றவுடனேயே உத்தர்கண்டில் நடைபெற்ற இடைத் தேர்தலில் மூன்று தொகுதிகளிலும் காங்கிரசு வெற்றி பெற்றிருக்கிறது. அதனைத் தொடர்ந்து பிகாரில் நடை பெற்ற இரண்டாவது சுற்று இடைத் தேர்தலில் 10-இல் 6 தொகுதிகளை லாலு -நிதிஷ் கூட்டணி கைப்பற்றியிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கு முற்றுரிமை கொண்டாடிய மோடியும் அமித் ஷாவும் அடுக்கடுக்கான இந்த தோல்விகள் ஏன் என்பதற்குப் பதிலளிக்கவில்லை.

உ.பி.யில் இந்து மதவெறியைத் தூண்டுவதன் மூலம் மட்டும் தான் ஓட்டுக்களை அறுவடை செய்ய முடியும் என்ற திட்டத்தின் அடிப்படையில்தான், மதவெறிப் பேச்சுக்குப் புகழ் பெற்ற தாக்கூர் சாதித்தலைவனான யோகி ஆதித்யநாத் தேர்தல் பிரச்சாரத்திற்கு அமித் ஷாவினால் களமிறக்கப்பட்டார். ஆதித்யநாத் தாக்கூர் சாதித்தலை வன் என்பதால், பார்ப்பன-தாக்கூர் சாதிகளுக்கு இடையிலான முரண் பாடு காரணமாக, பத்து சதவீதம் பார்ப்பனர்களின் வாக்குகளை இழந்து விடுவோம் என்று பா.ஜ.க. அஞ்சியது. எனவே, முஸ்லிம் களுக்கு எதிராகப் பார்ப்பனர்களின் சாதி உணர்வைத் தூண்டி விட்டு அவர்களுக்கு ''இந்து மத உணர்வை'' வரவழைத்தது. முஸ்லிம் இளைஞர்கள் பிராமணப் பெண்களைத் திட்டமிட்டே காதலிப்பதா கவும், புரோகித வர்க்கத்தை அழித்துவிட்டால், இந்து மதத்தை வேரோடு அழித்துவிட முடியும் என்ற திட்டத்துடன்தான் முஸ்லிம் அமைப்புகளால் இந்த லவ் ஜிகாத் நடத்தப்படுகிறது என்றும் ''இந்து ஜன் ஜாக்ருதி சமிதி'' என்ற அமைப்பு பிரச்சாரம் செய்தது. எவ்வளவு கீழ்த்த ரமான கிரிமினல் முறை களைக் கையாள்வதற்கும் பாரதிய ஜனதா தயங்காது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே.

உ.பி. மாநிலத்திலுள்ள கோராக்பூரில் கடந்த ஜனவரி மாதம் நடந்த இந்து மதவெறியர்களின் பேரணியில் கலந்து கொண்ட நரேந்திர மோடி மற்றும் யோகி ஆதித்யநாத். (கோப்புப் படம்)



இன்னொருபுறம் பகுஜன் சமாஜ் கட்சி தேர்தலில் போட்டி யிடாததைப் பயன்படுத்திக் கொண்டு, அதன் வாக்கு களைத் தன் பக்கம் இழுப் பதற்கும், மாயாவதியை ஆதரிக்காத தலித் உட்சாதி யினரைக் கவர்வதற்கும் பாரதிய ஜனதா முயற்சி



முசுலீம்களுக்கு எதிராகப் பொய்யும் புனைசுருட்டும் கலந்து ஆர்.எஸ்.எஸ். கும்பலால் பிரச்சாரம் செய்யப்படும் ‘‘லவ் ஜிஹாத்’’ என்ற இந்து மதவெறித் திட்டத்தின் ஒரு பகுதியாக, உ.பி. மாநிலத்தின் முசாஃபர்நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் பஜ்ரங் தள் கும்பல்.

மேற்கொண்டது. அனைத்துக்கும் மேலாக, ‘‘இந்து சமூகத்தைப் பிளவுபடுத்தும் சதியே இட ஒதுக்கீடு’’ என்று கூறி இட ஒதுக்கீடு கொள்கையைத் தீவிரமாக எதிர்த்து வந்த ஆர்.எஸ்.எஸ்.இன் தலைவர் மோகன் பகவத், உ.பி.க்குச் சென்று சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டைத் தாங்கள் ஆதரிப்பதாக வலிந்து அறிவித்தார். இத்தனை தகிடுதத்தங்களுக்குப் பிறகும் உ.பி.யில் பாரதிய ஜனதாவால் வெற்றி பெற முடியவில்லை.

உ.பி. மாநிலத் தோல்வி மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக கடந்த 3 இடைத்தேர்தல்களிலும் வெவ்வேறு வட இந்திய மாநிலங்களில் பாரதிய ஜனதா அடைந்திருக்கும் தோல்விகள் இரண்டு விசயங்களை நிரூபிக்கின்றன. முதலாவதாக, மோடியின் வளர்ச்சிப் பாதை பற்றிய ஊதி உப்பவைக்கப்பட்ட பிம்பத்திற்கு நாடாளுமன்றத் தேர்தலோடு காற்று இறங்கிவிட்டது. இரண்டாவதாக, ரயில் கட்டண உயர்வு, டீசல் விலை உயர்வு உள்ளிட்ட மறுகாலனியாக்க கொள்கை அடிப்படையிலான நடவடிக்கைகள், ‘‘நல்ல காலம் பொறக்குது’’ என்று உடுக்கடித்து வந்த மோடியின் குடுகுடுப்பைக்காரன் வேசத்தையும் கலைத்துவிட்டன. எனவே, தனது மதவெறி முகத்தை மறைத்துக் கொண்டு நல்லாட்சி என்று பேசி ஓட்டு வாங்குவது இயலாத காரியம் என்று ஆகிவிட்டதோடு, கூச்சநாச்சமற்ற கீழ்த்தரமான முறைகளில் மதவெறியைப் பயன்படுத்தித்தான் தேர்தலை எதிர்கொள்ள முடியும் என்பதை பா.ஜ.க. ஒப்புக்கொண்டிருப்பதையும் அதன் இடைத்தேர்தல் பிரச்சாரங்கள் நிரூபிக்கின்றன.

அதே நேரத்தில், மதவெறியையும்கூட வயாக்ராவைப் போலப் பயன்படுத்தி, தேர்தல் நேரத்திலெல்லாம் இந்து எழுச்சியை உருவாக்கிக் கொள்ள முடியாது என்பதையும் இத்தேர்தல் முடிவுகள் நிரூபித்திருக்கின்றன. புறக்கணித்து ஒதுக்கப்பட்டு பரிதாபத்துக்குரிய கிழவனைப் போல, 22 ஆண்டுகளாக கோயிலை எதிர்பார்த்து அயோத்தியில் காத்து நிற்கும் ‘‘குழந்தை இராமன்’’ இதற்கொரு சாட்சியமாக நிற்கிறார்.

இந்த இடைத்தேர்தல் தோல்விகளுக்கு, மோடியின் பிம்பத்தைக் காப்பாற்றுவதில் முனைந்து நிற்கும் கார்ப்பரேட் ஊடகங்களும், துக்ளக் உள்ளிட்ட பார்ப்பன பத்திரிகைகளும் வேறொரு கோணத்தில் பொழிப்புரை எழுதுகின்றன. நாட்டை வளர்ச்சிப் பாதையில் செலுத்துவதற்கு மோடி தீவிரமாக முயன்று கொண்டிருக்கும்போது, மோடிக்குத் தெரியாமலும் மோடிக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் விதத்திலும், உதிரியான சில இந்து அமைப்புகள் மதவெறி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, மோடியின் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் குலைத்து தோல்வியைத் தேடித்தந்து விட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

அதாவது, மதவெறியைத் தூண்டுவதற்கு ஆதித்யநாத்தை இறக்கிவிட்டது மோடிக்கே தெரியாது போலவும், அதற்கு அமித் ஷா மட்டுமே பொறுப்பு போலவும் சித்தரித்து, அமித் ஷாவின் ஞானகுருவான மோடியைத் தோல்விக்கான பொறுப்பிலிருந்து விடுவிக்கின்றனர். ஊழல்களுக்கு சசிகலாவைப் பொறுப்பாக்கிவிட்டு, ஜெயலலிதாவைப் பரிதாபத்துக்குரிய பிணையக் கைதியாகச் சித்தரிக்கும் அதே பார்ப்பனக் குயுக்திதான் இதுவும்.

தோல்விக்கான காரணம் ‘‘தேவையில்லாத’’ மதவெறி நடவடிக்கைகள்தானேயன்றி, ரயில் கட்டண உயர்வு, டீசல் உயர்வு போன்ற ‘‘தேவையான’’ மறுகாலனியாக்க நடவடிக்கைகள் அல்ல என்று கார்ப்பரேட் ஊடகங்கள் ‘‘எங்கப்பன் குதிருக்குள் இல்லை’’ என்ற கதையாக வலிந்து ஆஜராகி விளக்கமளிக்கின்றன. எனவே, மக்கள் அளித்திருக்கும் பேராதரவுக்கு மதிப்பளித்து பா.ஜ.க. வினர் மதவெறியைக் கைவிட வேண்டும் அல்லது மோடி அத்தகைய சக்திகளை அடக்கி வைக்க வேண்டும் என்று இவைகள் பரிந்துரைக்கின்றனர்.

இடைத்தேர்தல் தோல்வி காரணமாக சங்கப் பரிவாரம் மதவெறியைக் கைவிட்டு விடுமா? அல்லது முதலாளித்துவ ஊடகங்கள் சிபாரிசு செய்வதைப் போல வளர்ச்சியைச் சாதிக்கும் பொருட்டு மோடி அவர்களை தற்காலிகமாகவேனும் ‘‘ஸ்விட்ச் ஆஃப்’’ செய்து வைப்பாரா? இரண்டும் நடக்கப் போவதில்லை. ஏனென்றால், இந்து மதவெறி என்பது சங்கப் பரிவாரத்தின் அடிப்படைக் கொள்கையாக இருக்கின்ற அதே நேரத்தில், மோடி அரசின் தனியார்மய, தாராளமயத் தாக்குதல்கள் தோற்றுவிக்கின்ற வெகுசனக் கோபத்தைத் திசைதிருப்பி இந்த அரசைப் பாதுகாக்கும் கவசமாகவும் இருக்கின்றன.

‘‘பத்தாண்டுகளுக்கு மதக்கலவரங்களை நிறுத்தி வையுங்கள்’’ என்று சுதந்திர தின உரையில் விடுக்கப்

பட்ட கோரிக்கையாக இருக்கட்டும், ‘‘இந்திய முஸ்லீம்கள் நாட்டுக்காக உயிரைக் கொடுக்கக் கூடியவர்கள்’’ என்ற மோடியின் பாராட்டாக இருக்கட்டும், இவை மத நல்லிணக்கத்தை விரும்புகின்ற ஒரு இலட்சியவாதியின் குரல் போல ஒலித்தாலும், அந்தச் சொற்களின் பொருள் அதுவல்ல. ‘‘முஸ்லிம் வாக்குகளின் தயவில்லாமல், இந்து வாக்குகளின் துணையோடு தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமர்ந்திருப்பவரான, ‘‘ஹிந்து ஹ்ருதய சாம்ராட்’’ மோடி, வெற்றி அளிக்கக் கூடிய ஆணவம் சிறிதும் இல்லாமல், மதவெறியைத் தமது சுபாவமாகக் கொண்டிருக்கும் முஸ்லிம்களைத் திருந்தி வாழுமாறு பெருந்தன்மையாக கேட்டுக் கொள்கிறார்’’ என்பது தான் மோடி உச்சரித்திருக்கும் சொற்களின் பொருள். ‘‘முஸ்லிம்கள் தங்களது நாட்டுப்பற்றுக்கு இந்து வெறியர்களிடம் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்’’ என்பது அதில் தொக்கி நிற்கும் பொருள். 2002 இனப்படுகொலை என்பது மோடியின் கைமீறி நடந்து விட்ட ஒரு விபத்து, இப்போது செங்கோட்டையில் நின்று பேசும் மோடிதான் உண்மையான மோடி என்ற மயக்கத்தை பா.ஜ.க. எதிர்ப்பாளர்களிடம் விதைப்பதற்காகவும், அமெரிக்காவுக்குப் புனித யாத்திரை செல்லும் தருணத்தில் அதற்குப் பொருத்தமான சர்வதேச அரங்குக்குப் பொருத்தமான, பிம்பத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும் திட்டமிட்டே அரங்கேற்றப்படும் நாடகத்தின் வசனங்களே இவை.

மதவெறி என்ற துருப்புச்சீட்டைப் பொருத்தவரை, குறிப்பிட்ட ஒரு தேர்தலில் அதனைப் பயன்படுத்துவது வேண்டுமா, வேண்டாமா என்று மதிப்பிடுவதில் பா.ஜ.க. தலைவர்களிடையே கருத்து வேறுபாடுகள் வரக்கூடும். அவை செயல் உத்திகள் தொடர்பான கருத்து வேற்றுமைகள் அல்லது பதவி நோக்கத்திலான கோஷ்டித் தகராறுகள் மட்டுமே. பா.ஜ.க.விற்குள் நிலவும் இத்தகைய முரண்பாடுகளைக் காட்டித்தான் வாஜ்பாயி மிதவாதி, அத்வானி தீவிரவாதி என்ற மயக்கம் மக்கள் மத்தியில் திட்டமிட்டே தோற்றுவிக்கப்பட்டது. பதவி நாற்காலிகளில் அமரும் நபர்களுக்கு, மன்னனுக்கு வழங்கப்படும் நடுநிலைச்செங்கோலைப் போல, மிதவாத முகமூடியை பார்ப்பனப் பாசிசக் கும்பலே அணிவித்து விடுகிறது. இன்னொரு புறம், பிரதமர் பதவி எனும் விக்கிரமாதித்தன் நாற்காலி (அல்லது நமது அரசியல் சட்டம்) எப்பேர்ப்பட்ட தீவிரவாதியையும் மிதவாதியாக்கி விடும் என்கிறார்கள் முதலாளித்துவ அறிவுத்துறையினர்.

> தனது மதவெறி முகத்தை மறைத்துக் கொண்டு நல்லாட்சி என்று பேசி ஓட்டு வாங்குவது இயலாத காரியம் என்று ஆகிவிட்டதோடு, கூச்சநாச்சமற்ற கீழ்த்தரமான முறைகளில் மதவெறியைப் பயன்படுத்தித்தான் தேர்தலை எதிர்கொள்ள முடியும் என்பதை பா.ஜ.க. ஒப்புக் கொண்டிருப்பதையும் அதன் இடைத்தேர்தல் பிரச்சாரங்கள் நிரூபிக்கின்றன.

ஆனால், மிதவாத முகமூடி அணிந்த இந்த நபர்கள் எப்போதும் இந்துத்துவ தீவிரவாதத்தை நோக்கிச் செல்வதற்கான படிக்கட்டாகவே இருந்து வருகின்றனர். வாஜ்பாயி ஆட்சியில் குறைந்தபட்ச செயல்திட்டம் என்று கூட்டணிக் கட்சிகள் விதித்த ‘‘கட்டுப்பாடு’’, அணுகுண்டு வெடிப்பையோ, கார்கில் போரையோ, ஸ்டேன்ஸ் பாதிரியார் எரிப்பையோ, குஜராத் படுகொலையையோ, பாடத்திட்ட மாற்றத்தையோ தடுத்து நிறுத்தி விடவில்லை. பாரதிய ஜனதாவின் ஆட்சிக் காலம் ஒவ்வொன்றிலும் அரசியலும் சமூகமும் மென்மேலும் இந்துத்துவமயமாக்கப் படுவதுதான் நடந்தேறியிருக்கிறது. இப்போதும் அதுதான் நடந்து வருகிறது.

தலைநகர் டெல்லியிலுள்ள பிராகதி திடலில் நடந்துவந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கண்காட்சியைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் இந்து மதவெறிக் கும்பல்.



இந்தித் திணிப்பு, சமஸ்கிருத ஆதிக்கம், குரு உத்சவ், பாடத்திட்ட மாற்றம், அதிகார வர்க்கத்தில் சங்கப் பரிவாரத்தினரைத் திணிப்பது என்பன போன்ற காவிமயமாக்க நடவடிக்கைகள் மேலிருந்து அமல்படுத்தப்படுகின்றன. இன்னொருபுறம், பல்வேறு பெயர்களில் நூற்றுக்கணக்கில் உருவாக்கப்படும் இந்துவெறி அமைப்புகள் பசுவதைத் தடுப்பு, விநாயகர் ஊர்வலம் தொடங்கி அன்றாடப் பிரச்சினைகள் பலவற்றிலும் புகுந்து அதன் வழியே மதவெறியைத் தூண்டுகின்றன. அதிகாரத்தில் இந்து பாசிசம் அமர்ந்திருப்பதால், நேரடி

வன்முறை தேவைப்படாமல், வன்முறை குறித்த அச்சுறுத்தல் மூலமாகவே தங்களது அரசியல் - சமூக மேலாதிக்கத்தை இந்து வெறியர்கள் நிலைநாட்டிக் கொள்ள முடிகிறது.

தமிழகத்தில் ஊருக்குப் பத்து விநாயகர் சிலைகள் என்று தொடங்கி இப்போது தெருவுக்குப் பத்து என்ற அளவுக்கு பாசிஸ்டு களின் ''மத உரிமை'' வளர்ந்து விட்டது. இவ்வாறு ஒருமுறை நிலைநாட்டப்படும் பாசிசத்தின் உரிமை, மிக விரைவிலேயே அதன் அதிகாரமாக சமூகரீதியில் நிலை பெற்று விடுகிறது. ''இந்து பகுதி களில் முஸ்லிம்கள் சொத்து வாங்கக் கூடாது, குடியிருக்க கூடாது, இந்து - ஜைன பண்டிகை களின் போது கறிக்கடை திறக்கக் கூடாது'' என்பன போன்ற பாசிச அதிகாரங்கள், அனைவரும் கட்டுப் பட வேண்டிய தொன்று தொட்டு நிலவும் சமூக நியதிகள் போல மாற்றப்பட்டு விடுகின்றன.

> காங்கிரசு படுதோல்வியடைந்திருப்பது மட்டுமல்ல, மாநிலக் கட்சிகள் முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரையிலான அனைவரும் மக்களிடம் மதிப்பிழந்திருப்பதால், மே.வங்கம், கேரளா, தமிழகம், ஒரிசா உள்ளிட்ட மாநிலங்களில் காலூன்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

இவை சில எடுத்துக்காட்டு கள் மட்டுமே. ஆகவே, பாசிசத் தின் தேர்தல் தோல்விகளல்ல, மேற்கூறிய வெற்றிகளே நம் கவனத்துக்குரியவை. ஆர்.எஸ்.எஸ். -க்கு ஒரு நிகழ்ச்சி நிரல் இருக்கிறது. சாத்தியமான ஒவ்வொரு வாய்ப்பையும் பயன் படுத்தி, பார்ப்பன பாசிசக் கும்பல் அதனை முன்தள்ளுகிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

தற்போதைய இடைத் தேர்தல் தோல்வியை வைத்தும், நாடாளுமன்றத் தேர்தலில் வளர்ச்சி, நல்லாட்சி ஆகிய முழக் கங்களை வைத்துத்தான் மோடி வெற்றி பெற முடிந்தது என்பதை வைத்தும், இந்திய சமூகம் தன் இயல்பில் மத நல்லிணக் கத்தையும் பன்மைத்துவத்தையும் அங்கீகரிப்பதாக உள்ளதால்தான், மதவெறியர்கள் வேறு வழியின்றி பின்வாங்க வேண்டியிருக்கிறது என்ற மதிப்பீட்டுக்குச் சிலர் வருகின்றனர். இது இந்துத் துவத்துக்கு எதிரான அரசியல் மெத்தனத்தைத் தோற்று விக்கின்ற தவறான கருத்து. எதார்த்த நிலையை நாம் வேறு விதமாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

நவராத்திரி பண்டிகையின் போது நடைபெறும் கர்பா நடன நிகழ்ச்சிகளில் புகுந்து லவ் ஜிகாத் மூலம் இந்து பெண்களை முஸ்லிம் இளைஞர்கள் கவர்ந்து விடுவதால், இந்த முறை எங்கேயும் முஸ்லிம்களை அனுமதிக்கக் கூடாது என்ற புதிய ''பத்வா'', இந்து மத வெறியர்களால் இப்போது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மிரட்டல்களால் பயந்து போன முஸ்லிம்கள் சிலர் விநாயகர் ஊர்வலம் என்ற காலித்தனத்துக்கு மரியாதை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அடுத்து அவ்வாறு மரியாதை செய்யாத முஸ்லிம்கள் தேசவிரோதிகள் என்று மிரட்டப்படுவார்கள்.

பொதுவிலேயே மக்கள் சமூக கொந்தளிப்பையும், பதற்றத்தையும் விரும்புவதில்லை. கடந்த 25 ஆண்டு களில் பாரதிய ஜனதாவின் பார்ப்பன பாசிச அரசியல் வட இந்தியாவில் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற் படுத்தியிருக்கிறதோ அந்த அளவுக்கு அம்பலப்பட்டும் இருக்கிறது. லவ் ஜிகாத் என்பன போன்ற மிகைப்படுத் தப்பட்ட அவதூறுகள் தற்காலிக தலைப்புச் செய்திகளாக ஒரு பரபரப்பை ஏற்படுத்தினாலும், அதன் தாக்கம் நீடித் திருப்பதில்லை. அவை தேர்தல் துருப்புச் சீட்டுகள் என்பதை மக்கள் தம் அனுபவத்தில் புரிந்து கொண்டு விடு கிறார்கள்.

தமிழகத்தில் விஷக்கிருமி போலப் பரவி வரும் இந்து மதவெறிக் கும்பலின் விநாயகர் ஊர்வலம்.



மேலும், சிறுபான்மை எதிர்ப்பை முதன்மைப்படுத்தி, சாதிகள் கடந்த இந்து உணர்வை உருவாக்க சங்கப் பரிவாரம் எவ் வளவுதான் முயன்றாலும், சமூக வாழ்க் கையில் நிலவும் சாதி ஆதிக்கமும், சாதி களுக்கிடையிலான பாரம்பரிய முரண் பாடுகளும் இந்து உணர்வை அடியறுத்து விடுகின்றன. இந்து மத உணர்வை உருவாக்கி வாக்குகளை அறுவடை செய்ய இயலாத நிலையில், குறுகிய காலப் பயிராக, ஜாட் சாதி உணர்வை முஸ்லிம் எதிர்ப்பு இந்து வெறியாக மாற்றி, வாக்கு

களை அறுவடை செய்யும் குறுக்கு வழி முசாபர்பூரில் அமித் ஷாவால் பயன்படுத்தப் பட்டது. அந்த தந்திரம் இந்த இடைத்தேர்தலில் செல்லுபடியாகவில்லை என்று தெரிந்து விட்டதால், இனி புதியதொரு உத்தியை அவர்கள் கண்டுபிடிப்பார்கள்.




சாதி அடிப்படையில் திரட்டப்பட்ட பிழைப்புவாதக் கட்சிகள் தேர்தலில் பா.ஜ.க.வைத் தோற்கடித்துவிட்டன என்பதில் நாம் மகிழ்வதற்கு ஒன்றுமில்லை. பார்ப்பன பாசிசம் சாதி என்ற நிறுவனத்தையும் உணர்வையும் பராமரிக்கவே விரும்புகிறது. ஏனென்றால், சாதிக்கட்சிகள் மட்டுமல்ல, சாதி உணர்வு என்பதும் தன் இயல்பிலேயே நெறியற்றது. ''கமண்டலை மண்டல் வென்று விடும்'' என்ற 90- களின் சவடால்கள் 90-களின் இறுதியிலேயே வெளுத்துப்போனதையும், தி.மு.க. முதல் பகுஜன் சமாஜ் வரையிலான கட்சிகள் பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்ததையும் நாம் ஏற்கெனவே பார்த்து விட்டோம். பார்ப்பன - பனியா கட்சி என்று ஒதுக்கப்பட்டிருந்த பாரதிய ஜனதாக் கட்சியின் பின்னால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினர் திரண்டு நிற்பதையும், கலவரத்தில் களமிறங்குவதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பார்ப்பன பாசிசம் இப்போது இருப்பதை விடச் சாதகமான சூழலில் முன் எப்போதும் இருந்ததில்லை. காங்கிரசு படுதோல்வியடைந்திருப்பது மட்டுமல்ல, மாநிலக் கட்சிகள் முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரையிலான அனைவரும் மக்களிடம் மதிப்பிழந்திருக்கின்றனர். ஊழல் வழக்குகளில் சிக்காதவரில்லை. கோஷ்டிப் பூசலால் பிளவுபடாத கட்சியும் இல்லை.

சமீபத்திய இடைத்தேர்தலில், மேற்கு வங்கத்தில் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் மார்க்சிஸ்டு கட்சி டெபாசிட்டை இழந்திருக்கிறது. சாரதா சிட்பண்டு ஊழலில் சிக்கியிருக்கும் மம்தாவுக்கு மாற்றாக பா.ஜ.க. மிகவேகமாக மே.வங்கத்தில் பரவி வருகிறது. சாரதா சிட்பண்டு ஊழல் பணமும் மாமிச ஏற்றுமதிப் பணமும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கு சப்ளை செய்யப்படுவதாகக் கூறி வங்கத்தில் இந்து வெறியைப் பரப்புகிறது பாரதிய ஜனதா. கேரளத்தில் அய்யன்காளி பிறந்தநாள் விழாவுக்கு மோடியைச் சிறப்பு விருந்தினராக அழைத்து கவுரவிக்கிறது புலையர் மகாசபா. தமிழகத்தில் இந்தித் திணிப்பு மட்டுமின்றி, ஈழப்பிரச்சினை, மீனவர் பிரச்சினை முதலானவற்றில் காங்கிரசை விடக் கொடிய நச்சுப் பாம்பே மோடி அரசு என்று தெரிந்த பின்னரும், பா.ஜ.க.வை அம்பலப்படுத்தி போராட்டம் நடத்தும் துணிவற்ற கோழைகளாக மட்டுமின்றி ஊராட்சி மன்ற இடைத்தேர்தலில் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவு கொடுத்துப் பல்லிளிக்கும் வீடணர்களாகவும் பா.ம.க., ம.தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகள் கூச்சமே இல்லாமல் தம்மை இனம் காட்டிக் கொண்டிருக்கின்றன.

பார்ப்பன எதிர்ப்பு, திராவிடம், சோசலிசம் போன்ற கொள்கைகளைப் பேசிய கட்சிகள் மக்கள் மத்தியில் மதிப்பிழந்திருப்பது மட்டுமல்ல, கொள்கை என்று பேசுவதே மதிக்கத்தக்கதல்ல என்று கருதும் அரசியலற்ற போக்கும், மறுகாலனியாக்க கொள்கைகளை முன்னேற்றம் என்று மயங்கும் போக்கும் கடந்த 20 ஆண்டுகளில் இளைய தலைமுறையினர் மத்தியில் பரவியிருக்கிறது. இந்த போக்கினை அறுவடை செய்யும் விதத்தில், மோடி ஒரு அரசியல்வாதி இல்லை யென்றும், வளர்ச்சியை மட்டுமே நோக்கமாக கொண்ட செயல்வீரன் என்றும் சித்தரிப்பதில் வெற்றி பெற்ற ஆர்.எஸ்.எஸ். கும்பல், இப்போது மோடி ரசிகர்களை இந்துத்துவத்துக்கு ''மதமாற்றம்'' செய்து வருகிறது. நாடு முழுவதும் ஆர்.எஸ்.எஸ். சாகாக்கள் அதிகரித்து வருகின்றன.

இன்னொருபுறம், மறுகாலனியாக்கத்தால் திணிக்கப்படும் நகரமயமாக்கம், வேர்ப்பிடிப்பு இல்லாமல் மிதக்கும் உதிரி வர்க்கங்களுக்கு, இந்து அடையாளத்தை வழங்கி, தன் பின்னால் திரட்டிக் கொள்வதற்கான வாய்ப்பையும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு வழங்கியிருக்கிறது. தமிழகத்தில் இந்த ஆண்டு கொள்ளை நோய் போலத் திடீரென்று பரவிய விநாயகர் சிலைகளும், அவற்றைச் சுற்றித் திரட்டப்பட்ட கூட்டமும் இதனை மெய்ப்பிக்கின்றன. பொறுக்கித்தின்னும் வாய்ப்புக்காக அலைந்து கொண்டிருந்த எல்லாவிதமான பிழைப்புவாதிகளும் கிரிமினல்களும், ஒரு குங்குமத் தீற்றை நெற்றியில் நெடுக்காக இழுத்து விட்டுக் கொண்டு களத்தில் குதித்திருக்கிறார்கள்.

காற்றில் பரவும் துர்நாற்றத்தைப் போல அரசியலிலும் சமூகத்திலும் வெகு வேகமாகப் பரவி வருகிறது இந்துத்துவம். தடுத்து நிறுத்தாமல் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும், சமூகத்தின் நாசி மெல்ல மெல்ல இந்தத் துர்நாற்றத்தை முகம் சுளிக்காமல் சுவாசிக்கப் பழகுகிறது. உயிருடன் கொளுத்தப்பட்ட முஸ்லிம்களின் பிணவாடையைச் சுவாசிப்பதற்குக் கூட, குஜராத் இந்து சமூகத்தின் நாசி இப்படித்தான் மெல்ல மெல்லப் பழகியிருக்கக் கூடும்.

● சூரியன்

## மோடியின் நூறு நாள் ஆட்சி:

# சவடால்களே சாதனையாக ...!

**முந்தைய காங்கிரசு ஆட்சியின் ஜெராக்ஸ் காப்பிதான் மோடியின் ஆட்சி என்பதை மூடிமறைக்க, அவரது சவடால்களை அறிவார்ந்த கருத்துக்களாக ஊடகங்கள் ஜோடித்துக் காட்டுகின்றன.**

''புதிதாகப் பதவியேற்கும் ஒவ்வொரு அரசுக்கும், அதனை விமர்சனம் செய்வதற்கு நூறு நாள் அவகாசம் கொடுப்பார்கள். ஆனால், தனது அரசுக்கு அப்படிபட்ட தேனிலவுக் காலம் தரப்படவில்லை'' என்றவாறு புலம்பி வந்தார், பிரதமர் நரேந்திர மோடி. இந்நிலையில் அவர் பதவியேற்று நூறு நாட்கள் கழித்து நடந்த உ.பி., இராசஸ்தான், குஜராத் சட்டமன்ற இடைத்தேர்தல்களில் பா.ஜ.க. சந்தித்துள்ள பின்னடைவு, மோடியின் புலம்பலுக்கு மட்டுமல்ல, அவரது வெட்டி ஜம்பத்திற்கும் பதிலடி கொடுப்பதாக அமைந்துவிட்டது.

''இச்சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவுகள் மோடி அரசாங்கத்தின் மீதான தீர்ப்பு அல்ல'' என பா.ஜ.க. வலிந்து நின்று தன்னிலை விளக்கம் அளித்தாலும், உண்மை அவ்வாறு இல்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் பா.ஜ.க., சிவசேனா கட்சிகளிடையே தொகுதிப் பங்கீடு தொடர்பாக இழுபறி நடந்துவரும் நிலையில், அக்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற மேலவை உறுப்பினர் ராம்தாஸ் கதம், ''பா.ஜ.க. தலைவர்கள் தேர்தல் முடிவுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்; உண்மை நிலவரத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்'' எனத் தன்னகங்காரம் கொண்ட பா.ஜ.க. தலைவர்களின் மண்டையில் உறைக்கும்படி பேசியிருக்கிறார். அவரது பேச்சு இத்தேர்தல் முடிவுகள் மோடியின் இமேஜில் ஓட்டை போட்டுவிட்டதைத்தான் எடுத்துக்காட்டுகிறது.

இத்தேர்தல் முடிவுகள் பா.ஜ.க.வைவிட, மோடியின் துதிபாடி வரும் ஊடகங்களைத்தான் வெகுவாகக் கலங்கடித்துவிட்டன. ''மக்கள் எதை எதிர்பார்த்து வாக்களித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து மோடியின் சகாக்கள் செயல்பட வேண்டும்'' என புத்திமதி வழங்கியிருக்கிறது, தமிழ் இந்து நாளிதழ். ''இது பெரிய தோல்வி அல்ல என்று பா.ஜ.க.வினர் பேசுவது, தோல்வியைவிடப் பெரும் பிரச்சினை'' என இடித்துரைக்கிறது துக்ளக் இதழ். கடந்த நூறு நாட்களில் மோடியின் ஒவ்வொரு வெற்றுச் சவடாலையும் அறிவார்ந்த கருத்தாகவும், பாசிச கோமாளித்தனங்களைச் செயலூக்கமிக்க நடவடிக்கைகளாகவும் சித்தரித்துப் பொழிப்புரை எழுதிய ஊடகங்களிடம் இதற்கு அப்பால் நாணயமான பரிசீலனையை எதிர்பார்க்க முடியாது.

''தான் பதவிக்கு வந்த மறுநிமிடமே விலைவாசியைக் கட்டுப்படுத்தி விடுவேன்; ஊழலை ஒழித்துக்கட்டி விடுவேன்; கருப்புப் பணத்தை மீட்டுவிடுவேன்; மக்களுக்கு நல்ல காலத்தைக் கொண்டு வந்துவிடுவேன்'' எனத் தனது தேர்தல் பிரச்சாரம் நெடுகிலும் சவடால் அடித்தவர் மோடி. ஆனால், எந்தவொரு ஊடகமும் அவரது நூறு நாள் ஆட்சியைக் குறைந்தபட்சம் இந்த நான்கு அம்சங்களைக் கொண்டுகூட மதிப்பிட்டு எழுதவில்லை. இவற்றின் அடிப்படையில் மோடியின் ஆட்சியை மதிப்பிடுபவர்களை, கேள்வி எழுப்புவர்களை, ''அவசரக் குடுக்கைகள்'' என்றும், ''மோடியின் வெற்றியை ஜீரணிக்க முடியாதவர்கள்'' என்றும் அவதூறு செய்கிறது, துக்ளக் இதழ் (01.10.2014). ஒருவரது ஆட்சியை மதிப்பிட நூறு நாட்கள் குறைவானது என நடுநிலையாளர்களைப் போலப் பேசும் இவ்வூடகங்கள், இதே நூறு நாட்களில் நடந்த மோடியின் வெளிநாட்டுப் பயணங்கள்,

பூடான் தலைநகர் திம்புவில் நரேந்திர மோடியை வழியனுப்பக் காத்திருந்த மக்கள். ''சீக்கிரம் இடத்தைக் காலிபண்ணுங்க அய்யா'' என்கிறார்களோ?



குறிப்பாக அவரது ஜப்பான் பயணம், அவரது சுதந்திர தின உரை, அவரது ஆசிரியர் தின உரை, அவர் அறிவித்துள்ள ஜன் தன் திட்டம், பாகிஸ்தானுடன் நடைபெற விருந்த பேச்சுவார்த்தையை ரத்து செய்தது, திட்ட கமிசனைக் கலைத்தது என்பவற்றைக் காட்டியே அவரது அரசிற்கு ஒளிவட்டம் கட்டி வருகின்றன.

அரசுமுறைப் பயணமாக வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரதமருக்கு, அரசுத் தலைவருக்கு உள்நாட்டு மக்கள் சாலையோரத்தில் நிற்க வைக்கப்பட்டு, வரவேற்பு அளிப்பது சர்வசாதாரணமாக நடக்கக்கூடிய ஒன்றுதான். இதற்கும் அ.தி.மு.க. அமைச்சர்களை வரவேற்க பள்ளிக்கூட மாணவர்கள் கால்கடுக்க நிற்க வைக்கப்படுவதற்கும் பெருத்த வேறுபாடு கிடையாது. ஆனால், மோடி விசயத்திலோ இது உலக அதிசயமாகக் காட்டப்படுகிறது. ‘‘ஆயிரக்கணக்கான நேபாள மக்கள் சாலையின் இருபுறங்களிலும் நின்று ஒரு தலைவரை வரவேற்றார்கள் என்றால், எந்த அளவுக்கு மோடியின் நேபாளப் பயணம் அவர்கள் மத்தியில் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது’’ எனப் புல்லரித்துப் போய் எழுதுகிறது, தினமணி.

வெளிநாடு செல்லும் தலைவர்கள் அந்நாட்டின் பாரம்பரிய ஆடைகளை அணிந்துகொண்டு போஸ் கொடுப்பது, நடனம் ஆடுவதெல்லாம் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போன ஒன்றுதான். ஆனால், தினகரன் நாளிதழ் இந்த ஊசிப் போன விசயத்தை, ‘‘பள்ளிக் குழந்தைகளோடு குழந்தையாக, ஆசிரியராக, மேள வாத்தியக்காரரோடு வாத்தியக்காரராக... என்று சென்ற இடமெல்லாம் மோடி ஜப்பானிய மக்களோடு ஒருவராக மாறிவிட்டார்’’ என மாய்ந்துபோய் எழுதியிருக்கிறது.

மோடி, பூடான் நாடாளுமன்றத்தில் தப்பும் தவறுமாக ஆற்றிய உரையை, அபாரமானதென்று ஒரு அதிகாரி பாராட்டியவுடனேயே, அப்பாராட்டைத் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிடுமாறு உத்தரவிட்டிருக்கிறார், அவர்.(இந்தியா டுடே, செப்.17) இந்தளவிற்கு சுயதம்பட்டமும் விளம்பர மோகமும் கொண்ட பிரதமரை இந்தியா சந்தித்தது இல்லை. ஊடகங்களோ இந்த விசயத்தில் மோடியின் பி.ஆர்.ஓ. போலவே செயல்படுகின்றன. அவரது சுதந்திர தின உரையை இந்திய சமூகத்தையே புரட்டிப் போடக்கூடிய புரட்சிகரமான சிந்தனையாக ஊடகங்கள் கொண்டாடித் தீர்த்திருப்பதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

பள்ளிகளில் கக்கூசு கட்டுவது தொடங்கி திட்ட கமிசனைக் கலைப்பது வரையில்; இந்தியாவை உலகின் தொழிற்துறை கேந்திரமாக உருவாக்குவது தொடங்கி ஏழை இந்தியர்களுக்கு வங்கிக் கணக்கு திறப்பது வரையில்; பெண்கள் மீதான பாலியல் வன்முறை தொடங்கி பெற்றோர்கள் ஆண் குழந்தைகளைக் கட்டுப்பாட்டோடு வளர்க்க வேண்டிய அவசியம் வரையில் - சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் பேசப்பட்ட அனைத்தும் மோடியின் ஆழ்மனதிலிருந்து வெளிவந்தவை எனப் புகழ்ந்துள்ள ஊடகங்கள், மற்ற பிரதமர்களைப் போல மோடி எழுதி வைத்துக் கொண்டு படிக்கவில்லை எனச் சுட்டிக் காட்டியுள்ளன. நடிகர்கள் யாரும் கையில் பேப்பரை வைத்துக்கொண்டு டயலாக் பேசுவதில்லைதானே!

சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்ட கையோடு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள ஜன் தன் திட்டத்தை ரொம்ப ரொம்பப் புதிய, புதுமையான திட்டம் போல மோடியும் ஊடகங்களும் காட்டுகின்றன. பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்பார்கள். நமது காலத்தின் அசகாயப் புளுகன் மோடியும், அவரது கைத்தடிகளான ஊடகங்களும் இந்தப் பழமொழியை அறிந்திருக்கவில்லை போலும். ஏனென்றால், மோடியின் இந்தத் திட்டம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட ‘‘நிதிசார் உள்ளடக்கத்திற்கான தேசியக் குறிக்கோள்’’ என்ற திட்டத்தின் அப்பட்டமான நகலாகும்.

இதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை ரிசர்வ் வங்கி 2005-ஆம் ஆண்டில் தொடங்கியது. 2008-இல் இக்குறிக்கோள் தொடர்பாக அமைக்கப்பட்ட ரங்கராஜன் கமிட்டி, அடித்தட்டு மக்கள் எளிதான வகையில் வங்கிக் கணக்கு தொடங்குவது தொடர்பாக நான்கு அம்ச திட்டத்தை அறிவித்தது. அதில் வங்கிக் கணக்கு தொடங்கும் அடித்தட்டு மக்களுக்கு வங்கிகள் மூலம் குறுங்கடன்கள் வழங்கவும், காப்பீடு வழங்குவதற்குமான பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன. இத்திட்டம் 2012-இல் சுவாபிமான் என்ற பெயரில் நடைமுறைக்கும் கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டத்தை சந்தை பொருளாதாரத்திற்கு ஏற்றபடி சீர்திருத்துவதற்காக அமைக்கப்பட்ட நாச்சிகேத் மோர் கமிட்டி தனது அறிக்கையை கடந்த ஜனவரி 2014-இல் ரிசர்வ் வங்கியிடம் அளித்தது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் அந்த சுவாபிமான் திட்டம் தான் ஜன் தன் என்ற பெயரில் டப்பிங் செய்யப்பட்டு, இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது.

ஜப்பானில் டி.சி.எஸ். நிறுவனத்தைத் தொடங்கி வைக்கும் விழாவில் ஜப்பானின் பாரம்பரிய மேள வாத்தியமான டாய்கோவைத் தட்டி வித்தை காட்டும் மோடி: ‘‘என்னமா நடிக்கிறான்யா’’!





ஜன் தன் திட்டத்தைத் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு வங்கிக் கடன் அட்டைகளை வழங்கும் பிரதமர் நரேந்திர மோடி.

பொருளாதார வளர்ச்சியின் பலன்களைப் பெற முடியாமல் அடித்தட்டு மக்களை விலக்கிவைக்கும் நிதி தீண்டாமையை ஒழிக்கும் நோக்கில்தான் ஜன் தன் திட்டத்தை (மக்கள் வளம்) அறிமுகப்படுத்தியிருப்பதாகத் தம்பட்டம் அடித்துவருகிறார், மோடி. ஆனால், இத்திட்டம் அரிசிக்கும் மண்ணெண்ணெய்க்கும் சமையல் எரிவாயுவுக்கும் வழங்கப்படும் மானியத்தை நுகர்வோருக்கு நேரடியாகப் பணமாக வழங்க வேண்டும் என்ற உலகவங்கியின் கட்டளையை நிறைவேற்றும் நோக்கத்தைக் கொண்டது. மானியத்தைப் பணமாக வழங்குவதற்கு ரேசன்கார்டு வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பமும் வங்கிக் கணக்கு வைத்திருப்பது அவசியமாகும். இன்று வங்கிக் கணக்கு, நாளை நேரடி மானிய பட்டுவாடா, அதன் பிறகு மானியக் குறைப்பு, ஒழிப்பு என்பதுதான் ஆளுங்கும்பலின் நோக்கம். மன்மோகன் சிங் அரசு, உங்கள் பணம் உங்கள் கையில் என்ற கவர்ச்சிகரமான பெயரில் இதனை நடைமுறைப்படுத்த முயன்றது. அதைத்தான் நிதி தீண்டாமை ஒழிப்பு என்ற பெயர் மாற்றி ரிலீஸ் செய்திருக்கிறார், மோடி.

திட்ட கமிசனை ஒழிப்பது என்ற மோடியின் அறிவிப்பும் கூட அவரது சொந்த சரக்கல்ல. அது பன்னாட்டு ஏகபோக முதலாளிகள் மற்றும் உள்நாட்டு தரகு முதலாளிகளின் விருப்பம். இதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் ஐக்கிய முற்போக்கு ஆட்சியில் தொடங்கப்பட்டதென்றால், முடிவை மோடி அறிவித்திருக்கிறார். திட்ட கமிசனை நேரு உருவாக்கினார் என்பதைத் தாண்டி அதன் மேல் காங்கிரசுக்கு எந்த விதமான மதிப்பும் இருந்தது கிடையாது. நேருவின் பேரனும் முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி திட்ட கமிசனை கோமாளிகளின் கூடாரம் என்று நையாண்டி செய்ததும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் உலக வங்கியின் கையாள் மாண்டேக்சிங் அலுவாலியா திட்ட கமிசனின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதுமே இதற்கு சான்று. தனியார்மய-தாராளமயக் கட்டத்தில் திட்ட கமிசனின் பொருத்தப்பாடு பற்றி ஆராய்வதற்காக அஜய் சிபர் தலைமையில் சுதந்திர மதிப்பீட்டு அலுவலகத்தையும்; திட்ட கமிசனைச் சீர்திருத்தும் பரிந்துரைகளை உருவாக்குவதற்காகத் திட்ட கமிசனின் முன்னாள் உறுப்பினராக அருண் மைரா என்பவர் தலைமையில் கமிட்டி ஒன்றையும் அமைத்திருந்தது, ஐக்கிய முற்போக்கு கூட்டணி.

காங்கிரசு ஆட்சியில் நியமிக்கப்பட்ட அஜய் சிபர், ‘‘திட்ட கமிசனைக் கலைக்க வேண்டும்’’ எனக் குறிப்பிட்டு மோடி அரசிடம் அறிக்கை அளித்திருக்கிறார். மேலும், மோடி பிரதமராகப் பதவியேற்ற சமயத்தில் திட்ட கமிசனைக் கலைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டு, ஐ.நா. மன்றம் மோடி அரசுக்கு அறிவிக்கையொன்றை அளித்திருந்தது. இந்தப் பின்னணியெல்லாம் மறைக்கப்பட்டு, மோடி தனது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் திட்ட கமிசனைக் கலைக்கும் புரட்சிகரமான முடிவை எடுத்தது போல பில்ட்-அப் கொடுக்கப்படுகிறது.

> **திட்டக்கமிசனை ஒழிப்பது என்ற மோடியின் அறிவிப்பும் கூட அவரது சொந்த சரக்கல்ல. அது பன்னாட்டு ஏகபோக முதலாளிகள் மற்றும் உள்நாட்டு தரகு முதலாளிகளின் விருப்பம். இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் மன்மோகன் ஆட்சியில் தொடங்கப்பட்டதென்றால், முடிவை மோடி அறிவித்திருக்கிறார்.**

இந்தியாவிலேயே, தொழிற்சாலைகளால் மாசுபடுத்தப்பட்ட நகரங்களுள் கிட்டதட்ட முதலிடத்தை வகிப்பது குஜராத்திலுள்ள வாபி தொழிற்பேட்டையாகும். இனியும் தாங்காது என்ற நிலையில்தான் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் அத்தொழிற்பேட்டையில் புதிதாகத் தொழிற்சாலைகளை அமைப்பதைத் தடை செய்து உத்தரவு பிறப்பித்தது, சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம். மோடி பிரதமராகப் பதவியேற்றவுடனேயே முதல் காரியமாக இத்தடையுத்தரவைத் திரும்பப் பெறச் செய்தார்.

சுற்றுப்புறச் சூழல் என்பதைக் காட்டி எந்தவொரு பெருந்தொழில் திட்டங்களுக்கும் முட்டுக்கட்டை விழுந்துவிடக் கூடாது என்பதற்காகவே காடுகளை மதிப்பிடுவதற்கான அளவு




திட்ட கமிசனைச் சீர்திருத்துவதற்கான பரிந்துரைகளை வரையறுப்பதற்கு மன்மோகன் சிங் அரசால் நியமிக்கப்பட்ட முன்னாள் திட்ட கமிசன் உறுப்பினர் அருண் மைரா (இடது) மற்றும் திட்ட கமிசனின் பொருத்தப்பாடு பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட சுதந்திர மதிப்பீட்டு அலுவலகத்தின் தலைவர் அஜய் சிபர்

கோல்களை மாற்றியமைத்திருக்கிறது, மோடி அரசு. வன விலங்கு சரணாலயங்களிலிருந்து பத்து கி.மீட்டருக்கு அப்பால்தான் தொழிற்சாலைகள் அமைய வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நீர்த்துப் போகச் செய்யும் வண்ணம், அந்த வரம்பை ஐந்து கி.மீட்டர் எனச் சட்டப்படியே மாற்றிவிட்டது, மோடி அரசு. இப்படிச்சுற்றுப்புறச் சூழலைப் பலியிட்டாவது பொருளாதார வளர்ச்சியைச் சாதிக்க வேண்டும் என்ற வெறி கொண்டு அலையும் மோடி, தனது சுதந்திர தின உரையில் சுற்றுப்புறச் சூழலில் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாமல் தொழில்களை நடத்துமாறு அறைகூவல் விடுத்திருப்பது கடைந்தெடுக்கப்பட்ட பித்தலாட்டத்தனம்.

மோடி குஜராத் முதல்வராக இருந்தபொழுது, தனக்கு நெருக்கமாக இருந்த ஒரு பெண்ணின் நடவடிக்கைகளை உளவுத் துறையை ஏவிக் கண்காணிக்கும் கீழ்த்தரமான வேலையைச் செய்துவந்தார். இதற்கு குஜராத்தின் உள்துறை அமைச்சகமே கேடாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த உளவு வேலை அம்பலமாகி நாறியவுடன், அப்பெண்ணின் தந்தைதான் தனது மகளைக் கண்காணிக்கும்படி கேட்டுக் கொண்டதாக மோசடியான ஆதாரங்கள் உருவாக்கப்பட்டன. இப்படிபட்ட கடந்த காலத்தைக் கொண்டிருக்கும் மோடி, பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுக்கப் பெற்றோர்கள் தங்களது ஆண் மகன்களையும் கண்காணிக்க வேண்டும் எனக் கூசாமல் அறிவுரை சொல்கிறார்.

உ.பி.யில் நடந்த சட்டமன்ற இடைத்தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, லவ்-ஜிகாத் என்ற இந்து மதவெறி பூதத்தை மீண்டும் ஜாடிக்குள்ளிலிருந்து வெளியே எடுத்துவிட்டது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த இந்த மதவெறி பிரச்சாரத்திற்கு பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான ஆதித்யநாத் தலைமை தாங்கினார். இதையெல்லாம் கண்டும் காணாது நடந்துகொண்ட மோடி, சாதி-மத மோதல்களுக்குப் பத்தாண்டு காலம் தடை போட வேண்டும் என யோக்கிய சிகாமணி போல ஊருக்குப் உபதேசிக்கிறார்.

கார்ப்பரேட் முதலாளித்துவ வர்க்கத்தின் விருப்பத்திற்கிணங்க புதிய நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் மோடி, விவசாயிகளின் துயரங்கள் பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கிறார். இப்படிபட்ட மோசடிகளையும் உள்முரண்பாடுகளையும் கொண்டதுதான் மோடியின் சுதந்திர தின உரை. அவரது ஆழ்மனது சூதும் கபடத்தனமும் நிறைந்தது என்பதற்கு இந்த சுதந்திர தின உரை இன்னொரு சான்று.

விலைவாசி உயர்வு, ஊழல், கருப்புப் பணம், தொழில் நசிவு, வேலையில்லாத் திண்டாட்டம் என்பதையெல்லாம் காட்டித்தான் காங்கிரசு ஆட்சியை மக்கள் விரோத ஆட்சியாக முத்திரை குத்தியது, பா.ஜ.க. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மோடியிடம் என்ன பொருளாதாரத் திட்டம், கொள்கை இருக்கிறது? எந்த மேடையிலாவது மாற்றுக்களைப் பற்றி பேசியிருக்கிறாரா அவர்? இப்பிரச்சினைகளுக்கெல்லாம் மூல காரணமான தனியார்மயம்-தாராளமயத்தை இன்னும் தீவிரமாகவும், தடையின்றியும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நல்ல நாட்களை உருவாக்கிவிடலாம் என நம்பச் சொல்கிறார்.

கொள்கையில் மட்டுமல்ல, நடைமுறையிலும் மோடி அரசை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் மறுஅவதாரம் என்றுதான் சொல்ல முடியும். ரயில் கட்டண உயர்வு தொடங்கி காப்பீடு துறையில் அந்நிய முதலீட்டுக்கான வரம்பை அதிகரித்தது வரையில், சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது தொடங்கி ஆதார் அட்டை திட்டம் வரையில்; ஈழம் மற்றும் தமிழக மீனவர் பிரச்சினை தொடங்கி தமிழகத்திற்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயைக் குறைத்தது வரையில் - முந்தைய காங்கிரசு கூட்டணி அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும்தான் மோடி அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. அப்படியென்றால் முந்தைய காங்கிரசு கேடிகளுக்கும் மோடிக்கும் வேறுபாடே இல்லை எனக் கூறிவிட முடியுமா என்ற கேள்வி எழலாம்.

பன்னாட்டு ஏகபோக முதலாளிகளுக்கும், இந்தியத் தரகு முதலாளிகளுக்கும் விரைந்து சேவை செய்வது என்ற நோக்கில் அதிகாரம் முழுவதையும் பிரதமர் அலுவலகத்தில் குவித்துக் கொண்டிருப்பது; எட்டு சதவீத பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகருவதற்காக அதிகாரமிக்க அமைச்சர்கள் குழுக்களையும் திட்ட கமிசனையும் அடுத்தடுத்து கலைத்தது, ஜப்பான் முதலீடுகளை விரைந்து அனுமதிக்க தனிச் சாளரம் திறப்பது, மூலதனத்தின் கட்டுப்பாடற்ற கொள்ளைக்காகச் சுற்றுப்புறச் சூழல் சட்டங்களையும் தொழிலாளர் நலச் சட்டங்களையும் திருத்த முனைந்திருப்பது என்றவாறு வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், இந்த வேறுபாடுகள் விலைவாசி உயர்வாலும் விவசாய நசிவாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தாலும் புழுங்கிக் கொண்டிருக்கும் மக்களின் வாழ்க்கையில் எந்தவிதமான நல்ல காலத்தையும் கொண்டுவந்து விடாது.

● குப்பன்

## பா.ஜ.க. எம்.பி.யின் தமிழ்க்காதல்:

# பார்ப்பன பாசிசத்தின் கபடநாடகம்!

**சமஸ்கிருதம்தான் தேசிய உணர்வின் அடிப்படை என்று கூறும் தருண் விஜய் என்ற பா.ஜ.க. எம்.பி. இன்னொருபுறம் தமிழ் ஆர்வலர் போலத் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறார். இதன் நோக்கமென்ன?**

மத்திய அரசு நிறுவனங்களின் சமூக வலைத்தளங்களில் இந்தி, சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் சமஸ்கிருத வார கொண்டாட்டம், ஆசிரியர் தினத்தை குரு உத்சவ் ஆக மாற்றுதல், பல்கலைக்கழகங்களில் இந்தித் திணிப்பு ... என்று மோடி அரசின் இந்துத்துவ வெறி நடவடிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக அமலாகிக் கொண்டிருக்கும் சூழலில், உத்தர்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த தருண் விஜய் என்ற பாரதிய ஜனதாக் கட்சி எம்.பி, தமிழின் மேன்மை பற்றி பொளந்து கட்டி வருகிறார்.

‘‘வட மாநிலங்களில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழை விருப்பப் பாடமாக்கி, தமிழ் படிக்க முன்வரும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்க வேண்டும். அரசு அலுவலகங்களில் பணிபுரிகிறவர்களும் தமிழ் மொழியைக் கற்க ஊக்கப்படுத்த வேண்டும். நாட்டின் இரண்டாவது தேசிய மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும்!’’ இவையெல்லாம் சென்ற ஆண்டு (மன்மோகன் ஆட்சியில்) மாநிலங்களவையில் தருண் விஜய் பேசியவை.

உடனே அவரைப் பாராட்டி ஆனந்த விகடனில் (2, அக். 2013) ஒரு பேட்டி வெளியானது. ‘‘இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற மாநிலம்- என்று மட்டும்தான் தமிழ்நாட்டைப் பற்றி வட இந்தியப் பள்ளிகளில் கற்றுக்கொடுக்கிறார்கள். இந்த வெறுப்பின் காரணமாகவோ என்னவோ... தமிழ்நாட்டின் சரித்திரப் பெருமைகளைப் பற்றியும், இலக்கிய வளங்களைப் பற்றியும் வடக்கில் இருக்கும் நாங்கள் தெரிந்துகொள்ளாமல் அறியாமை இருட்டிலேயே இருந்து விட்டோம்!’’ என்று அதில் உருக்கமாகப் பேசுகிறார் தருண் விஜய்.

ஆனால், மேற்படி யோக்கியர் தற்போதைய மோடி அரசின் இந்தி, சமஸ்கிருத திணிப்பு நடவடிக்கைகள் குறித்து ஒரு வார்த்தை பேசவில்லை. இருந்தபோதிலும், ‘‘தமிழுக்குக் கொடி பிடித்த பஞ்சாபி’’ என்ற தலைப்பில் ஜு.வி.-யில் மறுபடியும் ஒரு பேட்டி; ‘‘நானும் தமிழைக் காதலிக்கிறேன்’’ என்று தமிழ் இந்து நாளேட்டில் இன்னொரு பேட்டி.

‘‘திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாட வேண்டும். சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றி வட இந்திய மாணவர்களுக்கு கற்றுத் தர வேண்டும். சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை அறிவிக்க வேண்டும். ஒரு வட இந்திய மொழி மேலாதிக்கம் செய்து அரசு இயந்திரத்தை கட்டுப்படுத்தக் கூடாது’’ என்று இந்தப் பேட்டிகளில் சரம் சரமாக அடித்து விடுகிறார் தருண் விஜய். ‘‘இதையெல்லாம் மோடியிடமும் ராஜ்நாத் சிங்கிடமும் சொன்னீர்களா?’’ என்று யாரும் கேட்கவில்லை.

இப்பேட்டிகள் வெளியானதைத் தொடர்ந்து தருண் விஜய்க்கு கருணாநிதி, வைகோ, ராமதாசு போன்றோரின் பாராட்டுகள்! மறுபடியும் ஊடக விளம்பரம். மேற்படி தமிழர் தலைவர்களும் இந்தக் கேள்விகளை எழுப்பவில்லை என்பதுதான் தமிழகத்தின் தனிச் சிறப்பு! இன அழிப்பை நடத்தி வரும் ராஜபக்சே, அதிகாரப் பரவல், முன்னேற்றம் பற்றி அளந்து விடுவதைப் போன்றதுதான் தருண் விஜயின் பேச்சு.

இந்தி படிக்கும் அரசு ஊழியர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் ஊக்கத் தொகை தருகிறது மோடி அரசு. தமிழ் படிக்கும் வட இந்திய மாணவர்களுக்கு ஊக்கத்தொகை தரவேண்டும் என்று தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்குத் தைரியமாகப் பேட்டி கொடுக்கிறார் அவருடைய கட்சி எம்.பி. தமிழக அரசியல்வாதிகளின் பிழைப்புவாதத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை !

உண்மை நிலை என்ன? வட இந்தியப் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலானவற்றில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்த தமிழ்த் துறைகளே இழுத்து மூடப்படும் நிலையில் உள்ளன. ஆக்ரா, மீரட், கான்பூர், அலகாபாத், பாட்டியாலா, சண்டிகர் உள்ளிட்ட பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் இத்துறைகள் மூடப்பட்டுவிட்டன. காசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் 1945-இல் தொடங்கப்பட்ட தமிழ்த்துறையில், இரு பேராசிரியர்கள் பணியிடங்களும் காலியாக உள்ளன. இதற்குக் காரணம் தமிழ்மொழியின் மீது இருக்கும் காழ்ப்புணர்ச்சி என்கிறார் அப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் அருண் பாரதி. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை நிதி அளித்த போதிலும், காசியின் சம்பூர்ணானந்தா சமஸ்கிருதப் பல்கலைக் கழகம் மற்றும் காசி வித்யா பீடத்தில் தமிழுக்காக பேராசிரியர்கள் அமர்த்தப்படவில்லை. கவுகாத்தி, அலி

ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்த பார்ப்பனக் குள்ள நரி தருண் விஜய்.



கார், கொல்கத்தா, லக்னோ உள்ளிட்ட எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இதுதான் தமிழ்த் துறையின் நிலை.

இவையெல்லாம் தருண் விஜய்க்கு தெரியாத உண்மைகள் அல்ல. இந்து - இந்தி - இந்தியா என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய உணர்ச்சிதான் தமிழுக்கு எதிராக நிலவும் இந்த விசேட காழ்ப்புணர்வுக்கு காரணம். இந்த உணர்வு பொதுவாக பெரும்பாலான வட இந்தியக் கட்சியினர் மத்தியிலும் நிலவுகிறது என்ற போதிலும், சமஸ்கிருத-இந்தி ஆதிக்க வெறி என்ற பார்ப்பன பாசிச அரசியல், ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கே உரியது.

ஆர்.எஸ்.எஸ்.-இன் பத்திரிகையான ‘‘பாஞ்சஜன்ய’’வின் ஆசிரியராக 20 ஆண்டுகள் பணியாற்றியவர்தான் தருண் விஜய். இவர் ஆர்.எஸ்.எஸ்.-இன் சிந்தனைக் குழாமான சியாமாபிரசாத் முகர்ஜி ஆய்வு மையத்தின் இயக்குநர். தொகாடியாவின் வெறிப் பேச்சையே நாசூக்கான நாகரிகமான மொழியில் பேசத் தெரிந்த வித்தகர். இந்து தேசிய அரசியலைத் தீவிரமாகக் கொண்டு செல்லும் நோக்கத்துக்காகவே ஆர்.எஸ்.எஸ். தலைமையால் பாரதிய ஜனதாவின் மாநிலங்களவை உறுப்பினராகவும் ஆக்கப்பட்டிருப்பவர்.

> ‘‘புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகச் சித்தரித்து விழுங்க முயன்றதைப் போலவே, வள்ளுவரையும் ஒரு ரிஷி ஆக்கி, நிறுவனமயப்படுத்துவதுதான் தருண் விஜயின் நோக்கம். தன்னை எதிர்த்து நின்ற பழங்குடிகளையும், மொழிகளையும் நசுக்கி அழித்தது மட்டுமல்ல, அரவணைத்தும் அழித்திருக்கிறது பார்ப்பனியம் என்பதே வரலாறு.’’

இங்ஙனம் பார்ப்பனப் பாசிசக் கும்பலின் மூளையாக முன்நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு நபர் தமிழுக்கு ஆதரவாக வலிந்து பேசுவதற்கு காரணம் என்ன? தமிழின் தனித்துவத்தையும் தமிழகத்தின் வரலாற்றையும் பற்றி இதற்கு முன் எதுவுமே தெரியாதது போலவும், இப்போதுதான் தெரிந்து கொண்டது போலவும் அவர் நடத்தும் இந்த நயவஞ்சக நாடகத்தை ஊடகங்களும் கடைவிரிக்கக் காரணம் என்ன? மோடி அரசின் சமஸ்கிருத / இந்தி திணிப்பு தோற்றுவிக்கும் எதிர்ப்புணர்வை மழுங்கச் செய்வதும், தமிழையும் தமிழ் மரபையும் பார்ப்பனியத்தின் நோக்கத்திற்கேற்ப திசைதிருப்பி நிறுவனமயமாக்கிக் கொள்வதும்தான் இதன் நோக்கம்.

சமஸ்கிருதத்திலிருந்து வேறுபட்ட, சுயேச்சையான, தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற, மக்கள் மத்தியில் உயிர்ப்புடன் வாழ்கின்ற திராவிட மொழி என்ற பெருமையைப் பெற்றது தமிழ். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பார்ப்பனக் கும்பலால் கிட்டத்தட்ட கொன்று புதைக்கப்பட்டிருந்த தமிழை மீண்டும் உயிர்ப்பித்து, அதன் பெருமையை உலகறியச் செய்தவர் கால்டுவெல். ஆரிய - சமஸ்கிருதச் சதியை அம்பலமாக்கியது மட்டுமின்றி, தமிழின் சுயேச்சையான திராவிட மரபை எடுத்துக் காட்டிய காரணத்தினாலேயே, கால்டுவெல்லைக் கயவன் என்று தூற்றுபவர்கள் இந்துத்துவவாதிகள்.

தருண் விஜய், சென்ற ஆண்டு மாநிலங்களவையில் தமிழ்த்துதி பாடிய அதே மாதத்தில், சமஸ்கிருதத்தை காங்கிரசு அரசு அழித்து வருவதாக குற்றம் சாட்டி பற்றி டைம்ஸ் ஆப் இந்தியாவில் அவர் எழுதிய கட்டுரையில் காணப்படும் வரிகள் இவை.

‘‘சமஸ்கிருதத்தை நீக்கினால் இந்திய தேசிய உணர்வே அழிந்துவிடும்... பிறப்பு முதல் இறப்பு வரை, குழந்தைக்குப் பெயர் வைப்பது, திருமணம் ஆகிய வற்றில் தொடங்கி, மரணத்துக்குப் பின் சொர்க்கத்திற்கு நுழைவுச் சீட்டு பெறுவது வரையிலான அனைத்துக்கும் சமஸ்கிருதம் தேவை. சமஸ்கிருதம்தான் இந்தியா. இந்தியாவை ஒருங்கிணைக்கும் சக்தி அதுதான். உயர் பதவிகளையும், சமூக அந்தஸ்தையும் பெறுவதற்கு சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்ற நிலை முன்னொரு காலத்தில் நிலவியதே, அதனை மீண்டும் நாம் உருவாக்க வேண்டும்.’’ (டைம்ஸ் ஆப் இந்தியா, ஆக-23, 2013)

தருண் விஜய் கூறுகின்ற அந்த நிலைமைதான் பார்ப்பனக் கொடுங்கோன்மை. அதனை எதிர்த்துப் போராடியதன் மூலம்தான் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்கள் கல்வி பெற முடிந்தது. தங்களுடைய பழைய பொற்காலத்தை புதிய நிலைமைகளுக்கு ஏற்ப மீட்டுருவாக்கம் செய்து கொள்வதுதான் இந்துத்துவ சக்திகளின் நோக்கம்.

‘‘வேத-உபநிடதம் மட்டுமின்றி திருக்குறளும் படிக்க வேண்டும்’’ என்று தருண் விஜய் தனது பேட்டியில் குறிப்பிடுகிறார். பார்ப்பனியத்தை எதிர்த்த புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகச் சித்தரித்து விழுங்க முயன்றதைப் போலவே, வள்ளுவரையும் ஒரு ரிஷி ஆக்கி, திருக்குறளை தர்ம சாத்திரப் பட்டியலில் சேர்த்து நிறுவனமயப் படுத்துவதுதான் இதன் நோக்கம். தன்னை எதிர்த்து நின்ற பழங்குடிகளையும், மொழிகளையும், இனங்களையும் நசுக்கி அழித்தது மட்டுமல்ல, அரவணைத்தும் அழித்திருக்கிறது பார்ப்பனியம் என்பதே வரலாறு. அத்தகைய அரவணைப்புதான் தருண் விஜயின் தற்போதைய தமிழ்க் காதல்.

தமிழகத்தை மட்டுமல்ல, பாரதிய ஜனதாக் கட்சி கால்பதிக்க முடியாத வட கிழக்கிந்திய மாநிலங்களையும் வழிக்கு கொண்டுவரும் பொறுப்பு தருண் விஜய்க்கு தரப்பட்டிருக்கிறது என்பது அவரது வலைத் தளத்தைப் பார்க்கும்போது தெரிகிறது.

● அஜித்

## விசாரணைக் கைதிகள் விடுதலை:

# இது நீதித்துறையின் புரட்சியா?

**இலட்சக்கணக்கான நிரபராதிகள் தண்டிக்கப் படுவதற்குக் காரணமே நீதிபதிகள்தான். நிரபராதிகளான ஏழைகளை வதைத்து கோடிக் கணக்கில் பணம் பறிக்கும் கொள்ளைக்கூட்டமாகவே போலீசும் நீதித்துறையும் இயங்குகின்றன.**

**சி**றையிடப்பட்டுள்ள ஒரு விசாரணைக் கைதி, அவர் செய்துள்ளதாகக் கூறப்படும் குற்றங்களுக்கு சட்டப் புத்தகத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தில் பாதியளவுக் காலத்துக்கும் மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந் தால், அத்தகையோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென கடந்த செப்டம்பர் மாதத்தில் உச்சநீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது. இதன்படி தமிழகத்தில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்படும் சிறு குற்றவழக்கு களில் கைதாகி சிறையிடப்பட்டுள்ள ஏறத் தாழ 3,000 விசாரணைக் கைதிகள் உள்ளிட்டு, நாடெங்கும் ஒரு இலட்சத் துக்கும் மேலான விசாரணைக் கைதிகள் அக்டோபருக்குள் விடுதலை செய்யப்படு வார்கள் என்றும், இது இந்திய நீதித்துறை ஓசையின்றி செய்துள்ள புரட்சி என்றும் ஊடகங்கள் பெருமையுடன் குறிப்பிடு கின்றன.

விசாரணைக் கைதிகள் என்பவர்கள் யார்? அவர்கள் சட்டப் புத்தகங்களின்படி குற்றவாளிகள் அல்லர்; குற்றம் சாட்டப் பட்டவர்கள். அதாவது, குற்றம் புரிந்ததாக அளிக்கப்படும் புகார் அல்லது தகவலின் அடிப்படையில் போலீசாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்கள்.

ஏறத்தாழ 3.23 இலட்சம் பேரை அடைத்து வைக்குமளவுக்குத்தான் நாட்டிலுள்ள 1382 சிறைச்சாலைகளில் இடவசதி உள்ளிட்டவை உள்ளன. இருப் பினும், தற்போது இச்சிறைச்சாலைகளில் அளவுக்கதிகமாக - ஏறத்தாழ 3.81 இலட்சம் பேர் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய குற்ற வியல் ஆணையம் கூறுகிறது. இவர்களில் 2.54 இலட்சம் பேர் - அதாவது, சிறைக் கைதிகளில் மூன்றில் ஒரு பங்கினர் விசாரணைக் கைதிகளாவர். இந்த அளவுக்கு விசாரணைக் கைதிகளால் இந்தியச் சிறைச்சாலைகள் நிரம்பி வழி வதற்குக் காரணம் என்ன?

இன்றைய அரசியலமைப்பு முறையில் போலீசார் எந்தவொரு குடிமகனையும் பிடித்து பொய்வழக்கைச் சோடித்து சிறையிலடைக்க முடியும். குற்றவியல் சட்டப்படி போலீசுக்கு தண்டிக்கும் அதிகாரம் கிடையாது என்று கூறப்பட்டாலும், யாரையும் பிடித்து சிறையில் தள்ளுவதற்கான வாய்ப்பும் அதிகாரமும் அவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. குற்றங்களை விரைந்து தடுப்பதாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் நோக்கத்துடன் போலீசார் பல்வேறு சிறு குற்ற வழக்கு களில் அப்பாவிகளைப் பிடித்து வருவதென்பதும், தங்களது பதவி உயர்வுக்காகவும், சம்பளம்-சலுகைகளுக்காகவும், மிரட்டிப் பணம் பறிப்பதற்காகவும் இப்படி பல பொய்வழக்குகளைச் சோடிப்பதென் பதும் போலீசாரின் வாடிக்கையாகவே உள்ளது. இவையெல்லாம் நீதிபதிகளுக்குத் தெரியாத இரகசியமல்ல.

உதாரணமாக, ஒரு சிறு திருட்டுக் குற்றத்திற்கு அதிகபட்சத் தண்டனையாக மூன்றாண்டு சிறை என சட்டம் பரிந்துரைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். பல நேரங்களில் ஒரு விசாரணைக் கைதியின் மீதான குற்றத்தை நிரூபிப்பதற்கான ஆதாரங்களைத் திரட்டு வதாகக் கூறிக் கொண்டு போலீசார் இழுத்தடிப்பதாலும், நீதிபதிகள் வழக்கு விசாரணையைத் தள்ளிப்போட்டு அலட்சியப்படுத்துவ தாலும் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனைக் காலத்துக்கும் மேலாக - நான்கு அல்லது ஐந்தாண்டுகளுக்குச் சிறையில் வதைபடுகின்றனர். அதேசமயம், அரசியல் பலமும் சாதிய பலமும் குண்டர் பலமும் கொண்ட மேட்டுக்குடியினரும் தொழில்முறை கிரிமினல்களும், சமூகத் தொடர்புள்ளவர்களும் விரைவில் பிணையில் வெளியேவர முடிகிறது. அல்லது சிறையிலேயே அவர்கள் அனைத்து வசதி களோடு பாதுகாப்பாக ஓய்வெடுக்கின்றனர். இத்தகைய பலம் ஏது மில்லாத சாமானிய மக்கள்தான் பிணை கிடைக்காமல் தொடர்ந்து விசாரணைக் கைதிகளாகச் சிறையில் வதைபடுவதோடு, சட்ட விரோதமாக நீதிபதிகள் வீடுகளில் எடுபிடி வேலைகளைச் செய்யு மாறு பயன்படுத்தப்படுகிறார்கள்.

குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் இந்த வழக்கைச் சீர்குலைப்பார், சாட்சிகளைக் கலைப்பார் என்ற நியாயமான அச்சம் நீதிபதிக்கு ஏற் பட்டால், அவர் ஒரு விசாரணைக் கைதியை நீதிமன்றக் காவலில் வைக்கலாம் என்று சட்டம் கூறுகிறது. ஆனால் இப்படி எந்த அச்

சத்தையும் தெரிவிக்காமல், போலீசார் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொண்டு, ஒரு விசாரணைக் கைதியை 15 நாட்களுக்கு நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதிகள் உடனடியாக உத்தரவிடுகின்றனர். தாங்கள் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று ஒருவர் நீதிமன்றத்தில் கதறியழுதாலும், அது நீதிபதிகளின் காதுகளில் விழுவதில்லை. சுருக்கமாகச் சொன்னால், போலீசு நிலையத்தின் விரிவாக்கப்பட்ட நிலையமாகவே கீழமை நீதிமன்றங்கள் இயங்குகின்றன.

இப்படி இலட்சக்கணக்கான நிரபராதிகள் தண்டிக்கப்படுவதற்குக் காரணமே நீதிபதிகள்தான். பலரது வாழ்க்கையும், பல குடும்பங்களும் நாசமாக்கப்பட்டதற்கு இந்நீதிபதிகள்தான் காரணம். குற்றம் சாட்டி சிறையில் அடைக்கப்பட்டவர் மீது 90 நாட்களுக்குள் போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும், இல்லையேல், அந்த விசாரணைக் கைதியை நீதிமன்றம் பிணையில் விடுவிக்க வேண்டுமென சட்டம் கூறினாலும், ஆண்டுக்கணக்கில் சிறையில் விசாரணைக் கைதிகள் வதைபடுவதற்குக் காரணமே நீதிபதிகள்தான்.



"சிறைச்சாலைகளில் அளவுக்கதிகமாக ஏறத்தாழ 3.81 இலட்சம் பேர் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய குற்றவியல் ஆணையம் கூறுகிறது. இவர்களில் 2.54 இலட்சம் பேர் – அதாவது, சிறைக்கைதிகளில் மூன்றில் ஒரு பங்கினர் விசாரணைக் கைதிகளாவர்."

கடந்த மார்ச் 24 அன்று புழல் சிறையில் 200-க்கும் மேற்பட்ட விசாரணைக் கைதிகள், போலீசார் தங்கள் மீது போட்டுள்ள பொய்வழக்குகளை ரத்து செய்ய வேண்டுமென்றும், நீதிமன்றத்துக்கு கோடை விடுமுறை அளிக்கப்படுவதற்கு முன்பாக தங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விரைந்து விசாரணை செய்து முடிக்கக் கோரியும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். கோடைவிடுமுறையைக் கழிக்க குடும்பத்தோடு உல்லாசமாகக் கிளம்பும் நீதிபதிகள், இக்காலத்தில் தேவையில்லாமல் அப்பாவிகள் சிறையில் விசாரணைக் கைதிகளாக வதைபடுவது அவர்களை உறுத்தவில்லையா? அல்லது போலீசார் சோடித்திருப்பது பொய்வழக்கு என்பது அவர்களுக்குத் தெரியாதா? இந்த அநீதியைத் தெரிந்தே செயல்படுத்திய முதன்மைக் குற்றவாளிகளான இந்நீதிபதிகளுக்கு என்ன தண்டனை? பொய்வழக்கு போட்டு சாமானியர்களை வதைக்கும் போலீசுக்கு என்ன தண்டனை? மாதமொருமுறை கீழமை நீதிமன்ற நீதிபதிகள், வழக்குரைஞர்களுடன் சிறைச்சாலைக்கு நேரில் வந்து சிறைக்கைதிகளிடம் விசாரணை நடத்தி, நிலைமைகளைப் பரிசீலித்து அறிக்கை தரவேண்டுமென விதிகள் இருந்தபோதிலும், அவற்றை அவர்கள் தெரிந்தே புறக்கணித்து அலட்சியப்படுத்துவது எந்த வகையில் நியாயமானது?

ஒருவரைப் பொய்வழக்கில் போலீசு பிடித்துச் செல்வதும், பின்னர் கைதானவரை விடுவிக்க அவரது உறவினர்களும் நண்பர்களும் வழக்குரைஞர்களை ஏற்பாடு செய்வதும், அதன் பிறகு நீதிபதிகள் விசாரணை நாடகமாடி குற்றத்தை ஒப்புக்கொள்ளவைத்து அந்த நிரபராதியை பிணையில் விடுவிப்பதும்தான் போலீசு மற்றும் நீதித்துறையின் அன்றாட நடைமுறையாக இருக்கிறது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூட போலீசு ஆட்சேபிக்காவிட்டால்தான் ஒருவருக்குப் பிணை வழங்கிறார்கள். ஒரே நாளில் பல வழக்குகளில் பொய் சாட்சி கூறுவதற்காகவே சிலரை போலீசார் உருவாக்கி வைத்திருப்பதை தங்கள் கண்ணெதிரே கண்ட போதிலும், நீதிபதிகள் இதை எதிர்த்து வாய்திறப்பதில்லை. இது நீதித்துறைக்கும் போலீசுத்துறைக்குமிடையிலான எழுதப்படாத உடன்பாடாக நீடிக்கிறது. பொய்வழக்கு போடுவதைத் தங்களது உரிமையாக போலீசு செயல்படுத்தி வருவதை கண்டுகொள்ளாமல், அதனை அங்கீகரிப்பது நீதிபதிகள்தான்.

இப்படி நிரபராதிகளான ஏழைகளை வதைத்துக் கோடிக்கணக்கில் பணம் பறிக்கும் கொள்ளைக் கூட்டமாகவே போலீசும் நீதித்துறையும் இயங்குகின்றன. இந்தத்தொழில்தான் அவர்களை வாழ வைக்கிறது. இந்த கூட்டுக் களவாணிகளின் வலைப்பின்னல்தான் சமூகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. எந்தப் பொய் வழக்கிலாவது தங்களைப் போலீசார் சிக்கவைத்து விடுவார்களோ என்று நாளும் அச்சத்துடன்தான்

சாமானிய மக்கள் வாழவேண்டியிருக்கிறது.

இந்தியச் சிறைச்சாலைகளில் கைதிகள் நிரம்பி வழிவதையும், அதனால் அடிப்படை வசதிகளின்றி நோய்வாய்ப்பட்டு கைதிகள் மரணமடைவதையும் பற்றி 1979-இல் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி எச்.ஆர். கன்னா தலைமையில் ஆய்வு செய்யப்பட்டு, அப்போதைய சட்ட அமைச்சரிடம் அறிக்கையும் பரிந்துரைகளும் அளிக்கப்பட்டன. ஆனாலும் அவை கிடப்பில் போடப்பட்டன. பின்னர் 1996-இல் உச்சநீதிமன்ற நீதிபதிகள் குழு, விசாரணைக் கைதிகளை விரைவில் விடுதலை செய்ய 9 கட்டளைகளைப் பிறப்பித்தார்கள். அதன்பின்னர், 2005 -இல் இந்தியக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிணை வழங்கும் பகுதியில் 436-ஏ என்ற புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இதன்படி, குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் உள்ள ஒரு விசாரணைக் கைதி, அந்தக் குற்றத்திற்கான சிறைத் தண்டனையில் பாதிக் காலத்தை சிறையில் கழித்து விட்டால், அவரை சொந்தப் பிணையில் விடுதலை செய்யலாம் என்று கூறப்பட்டது. இருப்பினும், இந்தச் சட்டப்பிரிவு நடைமுறைப்படுத்தப்படாமல் நீதிபதிகளாலேயே புறக்கணிக்கப்பட்டது. இப்போது மீண்டும் சிறைச்சாலைகள் நிரம்பி வழிந்து பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளதாலேயே, இந்தச் சட்டப் பிரிவை நினைவுபடுத்தி விசாரணைக் கைதிகளை விடுதலை செய்யும் உத்தரவை அவசரமாகப் பிறப்பித்துள்ளது உச்ச நீதிமன்றம்.

இறுதியில், விசாரணைக் கைதிகளான நிரபராதிகள் குற்றவாளிகளாகிவிட்டார்கள்! நிரபராதிகளைக் குற்றவாளிகளாக்கும் அயோக்கியத்தனத்தைச் செய்யும் முதன்மைக் குற்றவாளிகளான நீதிபதிகள் கருணாமூர்த்திகளாகிவிட்டார்கள்! இது தான் முதலாளித்துவ ஊடகங்களால் சித்தரிக்கப்படும் நீதித்துறையின் புரட்சி!

• குமார்




காசநோயால் பாதிக்கப்பட்டு உருக்கலைந்து போயுள்ள ஒரு ஏழைச் சிறுவன்.

# இந்தியக் குழந்தைகள் எதிர்கொள்ளும் அபாயம்!

நோயிலும் அது தொடர்பான சிகிச்சையிலும் வர்க்க வேறுபாடு காட்டப்படுகிறது எனக் கூறினால், நீங்கள் அதிர்ச்சியடையலாம். ஆனால், அதுதான் உண்மை. சர்க்கரை நோய், இதய நோய் போன்ற தொற்று வகையில்லாத நோய்களின் மீதும், அதனின் சிகிச்சை மீதும் குவிக்கப்படும் கவனம், ஏழை மக்களை எளிதாகத் தாக்கும் தொற்று நோய்கள் மீது குவிக்கப்படுவதில்லை. இந்தியாவில் சர்க்கரை நோய் வெகுவாகப் பரவி வருகிறது என்ற செய்தியை அறிந்திருக்கும் பலரும் காசநோயின் தலைநகரம் எனக் குறிப்பிடும் அளவிற்கு உலகிலேயே அந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மற்றும் இறப்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே செல்கிறது என்பதைக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். இதிலும் இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம் என்றொரு புள்ளிவிவரத்தை சமீபத்தில் வெளியிட்டுள்ளது லான்செட் என்ற மருத்துவ இதழ்.

‘‘உலக சுகாதார நிறுவனம் மதிப்பிட்டுள்ளதைக் காட்டிலும் உலக அளவில் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 25 சதவீதம் அதிகமாக இருப்பதாக

வும்; காசநோய் அதிக அளவில் காணப்படும் 22 நாடுகளில் இந்தியாதான் உச்சத்தில் இருப்பதாகவும், உலக அளவில் காசநோய் பாதிக்கப்பட்ட குழந்தைகளுள் 27 சதவீதக் குழந்தைகள் இந்தியாவைச் சேர்ந்தவர்களென்றும்'' அம்மருத்துவ இதழ் புள்ளிவிவரங்களை வெளியிட்டிருக்கிறது. பொது சுகாதார தளத்தில் பணியாற்றி வரும் மனித உரிமை அமைப்புகள், ''இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 74,000 தொடங்கி 1,30,000 வரையிலான குழந்தைகள் காசநோய்க்குப் பலியாவதாக''க் குறிப்பிடுகின்றன.

சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் சுகாதாரக் கேடுகள், ஊட்டச் சத்தின்மை, புகை பிடிப்பது போன்ற தனிப்பட்ட பழக்க வழக்கங்கள் உள்ளிட்டவை இந்நோய் பரவுவதற்கு அடிப்படை காரணங்களாக இருந்தாலும், ஏதுமறியா குழந்தைகளைப் பொருத்தவரை அவர்கள் இந்நோய்க்குப் பலியாவதற்கு முதன்மையான காரணமாக இருப்பது ஊட்டச் சத்துக் குறைபாடுதான். இதனைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், அரைப் பட்டினியாக அல்லது வெறும் சோற்றை மட்டுமே உண்டு வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட குழந்தைகள்தான் இந்நோய்க்குப் பலியாவதில் முதலாவது இடத்தில் உள்ளனர். விதவிதமான காய்கறிகள், இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள், டின்களில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள், பானங்கள் என ஒருபுறம் இந்தியச் சந்தை நிரம்பிவழியும் போது, இன்னொருபுறம் காட்டுக்கிழங்குகளையும் வேர்களையும் மட்டுமே உண்டு பசியாறும் பழங்குடியின மக்களைப் பற்றிய செய்திகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தியக் குழந்தைகளுள் சரிபாதிக் குழந்தைகள் ஊட்டச்சத்தின்றி நோஞ்சான்களாக, சவலைப்பிள்ளைகளாக இருப்பது இந்த உயிர்க்கொல்லி நோய் பல்கிப் பரவுவதற்கான நிரந்தர வாய்ப்பை வழங்கி வருகிறது.

ஏறத்தாழ இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே ஒழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இருந்த காசநோய், கடந்த சில ஆண்டுகளில் மிகவும் தீவிரமாகவும், மருந்துகளுக்குக்கூடக் கட்டுப்படாத வீரியமிக்கதாகவும் மாறி அடித்தட்டு பிரிவைச் சேர்ந்த பெரியவர்களையும் குழந்தைகளையும் தாக்கி வருவதை வெறும் மருந்து-மருத்துவம் சார்ந்த விசயமாக மட்டும் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. இந்தியப் பொருளாதாரம் உலகமயமான இந்த இருபது ஆண்டுகளில்தான் காசநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்திருக்கிறது என்பது தற்செயலானதல்ல. பொருளாதாரம், குறிப்பாக வேலைவாய்ப்புகள் நகரமயமாகியிருப்பது, நகரங்களுக்கு வேலை தேடிவரும் அடித்தட்டு மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நகர்ப்புறசேரிகளில் வாழ வேண்டியிருப்பது, உணவுப் பொருட்களின் விலையேற்றம், பொது சுகாதாரமும் மருத்துவமும் வேகவேகமாகத் தனியார்மயமாகி வருவது போன்றவற்றை ஒதுக்கிவைத்துவிட்டு காசநோய் பாதிப்புகளை மதிப்பிட்டுவிட முடியாது.

வீட்டு வாடகை, போக்குவரத்து, மருத்துவம் உள்ளிட்ட பிற அத்தியாவசிய செலவுகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் நம் கையில் இல்லாத நிலையில், வருமானத்திற்கும் விலைவாசி உயர்வுக்கும் இடையே ஏற்பட்டு வரும் பள்ளத்தைச் சரிகட்ட உணவுக்கான செலவைக் குறைத்துக் கொள்வதுதான் உழைக்கும் மக்கள் முன் உடனடி தீர்வாக அமைகிறது. உணவு பழக்க வழக்கத்தில் திணிக்கப்பட்ட மாற்றமும் எளிய மக்களின் உணவாக இருந்துவந்த சத்துக்கள் நிறைந்த சிறுதானிய வகைகளை அவர்களிடம் இருந்து தட்டிப்பறித்துவிட்டது. இந்த நிலைமைகள் அடித்தட்டு மக்களின் குழந்தைகளிடம் ஊட்டச்சத்து குறைபாடை நிரந்தரமாக்கி, அவர்களை காசநோய், போலியோ போன்ற கொடிய நோய்கள் எளிதாகத் தாக்குவதற்கான பலியாடுகளாக மாற்றிவிட்டது.

குழந்தைகளைத் தாக்கும் காசநோயைக் கட்டுப்படுத்த பி.சி.ஜி. தடுப்பூசி மற்றும் புதுப்பிக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம், நேரடிக் கண்காணிப்பு சிகிச்சை முறை (டாட்ஸ்) ஆகியவை செயல்படுத்தப்பட்டாலும், அவை சமூகத்தின் மேல்தட்டை நோக்கி இந்நோய்கள் பரவிவிடக் கூடாது என்ற வர்க்க கண்ணோட்ட அடிப்படையில் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன. அதனால்தான் இத்திட்டங்களால் இந்நோயை முழுமையாக ஒழித்துக் கட்டுவதில் வெற்றியை ஈட்ட முடியவில்லை. அதேசமயம், இந்தத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படும்பொழுது நிலைமை மேலும் சிக்கலாகிவிடுகிறது. குறிப்பாக, கடந்த ஆண்டு அரசு மருத்துவமனைகள் மூலம் காசநோய்க்கான மருந்து வழங்குவதில் செயற்கையான தட்டுப்பாடு உருவாக்கப்பட்டு, நோயாளிகள் வெளிச்சந்தையில் மருந்தை வாங்கிக் கொள்ளும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். இந்நிலைமைகள் யாவும் காசநோய் கிருமியை ஒழிப்பதற்கு தனியார்மயம் என்ற சந்தைப் பொருளாதார கிருமியை ஒழித்துக் கட்டுவதை முன்நிபந்தனையாக நம் முன் நிறுத்துகின்றன.

• அழகு


காசநோயால் பாதிக்கப்பட்டுள்ள ஐந்து மாதக் குழந்தை.

# தனியார் மருத்துவக் கல்லூரிகளின் கொள்ளைக்கு

# நீதிமன்றத்தின் நல்லாசி!

**தனியார் மருத்துவக் கல்லூரிகளை நடத்திவரும் புதுப் பணக்கார மாஃபியா கும்பலின் பாக்கெட்டில்தான் அரசு, நீதிமன்றம், மருத்துவ கவுன்சில் சி.பி.ஐ., ஆகியவை அடங்கிக் கிடக்கின்றன.**

கட்டாய நன்கொடை வசூலித்தது மற்றும் மருத்துவ கவுன்சிலின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக தில்லுமுல்லுகள் செய்தது உள்ளிட்ட குற்றச்சாட்டில் சிக்கிய தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு எதிராக சி.பி.ஐ. தொடர்ந்த நான்கு வழக்குகளையும் ஒன்றன்பின் ஒன்றாக ஊத்தி மூடிவிட்டது, சென்னை உயர்நீதிமன்றம். தனியார் மருத்துவக் கல்லூரிகளைப் புதுப் பணக்கார மாஃபியா கும்பல்கள்தான் நடத்திவருகின்றன என்ற நிலையில், இத்தீர்ப்பு அக்கும்பலின் அட்டூழியங்கள், முறைகேடுகள் அனைத்தையும் ஏறத்தாழ சட்டப்பூர்வமாக்கிவிட்டது.

கடந்த 2009-ஆம் ஆண்டில், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கட்டாய நன்கொடை வசூலிக்கப்படுவது தொடர்பாக ''டைம்ஸ் நௌ'' தொலைக்காட்சியும் ''டைம்ஸ் ஆஃப் இந்தியா'' ஆங்கில நாளேடும் இணைந்து நடத்திய இரகசிய புலனாய்வு நடவடிக்கையில், சென்னை போரூரிலுள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் இணைப் பதிவாளர் சுப்பிரமணியன், தம்மிடம் எம்.பி.பி.எஸ். சேர்க்கைக்காக அணுகிய மாணவர் ஒருவரிடம் கட்டாய நன்கொடை ரூ.40 இலட்சம் கேட்டதும்; சென்னை குரோம்பேட்டையிலுள்ள ஸ்ரீ பாலாஜி மருத்துவக் கல்லூரியின் நிர்வாக அதிகாரியான ஜான்சன் ரூ.20 இலட்சம் கேட்டதும் வீடியோ ஆதாரத்துடன் அம்பலமாகின.

மருத்துவக் கல்லூரிகள் சட்ட விரோதமான முறையில் கட்டாய நன்கொடை வாங்கிக்கொண்டு சீட்டை விற்கின்றன; பகற்கொள்ளையடிக்கின்றன என்ற உலகறிந்த உண்மைக்கு மேலும் ஒரு ஆதாரம் இது. குற்றச்சாட்டில் சிக்கிய தனியார் மருத்துவக் கல்லூரிகள் மீது கட்டாய நன்கொடைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது, தமிழக அரசின் கடமை; அவ்வாறு செய்யவில்லை. மாறாக, வழக்கை சி.பி.ஐ. வசம் தள்ளிவிட்டது.

ரேட்டு பேசி சீட்டை விற்ற கல்லூரி நிர்வாகத்தின் மீது வழக்கு பதிவு செய்யாத அதேசமயம், தனியார் மருத்துவக் கல்லூரியின் இணைப் பதிவாளர் மீது, அரசு ஊழியருக்கு மட்டுமே பொருந்தக்கூடிய சட்டப்பிரிவான ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கைப் பதிவு செய்தது, சி.பி.ஐ.

தனியார் மருத்துவக் கல்லூரிகளைக் கண்காணித்து அவற்றை முறைப்படுத்த வேண்டிய இந்திய மருத்துவ கவுன்சிலுக்கு தலைவராக இருந்த கேத்தன் தேசாய், சம்பவம் நடந்த சமயத்தில் குற்றச்சாட்டில் சிக்கிய ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியின் இயக்குநர்களுள் ஒருவராகவும் இருந்தார். கேத்தன் தேசாய்க்கு தெரியாமல் அக்கல்லூரி கட்டாய நன்கொடை வசூலில் ஈடுபட்டிருக்க முடியாது. இதன்படி, எம்.சி.ஐ.யின் தலைவராக இருந்துகொண்டே, கட்டாய நன்கொடை வசூலிப்பதற்கு உடந்தையாகச் செயல்பட்டதற்காக கேத்தன் தேசாயையும் இவ்வழக்கில் இணைத்திருக்க வேண்டும். சி.பி.ஐ. அவ்வாறு செய்யவில்லை.

வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. பொருத்தமற்ற குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதையும், கல்லூரி நிர்வாகத்தின் மீது குற்றச்சாட்டே பதியப்படவில்லை என்பதையும் நீதிபதி அருணா ஜெகதீசன் சொந்த மூளையைப் பயன்படுத்திக் கேள்விக்குள்ளாக்கியிருக்க வேண்டும். மாறாக, சி.பி.ஐ. ஏற்படுத்தித் தந்த இந்த ஓட்டையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ''தனியார் மருத்துவக் கல்லூரியின் இணைப் பதிவாளர் என்பவர் பொது ஊழியர் அல்ல; எனவே, அவர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது செல்லாது'' என்றும், ''மாணவர் சேர்க்கைக்காகத்தான் அவர் 40

கோடிகோடியாய் இலஞ்சம் பெற்றுக் கொண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அங்கீகாரத்தை வாரி வழங்கிய இந்திய மருத்துவ கவுன்சிலின் முன்னாள் தலைவர் கேத்தன் தேசாய் (கோப்புப் படம்)



இலட்சம் பேரம் பேசினார் என்பதற்கும் போதுமான ஆதாரம் இல்லை'' என்றும் கூறி வழக்கை ஊத்தி மூடினார், அவர்.

மற்ற வழக்குகள், மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்காக முறைகேடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பானவை. இந்திய மருத்துவ கவுன்சிலின் அப்போதைய தலைவர் கேத்தன் தேசாய் கோடிகளில் பணத்தை வாங்கிக்கொண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரத்தைப் புதுப்பித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அப்பொறுப்பில் அவர் இருந்த காலகட்டத்தில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் எம்.சி.ஐ.யின் ஊழல் தடுப்புப் பிரிவு மறுஆய்வை மேற்கொண்டது. தமிழகத்தில் உள்ள மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி, சீறீபாலாஜி கல்வி அறக்கட்டளை நடத்தும் மருத்துவக் கல்லூரி, புதுச்சேரியில் உள்ள சிறீ இலட்சுமியம்மாள் கல்வி அறக்கட்டளை நடத்தும் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வின் பொழுது முறையான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாததோடு, தினக்கூலித் தொழிலாளர்களை நோயாளிகளைப் போல நடிக்க வைத்தும், வெளியிலிருந்து மருத்துவர்களை அழைத்து வந்து அவர்களுக்குப் போலியாக அடையாள அட்டை வழங்கிப் பேராசிரியர்களாக நடிக்க வைத்தும் அங்கீகாரத்தை பெற்றிருப்பது அம்பலமானது.

எம்.சி.ஐ. தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாக அக்கல்லூரிகளின் அங்கீகாரத்தை இரத்து செய்து புதிய மாணவர் சேர்க்கையை தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். எம்.சி.ஐ.யின் கடமை அது என்றபோதிலும், மோசடியில் ஈடுபட்ட அம்மூன்று கல்லூரியின் நிர்வாகிகளுக்கு எதிராக இந்திய மருத்துவ கவுன்சிலோ, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக, வழக்கை சி.பி.ஐ.யின் தலையில் கட்டிவிட்டு கைகழுவிச் சென்றது. சி.பி.ஐ. தன் பங்குக்கு இவ்வழக்கை ஒன்றுமில்லாமல் செய்வதற்கு தோதாக, போலியாக கொண்டுவந்து நிறுத்தப்பட்ட மருத்துவர்களின் பெயர்களைக்கூடப் பதிவு செய்யாமலும்; எம்.சி.ஐ.யின் நேரடி ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்ட குறிப்பான குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதாரங்களை வழக்கில் இணைக்காமலும் பல ஓட்டைகளுடன் வழக்கைப் பதிவு செய்தது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில், முக்கியக் குற்றவாளியான எம்.சி.ஐ.யின் முன்னாள் தலைவர் கேத்தன் தேசாயின் பெயர் குற்றப்பத்திரிக்கையிலிருந்தும் முதல் தகவல் அறிக்கையிலிருந்தும் சதித்தனமான முறையில் நீக்கப்பட்டன.



தனியார் மருத்துவக் கல்லூரிகளின் முறைகேடுகளையும் நன்கொடை கொள்ளையையும் கிரிமினல் குற்றமாகக் கருத முடியாது எனத் தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன்.

சி.பி.ஐ. இவ்வாறு மருத்துவக் கல்லூரி முதலாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொண்டதென்றால், சென்னை உயர்நீதிமன்ற மோதன் பங்குக்கு, எம்.சி.ஐ.யின் ஆய்வில் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்தது; தினக்கூலித் தொழிலாளர்களை நோயாளிகளாகவும், உள்ளூர் மருத்துவர்களைப் பேராசிரியர்களாகவும் நடிக்க வைத்ததெல்லாம் ‘‘தவறுகள்தானே தவிர, கிரிமினல் சட்டத்தின் கீழ் தண்டிக்கும் அளவிற்கு குற்றமில்லை'' என்றும் ‘‘விதிமீறல்களில் ஈடுபடும் மருத்துவக்கல்லூரிகள் மீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்யவோ, இத்தவறுகளை விசாரணை செய்யவோ சி.பி.ஐ.க்கு அதிகாரம் இல்லை'' என்றும் சொல்லி கேசை மூடியது.

இதனைவிடவும் இழிவான முறையில் தனியார் மருத்துவக் கல்லூரி முதலாளிகளுக்குச் சாதகமாகத் தீர்ப்பளிக்க முடியும் என்பதை உணர்த்தியிருக்கிறது, சமீபத்தில் வெளிவந்துள்ள சென்னை உயர் நீதிமன்றத்தின் மற்றொரு தீர்ப்பு. போதுமான அடிப்படை வசதிகள் இல்லாத காரணங்களினால் மாதா மருத்துவக் கல்லூரி, முத்துக்குமரன் மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட நான்கு மருத்துவக் கல்லூரிகளில் புதிய மாணவர் சேர்க்கைக்கான அனுமதியை மறுத்திருந்தது எம்.சி.ஐ. இவற்றுக்கெதிராக தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடுத்த வழக்கில் கடந்த வாரத்தில் தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்றம், ‘‘ அடிப்படை வசதிகள் இல்லை என்பது உள்ளிட்ட காரணங்களுக்காக எம்.சி.ஐ.யின் விதியைக் காட்டி மாணவர் சேர்க்கைக்கான அனுமதியை மறுப்பது தவறு. நாட்டுக்கு மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். முந்தைய ஆய்வில் எம்.சி.ஐ. சுட்டிக்காட்டிய குறைகளை நிவர்த்தி செய்து விட்டதாகக் கூறும் மருத்துவக் கல்லூரிகளில் மறு ஆய்வை உடனே நடத்தி, இவ்வாண்டு மாணவர் சேர்க்கைக்கு அனுமதியை வழங்குமாறு'' எம்.சி.ஐ.க்கு உத்திரவிட்டிருக்கிறது.

எனவே, இதன்மூலம் பெறப்படும் நீதி என்னவெனில், கல்லூரியின் தாளாளரே சிறப்பு சேர்க்கை முகாமிற்கு ஏற்பாடு செய்து கல்லூரி வளாகத்திலேயே கோடிக்கணக்கில் நன்கொடை வசூலிக்கலாம். எம்.சி.ஐ. கல்லூரியை ஆய்வு செய்ய வரும் பொழுது வெள்ளுடையில் கால்டாக்சி டிரைவர்களைக் கூட நிறுத்தி வைத்து இவர்தான் மருத்துவப் பேராசிரியர் என்று புளுகலாம். கீற்றுக் கொட்டகையைப் போட்டுக் கொண்டு, சமையல் கத்திகளை கையில் வைத்துக் கொண்டு மருத்துவக் கல்லூரிதான் நடத்துகிறோம் என்று அவர்கள் கொடுக்கும் வாக்குறுதியை மட்டுமே ஏற்றுக் கொண்டு அங்கீகாரத்தை எம்.சி.ஐ. புதுப்பிக்கலாம். உயர் நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்புகளின் அடிப்படையில் இவை எவையும் இனி சட்டவிரோதம் கிடையாது. ஏனெனில் நமக்கு ‘மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள்’!

● இளங்கதிர்

## ஆம் ஆத்மி:

4

# பிறப்பு இரகசியம்!

**அமெரிக்க ஏகாதிபத்தியம் ஊட்டி வளர்த்துள்ள அரசுசாரா நிறுவனங்களின், குடிமைச் சமூகங்களின் கூட்டணிதான் ஆம் ஆத்மி கட்சி, லோக் சத்தா கட்சி, இன்ன பிற அமைப்புகள்.**

கடந்த ஆகஸ்டு (2014) புதிய ஜனநாயகம் இதழில் இடம் பெற்றிருந்த ''ஆம் ஆத்மி கட்சி: பிறப்பு இரகசியம்!'' என்ற கட்டுரையில், பின்வருமாறு எழுதி யிருந்தோம்:

''மேலைநாடுகளில் இருந்து நிதிபெற்று இந்திய அரசுக்கு எதிராக அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் வேலைசெய்வது உண்மையானால், இந்திய அரசு ஏன் அதைத் தடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை?'' என்று கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டக் குழுத்தலைவர் உதயகுமாரன் தன் மீது குற்றஞ்சாட்டியவர்களின் வாயடைக்கும் வகையிலான, வழமையான கேள்வியொன்றை வீசியிருக்கிறார். இதற்கு இந்திய அரசு பதில் கூறவில்லை.

அரவிந்த் கேஜரிவால் நடத்திய கபீர் என்ற அரசுசாரா தொண்டு நிறுவனத்துக்கு நிதியுதவி அளித்ததை உறுதி செய்துள்ள ஃபோர்டு பவுண்டேசனின் பிரதிநிதியான ஸ்டீவன் சோல்னிக்.



இதே எதிர்வாதத்தை, உதயகுமாரன் தனது அரசியல் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ள அரவிந்த் கேஜரிவால் மூன்றாண்டுகளுக்கு முன்பே வைத்தார். தனது ''கபீர்'' என்ற அரசுசாரா தொண்டு நிறுவனம் மூலம் அமெரிக்காவின் ஃபோர்டு ஃபவுண்டேசனிடமிருந்து நாற்பதாயிரம் டாலர் நிதி பெற்றதாக அரவிந்த் கேஜரிவால் மீது அருந்ததி ராய் குற்றஞ்சாட்டியபோது அதை அவர் மறுக்கவில்லை. ஃபோர்டு ஃபவுண்டேசனின் இந்தியப் பிரதிநிதி ஸ்டீவன் சோல்னிக்குடன் சேர்ந்து ஒரு நேர்காணல் நடத்திய கேஜரிவால், ''ஃபோர்டு ஃபவுண்டேசன் மோசமானதென்றால், பிறகு அதைத் தடை செய்யவேண்டியதுதானே!'' என்ற அதே கேள்வியை வீசினார்.

''முதல் தவணையாக 2005-ஆம் ஆண்டு 1,72,000/- டாலரும், இரண்டாம் தவணையாக 2008-ஆம் ஆண்டு 1,97,000/- டாலரும் அந்த அரசுசாரா தொண்டு நிறுவனத்திற்கு அளித்தோம்; மூன்றாவது தவணையையும் அளிப்பதாக ஒப்புக்கொண்டோம்; தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்காக வேலைசெய்வதாக ஒப்புக்கொண்டு, அதைச் செய்யாததால் நிதி தரவில்லை'' என்று ஸ்டீவன் சோல்னிக் உண்மையைச் சொல்லிவிட்டார்.

அது மட்டுமில்லை; அரவிந்த் கேஜரிவால், அன்னா ஹசாரே, அருணா ராய், கிரண் பேடி, இந்தியக் கடற்படை முன்னாள் துணை அட்மிரல் லட்சுமிநாராயண் ராமதாஸ், விவசாய விஞ்ஞானி என்று சொல்லிக்கொண்டு நமது நாட்டுப் பாரம்பரிய நெல் விதைகளைத் திருடி அமெரிக்க விதை கார்ப்பரேட் நிறுவங்களுக்கு விற்கும் எம்.எஸ். சுவாமிநாதன் முதலான பலரும் அமெரிக்காவின் ஃபோர்டு ஃபவுண்டேசனும் அதன் முன்னோடியான ராக்பெல்லர் ஃபவுண்டேசனும் இணைந்து தமது எடுபிடி பிலிப்பைன்சின் முன்னாள் அதிபர் ரமோன் மாகசேசே பெயரில் நடத்தும், தலா 50,000 டாலர் கொண்ட விருதை பெற்றவர்கள்தாம்; அது தவிர, அரசுசாரா தொண்டு நிறுவனங்களை நடத்தி அந்நிய நிதி உதவி பெறுபவர்கள்தாம். இந்த உண்மை அரசியல் அறிந்த அனைவரும் அறிவர்.

அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மேலைநாடுகளில் இருந்து நிதி பெற்று இந்திய அரசுக்கு எதிராகச் சதி செய்வதாக ஒருபுறம் குற்றஞ் சாட்டினாலும், மறுபுறம் அவற்றைத் தடைசெய்து தகுந்த நடவடிக்கை களை (காங்கிரசு அல்லது பா.ஜ.க என்று எந்த அரசானாலும்) மேற் கொள்வதில்லை. அது மட்டுமல்ல, அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளடங்கிய குடிமைச் சமூகங்கள் தடையின்றிப் பாதுகாப்பாகச் செயல்படுவதற்காக இந்திய அரசு தனது எஜமானர்களான மேலைநாடுகளுக்கு உத்திரவாதமளித்துள்ளதோடு, அதற்குரிய ஐ.நா. ஒப்பந்தத்திலும் கைச்சாத்தளித்திருக்கிறது. ஏன் இந்த இரட்டை நிலை? தனக்கு எதிராகச் சதிவேலைகள் செய்வதாகக் கருதும்

அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளடங்கிய குடிமைச் சமூகங்கள் தடையின்றிப் பாதுகாப்பாகச் செயல்படுவதற்கு இந்திய அரசு ஏன் உத்திரவாதமளிக்க வேண்டும்?

ஐ.நா. அவை நிறைவேற்றிய சர்வதேசக் குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை என்ற ஒரு பன்னாட்டு ஒப்பந்தத்துக்கு இந்திய அரசு முறைப்படி ஒப்புதல் அளித்திருக்கிறது. பொதுவிலானதாக வரையறுக்கப்பட்டுள்ள இந்தக் குடிமை மற்றும் அரசியல் உரிமைகளை அரசுசாரா தொண்டு நிறுவனங்களுக்கும் குடிமைச் சமூக அமைப்புகளுக்கும் பொருத்தி, சர்வதேசச்சட்டத்தில் பதிக்கப்படுள்ளது; அது குடிமைச்சமூகங்களில் அரசு தலையீடுகளிலிருந்து பாதுகாத்து நெறிப்படுத்தும் விதிகளையும் நெறிமுறைகளையும் உள்ளடக்கியது.



அமெரிக்காவின் ஃபோர்டு பவுண்டேசன் அளித்த நிதியில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை நடத்தி, அதன் தொடர்ச்சியாக ஆம் ஆத்மி கட்சியை உருவாக்கிய அதன் நிறுவனர்கள் அரவிந்த் கேஜரிவால், மனிஷ் சிசோதியா, யோகேந்திர யாதவ்.

‘‘அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் (வெவ்வேறு) நாடுகளில் பங்கேற்கும் உரிமை (அதாவது அரசுசாரா தொண்டு நிறுவனங்களை அமைத்துக்கொள்ளவும் அதில் இணையவும் தனிநபர்கள் உரிமை); அரசின் தலையீடின்றி அவற்றின் சட்டபூர்வ நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவும் உரிமை; அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் கருத்துரிமை; அவை தமது உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கூட்டாளிகளுடன் தகவல், தொடர்பு கொள்ளும் உரிமை; அவர்கள் தமது நாடுகளின் எல்லை கடந்து நிதிப்பரிமாற்றம் உட்பட நிதி ஆதாரங்களைக் கோரவும் பெறவுமான உரிமை; அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசுக் கடமை - ஆகிய வழிகாட்டும் நெறிமுறைகளைக் கொண்டிருக்கின்றன.

உலக வங்கி, சர்வதேச நிதியம், உலக வர்த்தகக் கழகம், ஏகாதிபத்திய நிதி வர்த்தக அமைப்புகளின் நிபந்தனைகளையும், தனியார்மயம் - தாராளமயம் - உலகமயமாக்கம் ஆகிய புதிய பொருளாதாரக் கொள்கைளைத் தலைவணங்கி ஒப்புக்கொண்டதோடு, மேற்படி சட்ட திட்டங்களையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது; அவற்றுக்குக் கட்டுப்படவும் கடமைப்பட்டுவிட்டது.

கடந்த ஆகஸ்டு(2014) இதழில் பின்வருமாறு எழுதியிருந்தோம்: ‘‘முதலாளியத்துக்கு எப்போதும் சந்தை விரிவாக்கமும் பொருளாதார வளர்ச்சியும் தேவை. ஆனால், தற்போதைய சந்தை சுருங்கிவிட்டதால் கார்ப்பரேட் முதலாளிகள் தனிப்பட்ட தேசங்களில் இருந்து உலக அளவில் விரிவாக்கிக் கொள்ள விழைகிறார்கள். இதற்கு முன்பு சந்தைப் பொருளாக இல்லாத தனிப்பட்ட வாழ்க்கை, சமூக உறவுகள் மட்டுமல்ல; வழமையாகச் சந்தைக்கு வெளியிலுள்ளதாகக் கருதப்பட்ட அரசாங்க நடவடிக்கைகள், பொறுப்புகள், கடமைகள்கூட விற்பனைச் சரக்குகளாக, இலாபமீட்டும் சந்தைப் பொருட்களாக மாற்றப்பட்டன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குடிதண்ணீர், அடிப்படைக் கல்வி, பொதுச்சுகாதாரம், பொதுப் பாதுகாப்பு, சாலைப் போக்குவரத்து, முன்னேறிய வேலை நிலைமைகள் போன்றவைகூட சேவைச் சரக்குகளாக, வியாபாரப் பொருளாக மாற்றப்பட்டன. பொதுநலன்களுக்காகத் தனிமனிதத் திறமையையும் சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தையும் நெறிப்படுத்துவதுதான் ஜனநாயகம் என்பது போய், கார்ப்பரேட் முதலாளிகளின் தொழில், சந்தை, வியாபார நலன்களுக்காக அரசாங்கக் கட்டுமானங்களையும், சமூகத்தையும் சட்டதிட்டங்களையும் நெறிப்படுத்துவதாக மாற்றப்படுகின்றன.’’

> **அரசியல் கட்சிகள், தலைவர்கள், அரசுத் தலைவர்கள், அமைச்சர்கள், அதிகார வர்க்கத்தினரின் இடத்தில் சிந்தனைக் குழாம்களையும் குடிமைச் சமூகங்களையும் வைப்பதுதான் ஏகாதிபத்திய எஜமானர்களின் திட்டமாக உள்ளது.**



அரவிந்த் கேஜரிவால், அன்னா ஹசாரே, அருணா ராய், கிரண் பேடி, முன்னாள் அட்மிரல் ராமதாஸ், எம்.எஸ்.சுவாமிநாதன்: அமெரிக்காவின் ஃபோர்டு பவுண்டேசனும் அதன் முன்னோடியான ராக்பெல்லர் பவுண்டேசனும் இணைந்து தமது எடுபிடியான பிலிப்பைன்சின் முன்னாள் அதிபர் ரமோன் மகசேசே பெயரில் அளிக்கும் 50,000 டாலர் கொண்ட விருதைப் பெற்ற இந்தியர்கள்.

இந்த மாற்றங்களைக் கொண்டுவரும் கார்ப்பரேட் (கூட்டுப்பங்கு) நிறுவனங்களின் கூட்டுச்சதியில் சிந்தனைக் குழாம்களும் குடிமைச் சமூகங்களும் முக்கியப் பங்காற்றுகின்றன. அதுமட்டுமல்ல, உலக வங்கி, சர்வதேசநிதியம், உலக வர்த்தகக் கழகம் ஆகிய ஏகாதிபத்திய நிதி, வர்த்தக அமைப்புகளின் உலகமயமாக்கம் மற்றும் மறுகாலனியாக்கப் பொதுத் திட்டத்திலும் அவற்றின் நிதி ஒதுக்கீட்டிலும் அரசுசாரா தொண்டு அமைப்புகளும் குடிமைச் சமூங்களும் முக்கிய இடம் பெற்றுள்ளன. உலக வங்கி, சர்வதேச நிதியம், உலக வர்த்தகக் கழகம், ஐக்கிய நாடுகள் அவை மற்றும் முதலாளிய ஏகாதிபத்திய நாடுகளின் அரசியல், பொருளாதாரம் முதல் சுற்றுச்சூழல் குறித்த முக்கிய அரை ஆண்டு, ஆண்டுக் கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் அரசுசாரா தொண்டு அமைப்புகள், குடிமைச் சமூங்களின் பிரதிநிதிகள் அதிகாரபூர்வமாக இடம் பெறுகின்றனர். இவை உருவாக்கும் பல்வேறு அரங்குகள், கூட்டமைப்புகளில் அவை உறுப்பினர்களாக இடம் பெறுகிறார்கள். உலக நாடுகளின் அரசுத் தலைவர்கள், அமைச்சர்களுக்கும் நிகரான ஊதியமும் வசதிகளும் பாதுகாப்புகளும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இதற்கு முக்கியக் காரணங்களில் ஒன்று, தொழிற்துறை, அரசுத்துறை ஆகியவற்றுக்கு நிகராக அதிகாரபூர்வமான ஏகாதிபத்திய எஜமானர்களால் மூன்றாவது துறையாக அரசுசாரா தொண்டு அமைப்புகளையும் உள்ளடங்கிய குடிமைச் சமூகங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னொரு காரணம், அரசுசாரா தொண்டு அமைப்புகளையும் உள்ளடங்கிய குடிமைச் சமூகங்களை வளர்ச்சிகான திட்டங்களில் பங்காளிகளாக கார்ப்பரேட் (கூட்டுப்பங்கு) நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

கடந்த ஆகஸ்டு புதிய ஜனநாயகம் இதழில் பின்வருமாறு எழுதியிருந்தோம், ‘‘பொதுவில் நாட்டின் பாதுகாப்பு, சட்டம்-ஒழுங்கு முதலான சில விவகாரங்கள் தவிர சமூகம், மதம், கல்வி-மருத்துவம், பண்பாடு போன்றவற்றிலோ, குறிப்பாக மக்கள் நலன், திட்டமிடுதல், வளர்ச்சி என்ற பெயரில் நாட்டின் பொருளாதார விவகாரங்களில் அரசு தலையீடு செய்யக் கூடாது. இந்த விவகாரங்களைச் சந்தையும் சமூகமும் மூலதன நிர்வாகிகளும் (அதாவது கார்ப்பரேட் முதலாளிகளும்) கவனித்துக் கொள்வார்கள். சாரமாகச் சொல்வதானால், கார்ப்பரேட் தரகு முதலாளிகள், ஏகாதிபத்தியப் பன்னாட்டு தொழிற் கழகங்களின் நலன்களுக்கேற்ப செயல்படும் எலும்புக் கூடு போன்ற அரசு அமைப்பு மட்டுமே இருக்க வேண்டும். இந்த வரம்பைத் தாண்டி அவற்றின் செயல்பாடுகளில் தலையிடுவது குடிமைச்சமூகத்தின் பொருளாதார-தொழில் உரிமைகளை மறுப்பதும் எதேச்சதிகாரமும் ஆகும். இவைதாம் அரசின், கடமைகள், பணிகள், வரம்புகள் குறித்த ஏகாதிபத்திய கைக்கூலிகளது பிரச்சாரம்.

அரசியல் கட்சிகளின், தலைவர்களின் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், நம்பிக்கை துரோகங்கள், கிரிமினல் குற்றங்கள் முதலான சீரழிவுகள், அவர்களுக்கெதிரான மக்கள் வெறுப்பு ஆகியன மேற்படிப் பிரச்சாரத்துக்கு சாதகமாக அமைகின்றன. இவ்வாறு அரசும், அரசியல் தலைவர்களும் இழிவுற்று, சிறுமைப்பட்டுப் போகும் நிலையில், நாட்டின் அரசியல்,

> **அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகப் போர்த் தந்திரத்தின்படி தனக்குக் கீழ்ப்படியாத நாடுகளில் மனிதாபிமானத் தலையீடுகள் செய்வதற்கும் ஆட்சி மாற்றம் (Regime change), ஆட்சிக் கவிழ்ப்புகள் செய்வதற்கும் குடிமைச் சமூகங்கள் முக்கிய அரசியல் அமைப்புக் கருவிகளாக உள்ளன.**

பொருளாதார வாழ்வில் சிந்தனைக் குழாம்கள் - குடிமைச்சமூகங்களின் பங்கு பாத்திரம் முன்தள்ளப்படுவதையும் முக்கியத்துவம் பெறுவதையும் புரிந்து கொள்ள முடியும்.''

மேற்கண்ட அடிப்படையில் அரசியல் கட்சிகள், தலைவர்கள், அரசுத் தலைவர்கள்,அமைச்சர்கள், அதிகார வர்க்கத்தினரின் இடத்தில் சிந்தனைக் குழாம்களையும் குடிமைச் சமூகங்களையும் வைப்பதுதான் ஏகாதிபத்திய எஜமானர்களின் திட்டமாக உள்ளது. ''வளர்ச்சித் திட்டங்களில் நேர்ந்துள்ள எல்லாக் கேடுகளுக்கும் வரப்பிரசாதமாக அரசுசாரா தொண்டு அமைப்புகளையும் குடிமைச் சமூகங்களையும் கார்ப்பரேட் கழகங்கள் நம்புகின்றன. இலஞ்ச -ஊழல், அதிகாரமுறைகேடுகளுக்கு இடமில்லாதவை. தமது கட்டுப்பாட்டில் தாமே பொறுப்பேற்று செயல்படுத்துவன என்று மக்கள் நம்பக்கூடியவை. வளர்ச்சித் திட்டங்களுக்கு மக்களிடையே எழும் எதிர்ப்புகளைத் திசை திருப்பிவிட்டு, எளிதில் சமாளிக்கக்கூடியவை. அதைவிட முக்கியமாக, தற்போதைய அரசியல் கட்டமைப்பின் மீது மக்களுக்கு ஏற்படும் அதிருப்திகள் மாபெரும் தன்னியல்பான போராட்டங்களாகவும் கட்டுப்படுத்த முடியாத எழுச்சிகளாகவும் வெடித்து விடும் அபாயத்தில் இருந்து அரசையும், ஆட்சியாளர்களையும் ஆளும் வர்க்கங்களையும் காக்கக் கூடியன'' என்று கார்ப்பரேட் கழகங்கள் நம்புகின்றன. இந்த உண்மை ஏராளமான சிந்தனைக் குழாம்கள், குடிமைச்சமூகங்களின் சர்வதேச ஆய்வுகளில் நிறைந்திருக்கின்றன.

பல ஆண்டுகளாக மாறிமாறி நாட்டை ஆண்டு கொண்டிருந்த காங்கிரசு, பா.ஜ.க. மீது மட்டுமல்ல, 'இடதுசாரிகள்' உட்பட பலவண்ணக் கூட்டணி அரசுகள் மீதும் இந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதலே இந்திய மக்கள் குமுறிக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் கொந்தளித்து வெடிப்பதற்கான தருணம் நெருங்கிக் கொண்டிருந்து. ஓட்டுக்கட்சிகள், அரசியல்வாதிகள் மீது மட்டுமல்ல, செயலிழந்துவரும் அரசு, அதிகரித்து வரும் சட்டமீறல்கள், கொள்கைகளின் இடத்தில் வெறும் கவர்ச்சித் திட்டங்கள், அரசியல் கிரிமினல்மயமாதல், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் ஊழல், போலீசு அராஜகங்கள், நீதித்துறை ஊழல்கள், அதிகரித்து வரும் விதவிதமான கிரிமினல் குற்றங்கள், சமூகப் பாதுகாப்பின்மை என்று மொத்த அரசமைப்பும், சமூகமும் பாரதூரமான நெருக்கடியில் சிக்கி நொறுங்கிச் சரிந்து வருகின்றது. பலவிதமான முயற்சிகளுக்குப் பின்னரும் அதனை முட்டுக் கொடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்த நிலையில்தான் அமெரிக்காவின் ஃபோர்டு ஃபவுண்டேசன் நிறுவனம் நிதியளித்து இயக்கிவரும் அரசுசாரா தொண்டு நிறுவனங்களை நடத்தும் அரவிந்த் கேஜரிவால், மனிஷ் சிசோதியா, யோகேந்திர யாதவ் முதலானவர்கள் ஆம் ஆத்மி கட்சியைத் தோற்றுவித்தார்கள். பின்னாளில் நாடுமுழுவதும் உள்ள இலட்சக்கணக்கான அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் - இப்போது அவற்றில் பலவும் தம்மைக் குடிமைச் சமூகம் என்று சொல்லிக்கொள்கின்றன - இந்தக் கட்சியில் இணைந்து கொண்டன.

காங்கிரசு, பா.ஜ.க.வுக்கு மட்டுமல்ல, இடதுசாரிகள் உட்பட பலவண்ணக் கூட்டணிகளுக்கும் ஒரு அரசியல் மாற்றுச் சக்தியாகக் காட்டிக்கொண்ட ஆம் ஆத்மி கட்சி, 2014 நாடாளுமன்றத் தேர்தல்களோடு தனது முதல் சுற்று வரலாற்றுக் கடமையை முடித்துக்கொண்டது. இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு நம்பிக்கையளிப்பதாக மோடி தலைமையிலான ஆட்சி ஏற்பட்டுவிட்டது. என்றாலும், ''பனிப்போர் முடிவுக்கு வந்தாலும் உலகின் பலநாடுகளிலும் பயங்கரவாத ஆபத்துக்களும் சர்வாதிகார, எதேச்சதிகார, அரை எதேச்சதிகார ஆட்சிகளும் நீடிப்பதால் அந்நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகப் போர்த்தந்திரத்தின்படி தனக்குக் கீழ்ப்படியாத நாடுகளில் மனிதாபிமானத் தலையீடுகள் செய்வதற்கும் ஆட்சி மாற்றம் (Regime changes), ஆட்சிக் கவிழ்ப்புகள் செய்வதற்கும் குடிமைச் சமூகங்கள் முக்கிய அரசியல் - அமைப்புக் கருவிகளாக உள்ளன. அவை ஏகாதிபத்தியங்களின் செல்லபிள்ளைகளாகவே கருதப்படுகின்றன. அந்த வகையிலான அரசியல்-அமைப்புக் கருவிகளாக ஆம் ஆத்மி கட்சி போன்ற அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் உட்பட குடிமைச் சமூகங்கள் ஏகாதிபத்தியங்களுக்கு அவசியமாக இருக்கின்றன.

(முடிவுறுகிறது) ● ஆர்.கே.




**“உலக வங்கி, சர்வதேச நிதியம், உலக வர்த்தகக் கழகம் ஆகிய ஏகாதிபத்திய நிதி, வர்த்தக அமைப்புகளின் உலகமயமாக்கம் மற்றும் மறுகாலனியாக்கப் பொதுத் திட்டத்திலும் அவற்றின் நிதி ஒதுக்கீட்டிலும் அரசுசாரா தொண்டு அமைப்புகளும் குடிமைச் சமூகங்களும் முக்கிய இடம் பெற்றுள்ளன.”**

## கேட்ஸ் பவுண்டேஷன்:

# மனிதநேய வடிவில் வரும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு!

**இந்தியா உள்ளிட்ட ஏழை நாட்டு மக்களை, பன்னாட்டு ஏகபோக மருந்து கம்பெனிகளின் சோதனைச்சாலை எலிகளாக மாற்றும் ஏஜெண்ட்தான் கேட்ஸ் பவுண்டேஷன்.**

**க**ணினி உலகின் முடிசூடா மன்னர், உலகின் மிகப் பெரும் பணக்காரர் என அறியப்பட்ட பில்கேட்ஸ்தான் இன்று உலகின் மிகப் பெரிய தர்மகர்த்தா. அமெரிக்காவிலுள்ள சியாட்டல் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு அவர் நடத்திவரும் அறக்கட்டளை நிறுவனமான ‘‘பில் மற்றும் மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை’’ அளவிலும் செயல்பாட்டிலும் தேசங்கடந்த தொழிற்கழகங்களுக்கு இணையானது. இந்திய அரசின் போலியோ ஒழிப்புத் திட்டம் உள்பட பல்வேறு சுகாதாரத் திட்டங்களின் மூளையாக இருப்பது கேட்ஸ் அறக்கட்டளைதான். கடந்த மாதம் இந்தியாவிற்கு வந்த அவர், மைய அரசுடன் இணைந்து பச்சிளங் குழந்தைகள் உயிரிழப்பைத் தடுப்பதற்கான திட்டத்தைத் தனது அறக்கட்டளையின் சார்பாகத் தொடங்கி வைத்தார்.

கார்ப்பரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்பு பற்றிக் கதைக்கப்படும் இத்தருணத்தில் பில்கேட்ஸின் வருகையை இந்தியாவைச் சேர்ந்த தரகு முதலாளிகளும் ஆரவாரமாக வரவேற்றுள்ளனர். இதன் ஒரு பகுதியாக, விப்ரோ அதிபர் அசிம் பிரேம்ஜி ஏற்பாடு செய்திருந்ததொரு கூட்டத்திற்கு பில் கேட்ஸ் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். இக்கூட்டத்தில் டாடா குழுமத்தின் சைரஸ் மிஸ்திரி, ஜி.எம்.ஆர் அதிபர் ஜி.எம்.ராவ், இன்போசிஸ் நந்தன் நீலகேனி மற்றும் கோபாலகிருஷ்ணன், ஜிண்டால் குழுமத்தின் நவீன் ஜிண்டால், ஏர்டெல்லின் சுனில் மிட்டல், பயோகான் கிரண் மஜூம்தார் ஷா உள்ளிட்ட இந்தியாவின் தரகு முதலாளிகள் கலந்துகொண்டு, அறக்கட்டளைகளை வெற்றிகரமாக நடத்துவது குறித்து பில் கேட்ஸுடன் விவாதித்தனர்.

கணினித் துறையில் ஏகபோக முதலாளியான பில் கேட்ஸ், தனது தாயார் சாகும் தருவாயில் ‘‘யாருக்கு மிக அதிகமாகக் கொடுக்கப்பட்டதோ அவர்களிடமிருந்து மிக அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது’’ எனக் கூறியதால், எஞ்சியுள்ள தனது வாழ்க்கை முழுவதிலும், தனது அறிவையும், திறமையையும் மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும் நோக்கில்தான் அறக்கட்டளைகளைத் தொடங்கி நடத்துவதாகக் கூறியிருக்கிறார்.

தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலியை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதையே நீக்க வேண்டும் என வாதாடி வரும் இந்தக் கனவான்கள் அனைவரும் சமூக பொறுப்பு பற்றி பேசுவதும் அதற்காக தமது இலாபத்தின் ஒரு பகுதியை ஒதுக்குவதும் ஒன்றுக்கொன்று முரண்பாடானதல்ல. இரண்டிலுமே அவர்களின் நலன் ஒளிந்திருப்பது மட்டுமல்ல, அறக்கட்டளைகள், குறிப்பாக பில் கேட்ஸின் அறக்கட்டளை ஒரு கார்ப்பரேட் நிறுவனம் போல, போட்ட முதலுக்கு ஏற்ற பலன் இருக்க வேண்டும் என்றவாறு இலாப நோக்குடன் இயங்கி வருகிறது என்பதே உண்மை.

இதற்கு உதராணமாக 2008-இல் ஏற்பட்ட உலக முதலாளித்துவ நெருக்கடி நிலையைக் குறிப்பிடலாம். அந்நெருக்கடியால் ஏற்பட்ட சமூகக் கொந்தளிப்புகளை ஒருங்கிணைந்த முறையில் சமாளிப்பது எப்படி என விவாதிக்க பில் கேட்ஸ், வாரன் பஃபெட், டேவிட் ராக்பெல்லர் உள்ளிட்ட உலகின் மிகப்பெரும் ஏகபோக முதலாளிகள் நியூயார்க் நகரில் ஒன்று கூடினர். தம்மை ‘‘நல்லவர்களின் சங்கம்’’

பச்சிளங்குழந்தைகளின் உடல்நலக் கவனிப்பு தொடர்பான திட்டம் மற்றும் வழிகாட்டும் கொள்கைகளை மைய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தனுடன் (நடுவில்) இணைந்து வெளியிடும் பில்கேட்ஸ் மற்றும் மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளையின் தலைவர் பில் கேட்ஸ் (வலது) மற்றும் அவரது மனைவி மெலிந்தா கேட்ஸ்.



என்று அழைத்துக் கொண்ட இம்முதலாளிகள், ஏழை நாடுகளின் மக்கள் மத்தியில் நிலவும் அதிருப்திக்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றை களைவதற்கான திட்டங்கள் பற்றி விவாதித்து, அந்நாடுகளில் காணப்படும் ''மக்கள் தொகை பெருக்கம்'', ''தொற்று நோய்கள்'' போன்ற பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றை முதலில் தீர்க்க வேண்டும் என்று முடிவெடுத்தனர். அந்த நாட்டு அரசுகள் முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்கள்/பிரச்சினைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, தமக்கு விருப்பமான அல்லது தாம் முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களில் மட்டுமே அறக்கட்டளைகள் செயல்படுவது என்றும், இதற்கேற்ப ஏழை நாட்டு அரசுகளின் கொள்கை மற்றும் சமூகங்களை மாற்ற வேண்டும் என முடிவு செய்தனர்.





அமெரிக்காவைச் சேர்ந்த நவீன அறக்கட்டளை முதலாளிகளான டேவிட் ராக்ஃபெல்லர் (இடது) மற்றும் வாரன் பஃபெட்.

ஏகபோக நிறுவனங்கள் அறக்கட்டளைகளை உருவாக்குவதும், அவை ஏழை நாடுகளில் கல்வி, மருத்துவம் உள்ளிட்ட சமூகத் தளங்களில் செயல்படுவதும் புதிய விசயமல்ல. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஏகாதிபத்தியங்கள் தங்களது காலனிகளில் உள்ள தொழிலாளர்களின் உழைப்புத் திறனை அதிகரிக்கவும், வெள்ளை மேற்பார்வையாளர்கள், இராணுவச் சிப்பாய்களை நோய் தொற்றிலிருந்து காக்கவும் அறக்கட்டளைளைத் தொடங்கிவிட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலத்தில் கம்யூனிச அலையை வீழ்த்தும் நோக்கத்தோடு அறக்கட்டளைகள் செயல்பட்டு வந்தன. ஏகாதிபத்திய அரசுகளும், பன்னாட்டு நிறுவனங்களும் தமது மேலாதிக்கத்தை ஏழை நாடுகளில் நிறுவிக்கொள்வதற்குப் பயன்படுத்திய பல உத்திகளில் ஒன்றாக பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல், மனிதவள மேம்பாடு ஆகிய தளங்களில் அறக்கட்டளைகளைச் செயல்பட வைத்தன. வியட்நாமில் அமெரிக்க இராணுவத்தால் அணுக முடியாத பகுதிகளில் கூட மலேரியா ஒழிப்பு என்ற பெயரில் அறக்கட்டளைகளால் நெருங்க முடிந்தது. பிலிப்பைன்ஸில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்த ''ஹக் போராளிகளை'' ஒடுக்க அறக்கட்டளைகள் பெரிதும் உதவின.

உலகமய காலக்கட்டத்தில் அறக்கட்டளைகளை இலாபம் தரும் கார்ப்பரேட் நிறுவனம் போல நடத்துவது எப்படி? என்பதை பில் கேட்ஸிடம் இருந்து கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டும் இந்தியத் தரகு முதலாளியும் அசிம் பிரேம்ஜி அறக்கட்டளை தலைவருமான அசிம் பிரேம்ஜி (வலது).



தற்பொழுது, அதாவது உலகமய காலக் கட்டத்தில் இந்த அறக்கட்டளைகள், தொழிற்துறைகளைச் சேர்ந்த தேசங்கடந்த தொழிற்கழகங்களைப் போன்ற அமைப்பு வடிவத்துடனும், இலாப நோக்கத்துடனும் இயங்குவது மட்டுமின்றி, உலகில் நிலவும் பிரச்சனைகளைத் தங்களால் மட்டுமே தீர்க்க முடியும் என்றும் அரசுகளாலோ, அல்லது மக்கள் நலனை முன்னிறுத்திப் போராடும் வேறு பிற அமைப்புகளாலோ இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் வாதிடுவதோடு, அதனைக் கொள்கை பிரகடனம் போன்று அறிவித்துள்ளன. மக்கள் நலன் சார்ந்த கொள்கை முடிவுகளை எடுப்பதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விலக்கிவிட்டு, அந்த இடத்தில் இந்த அறக்கட்டளைகள் வந்தமர்ந்து கொள்கின்றன. இதன் மூலம் ஏழை நாடுகளின் அரசுகளை ஏகாதிபத்திய நிறுவனங்களின் விருப்பத்தை, நிகழ்ச்சிநிரலை நிறைவேற்றிக் கொடுக்கும் கருவியாக மாற்றியமைக்கின்றன. இதற்கு ஐ.நா., உலகவங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் மற்றும் ஏழை நாடுகளின் அரசாங்கங்களில் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கு ஆகிய அனைத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றன.

கேட்ஸ் அறக்கட்டளையால் திட்டமிடப்பட்டு, இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் போலியோ ஒழிப்புத் திட்டம் இதற்கொரு நல்ல உதாரணமாகும். தனது பிற சுகாதாரத் திட்டங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, கேட்ஸ் அறக்கட்டளையின் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்த இந்திய அரசு, தனது மொத்த அரசு இயந்திரத்தையும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தி வருகிறது.

சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பிறகான உலகமய காலக்கட்டத்தில், ஏழை நாடுகளில் செயல்படுத்தப்படும் பொது சுகாதாரத் திட்டங்களை சர்வதேச நிறுவனங்களின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதுதான் ஏகாதிபத்தியங்களின்

நோக்கமாகும். பன்றிக் காய்ச்சல், பறவைக் காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு தொற்று நோய்கள் இன்று உலகெங்கும் பரவிவரும் நிலையில், அதனைக் காட்டித் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றன. இந்த உலகமயமான நோய்களைக் காட்டியோ அல்லது ஆந்த்ராக்ஸ் பீதி போன்றவற்றை கிளப்பிவிட்டோ ஏழை நாடுகளின் மருத்துவ ஆராய்ச்சி, பொது சுகாதாரத் திட்டங்களில் தலையீடு செய்வதற்கான முகாந்திரத்தை ஏகாதிபத்தியங்கள் உருவாக்கிக் கொள்வதோடு, இப்படி தலையீடு செய்வது தங்களது உரிமை என்றும் வாதிடுகின்றன. ''ஜனநாயகம்'', ''மனித உரிமை'' என்ற போர்வையில் மேற்குலக ஏகாதிபத்தியங்கள் லிபியா, சிரியா போன்ற நாடுகளில் தலையிட்டு அவற்றை ஆக்கிரமிப்பது போல, அறக்கட்டளைகள் சுகாதாரம், மக்கள் நலன் என்ற பெயரில் ஏழை நாடுகளுக்குள் ஊடுருவி அவற்றைத் தங்களது பிடிக்குள் கொண்டுவருகின்றன. ஏழை நாடுகளின் ஆளுங்கும்பல் தமது வர்க்க நலனை முன்னிறுத்தி ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்புப் போர்களை ஆதரித்து நிற்பது போலவே, அறக்கட்டளைகளின் தலையீடுகளுக்கும் ஆதரவு அளிக்கின்றன.




நைஜீரியாவில் கேட்ஸ் அறக்கட்டளையின் சார்பாக போலியோ ஒழிப்புத் திட்டம் தொடங்கப்பட்டிருப்பதை அறிவிக்கும் பதாகையுடன் பில் கேட்ஸ். (கோப்புப் படம்)

•••

ஏழை நாடுகளின் பொது சுகாதாரத் திட்டங்களில் தலையீடு செய்து, அவற்றை ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோக மருந்து நிறுவனங்களின் நலனுக்கு ஏற்ப மாற்றியமைப்பதில் இன்று பில்கேட்ஸின் ''கேட்ஸ்-மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளை''தான், அமெரிக்காவைச் சேர்ந்த ஃபோர்டு, ராக்பெல்லர் உள்ளிட்ட மற்ற அறக்கட்டளைகளையெல்லாம் பின்னுக்குத்தள்ளிவிட்டு ஏகபோகமாக வளர்ந்து நிற்கிறது. 3600 கோடி அமெரிக்க டாலர் மூலதனத்தைக் கொண்டுள்ள கேட்ஸ் அறக்கட்டளைதான் இன்றைக்கு உலக அளவில் இயங்கிவரும் முதலாளித்துவ அறக்கட்டளைகளிலேயே மிகவும் பெரியது; ஐ.நா.வின் உலக சுகாதார மையத்தின் நன்கொடையாளர்களில் மூன்றாவது மிகப்பெரிய கொடையாளராக கேட்ஸ் அறக்கட்டளை உள்ளது. இதன் மூலம் உலக சுகாதார கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. 2009-ஆம் ஆண்டில் மட்டும் சர்வதேச அளவில் பல்வேறு சுகாதார திட்டங்களுக்கு கேட்ஸ் அறக்கட்டளை ஒதுக்கிய நிதி 180 கோடி அமெரிக்க டாலர் என்பதிலிருந்து, அதன் வீச்சு மற்றும் செல்வாக்கைப் புரிந்துகொள்ளலாம்.

அமெரிக்காவில் பொதுப்பள்ளிகளைத் தனியார்மயமாக்குவதையும் ஆசிரியர் சங்கங்களின் முதுகெலும்பை உடைப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் கேட்ஸ் அறக்கட்டளை, ஏழை நாடுகளில் ''தொற்றுநோய்கள்'', ''விவசாயக் கொள்கை'', ''மக்கள்தொகைக் கட்டுப்பாடு'' ஆகிய தளங்களில் கவனம் செலுத்தி வருகிறது.

பில்கேட்ஸ் அறக்கட்டளையின் செல்வாக்கிற்கு அதன் கையில் இருக்கும் மூலதனமும், நிதி ஒதுக்கீடும் மட்டும் காரணமில்லை. அதுவொரு ஆக்டோபஸ் போல, ஐ.நா., உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள், ஏழை நாடுகளின் அரசுகள், பன்னாட்டு நிறுவனங்கள், அரசுசாரா நிறுவனங்கள் என விரிந்த வலைப்பின்னலை அமைத்துக் கொண்டு வேலை செய்து வருவதன் மூலம், அது தனது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் ஏழை நாடுகள் அனைத்திலும் நிறுவிக் கொண்டுள்ளது. குறிப்பாக, பில் கேட்ஸ் அறக்கட்டளை 2012-ஆம் ஆண்டு அறிவித்த புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களுக்கான திட்டம், யு.எஸ்.எய்டு, உலக வங்கி ஆகியவற்றுடன் பிரேசில், வங்காளதேசம், ஐக்கிய அரேபிய அமீரகம் உள்ளிட்ட நாடுகளின் அரசாங்கங்களையும், மெர்க், கிளாக்சோ ஸ்மித் கிளைன், ஃபைசர் உள்ளிட்ட 13 பன்னாட்டு மருந்து நிறுவனங்களையும் கூட்டாளிகளாகக் கொண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

> குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதையே நீக்க வேண்டும் என வாதாடி வரும் கார்ப்பரேட் முதலாளிகள் சமூக பொறுப்பு பற்றி பேசுவதும் அதற்காக தமது இலாபத்தின் ஒரு பகுதியை ஒதுக்குவதும் ஒன்றுக்கொன்று முரண்பாடானதல்ல. இரண்டிலுமே அவர்களின் வர்க்க நலன் உள்ளது.

தரம் குறைந்த தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தை மலிவான

விளம்பர உத்திகளின் மூலம் கணினித்துறையில் ஏகபோகமாக மாற்றிவிட்டதைப் போல, தனது அறக்கட்டளையையும் வளர்த்து வருகிறார், பில்கேட்ஸ். ''நாங்கள் ஐ.நா.-விற்கு மாற்று அல்ல. ஆனால், சிலர் எங்களை அதற்கு நிகரான நிறுவனமாக பார்க்கின் றனர்'' என பில் கேட்ஸ் அறக் கட்டளையின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெப் ரேய்க்ஸ் சுயதம் பட்டம் அடித்துக் கொள்ளும் அளவிற்கு அதனின் செல்வாக்கும் ஆதிக்கமும் சர்வதேச அளவில் பரந்து விரிந்ததாக உள்ளது. இதனால் இந்த அறக்கட்டளை எவ் வாறு செயல்படுகிறது, யாருடைய நலனை, எப்படி பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்பதை அறிந்து கொள்ள அதன் உலகளாவிய தடுப் பூசித் திட்டங்களைக் கூர்ந்து நோக்குவது அவசியமாகிறது.

**"கேட்ஸ் பவுண்டேசன், கிளாக்சோ ஸ்மித் கிளைன் நிறுவனத்தின் மலேரியா தடுப்பூசியை 7 ஆப்பிரிக்க நாட்டு குழந்தைகள் மீது சோதித்ததில் 151 குழந்தைகள் இறந்ததுடன், 1,048 குழந்தைகள் முடக்குவாதம், வலிப்பு நோய் போன்ற கடுமையான பக்கவிளைவுகளால் பாதிக்கப்பட்டன."**

பில் கேட்ஸ், மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் பிரதான பங்குதாரர் மட்டுமல்ல; ''பிக் பார்மா'' என்றழைக்கப்படும் பன்னாட்டு மருந்துத் தயாரிப்பு நிறுவனங்களான மெர்க், ஃபைசர், கிளாக்சோ ஸ்மித் கிளைன் ஆகியவற்றில் பில் கேட்ஸ் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளார்.

மேற்கத்திய ஏகபோக மருந்து நிறுவனங்களின் இலாப சதவீதம் சரிவைச் சந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில், அது குறித்து ஆய்வு செய்த மெக்கன்சி நிறுவனம், ''மேற்கத்திய நாடுகளில் அமலில் உள்ள தரக் கட்டுப்பாடு சட்டங்கள் புதிய மருந்துகளைக் கண்டுபிடிப் பதற்கும் அதனைச் சந்தைப்படுத்துவதற்குமான செலவு களை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பதாக''க் கூறி, ''இந்தச் செலவைக் குறைப்பதற்கு வேறு புதுமையான வழிகளை மருந்து கம்பெனிகள் கண்டுபிடிக்க வேண்டும்'' என ஆலோசனை வழங்கியது.

இதனடிப்படையில் புதிய மருந்துகளை ஐரோப்பா மற்றும் அமெரிக்க குடிமகன்களுக்குக் கொடுத்து பரிசோதித்துப் பார்ப் பதைவிட, ஏழை நாடுகளைச் சேர்ந்த ஏழைகளின் உடம்பில் செலுத்திப் பரிசோதித்துப் பார்ப்பதை இலாபகரமான தாகவும், மேற்கத்திய தரக்கட்டுப் பாட்டு சட்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழி யாகவும் ஏகபோக மருந்து கம் பெனிகள் கண்டு கொண்டன.

இதற்கு அப்பால், ''நம்மை எப்போதும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் மக்களைச் சாந்தப்படுத்துவதற்கு ஆயுதங் களைவிட மருந்தே சாதகமானது'' என்பதை அமெரிக்க ஏகபோக முதலாளியான ராக்பெல்லர் பல பத்தாண்டுகளுக்கு முன்பே தமது சொந்த அனுபவத்தில் கண்டுணர்ந்து, அதனை தனது அறக்கட்டளையின் செயல்திட்டமாக நடைமுறைப்படுத்தியும் வந்திருந்தார்.

கேட்ஸ் அறக்கட்டளை பொது சுகாதார தளத்தில் இயங்குவதைத் தனது முக்கிய இலக்காகக் கொண்டிருப் பதை இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும். இந்த அடிப்படையில் தனது அறக்கட்டளை யின் மூலமாக சுகாதாரத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதோடு மட்டும் கேட்ஸ் ஒதுங்கிக் கொள்ள வில்லை. ஏழை நாடுகளின் அரசு நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொண்டு புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்காக பி.டி.பி. (Product Development Projects) என்ற பெயரில் மருந்துப் பொருள் அபிவிருத்திக்கான திட்டங்களையும், (இந்தத் திட்டம் பொதுச் சொத்துக்களை கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்கு வசதியாகச் செயல்படுத் தப்படும் பி.பி.பி. திட்டம் போன்றது) ஏழை நாடு களைச் சேர்ந்த மக்களைச் சோதனைச்சாலை எலி களாகப் பயன்படுத்தி மருந்துகளைப் பரிசோதனை செய்யும் அமைப்புகளையும் உருவாக்கி இருக் கிறது. மேலும், ஏழை நாடுகளின் அரசுகளின் சுகாதார கொள்கைகளைத் தமக்குச் சாதகமாக உரு வாக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு ஏற்ப, அதிகார வரக்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தக் கூடிய அளவிற்குப் பலமிக்க அரசுசாரா நிறுவனங் களையும் களத்தில் இறக்கியிருக்கிறார். பில் கேட்ஸின் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு



படையெடுப்புக்கு நிகரானது எனச் சொல்லத் தேவையில்லை.

2000-ஆம் ஆண்டுகளின் மத்தியில் ஆப்பிரிக்கா மற்றும் தெற்காசிய நாடுகளில் புதிய மருந்துகளுக்கான சோதனைகளை பில்கேட்ஸ் அறக்கட்டளை நடத்த ஆரம்பித்தது. 2010-ஆம் ஆண்டு கிளாக்சோ ஸ்மித் கிளைன் நிறுவனத்தின் மலேரியா தடுப்பூசியை 7 ஆப்பிரிக்க நாடுகளில் ஐந்தாயிரத்திற்கும் அதிகமான குழந்தைகள் மீது சோதித்தது. இந்தச் சோதனையின் விளைவாக 151 குழந்தைகள் இறந்ததுடன், 1,048 குழந்தைகள் முடக்குவாதம், வலிப்பு நோய் போன்ற கடுமையான பக்கவிளைவுகளால் பாதிக்கப்பட்டன. எனினும், இவ்வுண்மைகளை மறைத்து மருந்துப் பரிசோதனை பெரும் வெற்றி பெற்றதாகப் பிரச்சாரம் செய்து, உலகம் முழுவதும் அம்மருந்தை விநியோகம் செய்யும் உரிமத்தை கிளாக்சோ ஸ்மித் கிளைன் நிறுவனத்திற்கு வாங்கித்தந்தது.

> **உலகில் நிலவும் பிரச்சனைகளைத் தங்களால் மட்டுமே தீர்க்க முடியும்; அரசுகளாலோ, அல்லது மக்கள் நலனை முன்னிறுத்திப் போராடும் வேறு பிற அமைப்புகளாலோ தீர்க்க முடியாது என்று ஏகபோக அறக்கட்டளைகள் வாதிடுகின்றன. மக்கள் நலன் சார்ந்த கொள்கை முடிவுகளை எடுப்பதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விலக்கிவிட்டு, அந்த இடத்தில் இந்த அறக்கட்டளைகள் வந்தமர்ந்து கொள்கின்றன.**

அதே போன்று ஆப்பிரிக்க நாடான சாட்-இல், குழந்தைகளின் மூளையையும் தண்டுவடத்தையும் பாதிக்கும் ''மெனின்ஜெட்டிஸ்'' (Meningitis) என்ற நோய்க்கு எதிரான தடுப்பூசியை அறிமுகம் செய்து, அதனைச் சந்தைப்படுத்துவதற்காக 'மென் ஆஃப்ரி வாக்' (MenAfri Vac) என்ற இயக்கத்தையும் எடுத்தது, கேட்ஸ் அறக்கட்டளை. இத்தடுப்பூசி செலுத்தப்பட்டுப் பரிசோதிக்கப்பட்ட 500 குழந்தைகளில் 50 குழந்தைகள் முடக்குவாதத்தில் வீழ்ந்தனர்.

கேட்ஸ் அறக்கட்டளை, ஏழை நாட்டு மக்களைப் புதிய மருந்துகளைப் பரிசோதித்துப் பார்க்கும் சோதனைச் சாலை எலிகளாக மட்டும் பயன்படுத்தவில்லை. மேற்கத்திய நாடுகளில் கடும் பக்கவிளைவுகளின் காரணமாக போணியாகாமல் தேங்கிக் கிடக்கும் மருந்துகளைக் கொண்டுவந்து கொட்டும் சந்தையாவும் ஏழை நாடுகளைப் பயன்படுத்தி வருகிறது. கடும் பக்கவிளைவுகளின் காரணமாக நார்பிளாண்ட் என்ற கருத்தடை சாதனத்திற்கு (contraceptive) எதிராக அமெரிக்காவில் 36,000 வழக்குகள் தொடரப்பட்டதையடுத்து, நார்பிளாண்ட் அமெரிக்கச் சந்தையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. இக்கருத்தடை சாதனத்தின் பெயரை ஜேடல் என மாற்றி, ஆப்பிரிக்காவில் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தின் உதவியுடன் கேட்ஸ் அறக்கட்டளை சந்தைப்படுத்தி வருகிறது. ''ஆப்பிரிக்க ஆண்கள் கருத்தடை சாதனங்கள் குறித்து அக்கறைப்படாததால், ஆப்பிரிக்க நாட்டுப் பெண்கள் தங்களுக்கு இந்த மருந்து நிச்சயம் தேவை என விரும்பிக் கேட்பதாக''க் கூறி பில் கேட்ஸின் மனைவி மெலின்டா கேட்ஸ் இந்த விற்பனையை நியாயப்படுத்தியிருக்கிறார். நார்பிளாண்டைப் போன்றே கடும் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் ஃபைசர் நிறுவனத்தின் டிப்போ புரோவேரா மருந்தையும், மெர்க் நிறுவனத்தின் இம்ப்ளானோன் மருந்தையும் கேட்ஸ் அறக்கட்டளை தெற்காசிய, ஆப்பிரிக்க பெண்களிடையே விற்பனை செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

கருப்பை புற்றுநோயிலிருந்து பெண்களைக் காக்கக்கூடிய தடுப்பு மருந்தை கண்டுபிடித்துள்ளதாக அறிவித்த அமெரிக்காவைச் சேர்ந்த மெர்க் நிறுவனம், கர்டாஸில் எனப் பெயரிடப்பட்ட அம்மருந்தை 2006-இல் அமெரிக்காவில் விற்பனைக் கொண்டு வந்தது. இம்மருந்தின் பக்கவிளைவுகள் அடுத்த மூன்றே ஆண்டுகளில் தெரியவந்த பிறகு, வருடத்திற்கு 150 கோடி அமெரிக்க டாலர்கள் சம்பாதித்துக் கொடுத்த அம்மருந்தின் விற்பனை தலைகுப்புற கவிழ்ந்தது. இந்த மருந்தை யுனிசெப், உலக சுகாதார நிறுவனம், தடுப்பூசி மற்றும் மருந்துகளுக்கான சர்வதேச கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவில் விற்பனை செய்து வருகிறது, கேட்ஸ் அறக்கட்டளை.

முதலாளித்துவ விமர்சகர்கள்கூட பில் கேட்ஸ் உள்ளிட்டு ஏகபோக முதலாளிகள் நடத்தும் அறக்கட்டளைகளை, அவற்றின் இலாபவெறி மற்றும் வர்க்கச் சார்பு ஆகியவற்றின் காரணமாக ''அறக்கட்டளை முதலாளித்துவம்'' (Philanthro Capitalism) என அழைக்கிறார்கள். ஆனால், மோடி அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தன், அபாயகரமான மருந்துகளை இந்திய உள்ளிட்ட ஏழை நாடுகளில் விற்பனை செய்யும் ஏஜெண்டாகச் செயல்பட்டுவரும் கேட்ஸ் அறக்கட்டளையை, ''நோய்களுக்கும், மரணத்திற்கும் எதிரான போராட்டத்தில் அரசிற்குக் கிடைத்த மிக முக்கியமான கூட்டாளியாக''க் குறிப்பிட்டுப் புகழ்ந்து தள்ளியிருக்கிறார். இத்தகைய புகழ்ச்சிக்குப் பின்னே கர்டாஸில் மருந்தின் பக்கவிளைவுகளால் ஆந்திராவின் பழங்குடியினத்தைச் சேர்ந்த ஏழு சிறுமிகள் இறந்துபோனார்கள் என்ற உண்மை திட்டமிட்டே மறைக்கப்படுகிறது. இந்தச் சாவுகள் கேட்ஸ் அறக்கட்டளை நடத்திய படுகொலைகள். இது போன்று, மருத்துவ உதவி என்ற போர்வையில் இந்திய மக்களைச் சோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்திவரும் கேட்ஸ் அறக்கட்டளையின் சட்டவிரோத, சமூக விரோத, மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்களை வருமிதழில் காண்போம்.

(தொடரும்)

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and
Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

> **போலீசார் சந்திராவின் பிறப்புறுப்பில் லத்தியைச் சொருகி சித்திரவதை செய்ததையடுத்து, பிறப்புறுப்பிலிருந்து உதிரம் கொட்டத் தொடங்கியவுடன், “உண்மையிலேயே நீ உழைச்சு சம்பாரிச்சு இருந்தா இப்படி ரத்தம் கொட்டுமா?” என இரக்கமின்றியும் வக்கிரமாகவும் நக்கலடித்துள்ளனர்.**



தமிழகத்தில் நடந்திருப்பது வக்கிரமும் காட்டுமிராண்டித் தனமும் நிறைந்தது என்றால், புதுச்சேரியில் நடந்துள்ள சம்பவம் வெட்கக்கேடானது. பள்ளிக்கூடத்தில் பயிலும் ஏழைச் சிறுமிகள் சிலரைப் பாலியல் தொழிலில் தள்ளிவிட்ட வழக்கில் 2 ஆய்வாளர்கள், 8 போலீசாருக்குத் தொடர்பிருப்பது அம்பலமாகி, அவர்கள் அனைவரும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது குறித்த புகாரைக் குழந்தைகள் மற்றும் மகளிர் நலத்துறை அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட சிறுமிகள் கடந்த மே மாதமே நேரடியாகத் தெரிவித்த பிறகும் கூட சம்பந்தப்பட்ட பாலியல் தரகுக் கும்பல் மீதும் போலீசார் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அக்கும்பல் மீது நடவடிக்கை எடுக்க முயன்ற டி.ஜி.பி.காமராஜ், திடீரெனப் பணியிடை மாற்றம் செய்யப் பட்டார். பாலியல் தரகர்கள்-போலீசு- ஓட்டுக்கட்சி அரசியல் வாதிகள் என்ற இந்த முக்கூட்டணிக்கு எதிராக மகளிர் அமைப்புகள் ஆளுநர் மாளிகை முற்றுகை உள்ளிட்டுப் பல போராட்டங்களை நடத்திய பிறகுதான், பாலியல் தரகர்கள் கைது செய்யப்பட்டனர்; அவர்களுக்கு உடந்தையாக இருந்த போலீசார் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த இரண்டு வழக்குகளிலும் சட்டம் தானாகவே தன் கடமையை ஆற்றிவிடவில்லை. சந்திரா மீதான தாக்குதல் வழக்கில் போலீசுக்கு எதிராக ராஜகுமாரி நடத்திய சட்டப் போராட்டமும், புதுவையில் மகளிர் அமைப்புகள் நடத்திய தெருப்போராட்டங்களும் இல்லையென்றால், இவ்வழக்குகள் அரசின் இருட்டறைகளில் புதையுண்டு போயிருக்கும். சந்திரா வழக்கில் சம்பந்தப்பட்ட போலீசாரைக் காப்பாற்ற அத்துறை உயர் அதிகாரிகளே முன்நின்றனர். ‘‘குற்றவாளிகளிடமிருந்து உண்மையை வரவழைக்க இரண்டு தட்டு தட்டுவது சகஜமானதுதான்’’ என இச்சித்திரவதையைப் பத்திரிகையாளர்களிடம் நியாயப்படுத்தினார், டி.ஜி.பி. அஜய் குமார் சிங். ‘‘சந்திராவை உடுமலைபேட்டை போலீசார் கைது செய்யவில்லை. சந்திராவே குற்றத்தை ஒப்புக்கொண்டு கிராம நிர்வாக அதிகாரியிடம் சரணடைந்த பிறகுதான் போலீசு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் உடலில் இருந்த காயங்கள் அனைத்தும் குடித்துவிட்டுப் போதையில் கீழே விழுந்ததால் ஏற்பட்டவை என்பதை அவரே ஒப்புதல் வாக்குமூலமாக அளித்திருக்கிறார்’’ என போலீசு துறை நீதி மன்றத்திடம் அறிக்கை அளித்தது.

இந்த அறிக்கை ஒருபுறம் போலீசின் முட்டாள்தனத்தைப் பறைசாற்றுகிறதென்றால், இன்னொருபுறம் தமது குற்றத்தை மறைக்க எந்த எல்லைக்கும் செல்லும் அதனின் கிரிமினல் புத்தியை எடுத்துக்காட்டுகிறது. போலீசு நடத்திய சித்திரவதை வதையால் சந்திராவின் பிறப்புறுப்பிலிருந்து உதிரம் கொட்டத் தொடங்கியவுடன், ‘‘உண்மையிலேயே நீ உழைச்சு சம்பாரிச்சு இருந்தா இப்படி ரத்தம் கொட்டுமா?’’ என இரக்கமின்றியும் வக்கிரமாகவும் நக்கலடித்துள்ளனர். நகக்கண்களெல்லாம் வீங்கிப் போய், உதிரப் போக்கினால் நடக்கவே முடியாத நிலையில்தான் சந்திரா கோவை மாவட்ட இரண்டாவது குற்றவியல் நீதிமன்ற நீதிபதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளார். அந்நீதிமானோ அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல உத்தரவிடுவதற்குப் பதிலாக, சிறையில் அடைக்கும்படி உத்தரவிட்டுத் தனது கடமையை ஆற்றியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைப் பரபரப்பு செய்தியாக வெளியிட்ட பத்திரிகைகள் சந்திரா போலீசாரால் பாலியல் பலாத்காரப் படுத்தப்பட்டதை திட்டமிட்டே மறைத்துவிட்டன. பாதிக்கப் பட்டிருப்பவர் ஒரு பெண் என்று தெரிந்த பின்னும் போலீசு துறையைக் கையில் வைத்திருக்கும் ‘அம்மா’, விசாரணை நடத்துவோம் என்ற காகித அறிக்கையைக்கூட வெளியிட வில்லை. உயர்நீதி மன்ற உத்தரவுக்குப் பிறகும் சம்பந்தப்பட்ட காக்கிச்சட்டை கிரிமினல்களைப் பணியிடை நீக்கம் செய்வதற்கும் அவரது அரசு முன்வரவில்லை. ‘‘காசு பறிக்கும் நோக்கத்தில்தான் போலீசார் மீது பாலியல் பலாத்காரக் குற்றச் சாட்டுகள் கூறப்படுகின்றன’’ என போலீசாரின் குற்றங்களை நியாயப்படுத்திய ஜெயாவிடமிருந்து கருணையையும் நியாயத்தையும் எதிர்பார்க்க முடியுமா?

சட்டத்தைக் கடுமையாக்கினால் ஒரு சில நேரங்களில் சாதாரண குற்றவாளிகள் தண்டிக்கப்பட வாய்ப்புண்டு. ஆனால், அதிகாரத்தைத் தமது கையில் வைத்துள்ள காக்கிச் சட்டை கிரிமினல்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. பெண்களுக்கு எதிராக போலீசும் இராணுவமும் நடத்தியிருக்கும் சித்திரவதைகளில், பாலியல் வன்முறைகளில் எத்தனை பேர் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்ற புள்ளிவிவரத்தை எடுத்து வைத்துப் பார்த்தால் இந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியும். இதற்கும் மேலாக, கடுமையான சூழல்களில் பணியாற்றிவரும் போலீசு, இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுத்தால், அவர்களின் தார்மீக பலம் குலைந்துபோகும் என வாதாடி வரும் துக்ளக் சோ போன்ற பாசிஸ்டுகளை ஆதரிப்பவர்கள், சந்திராவின் இடத்தில் தமது மனைவியையும், விபச்சாரத்தினுள் தள்ளப் பட்ட அந்த ஏழைச் சிறுமிகளின் இடத்தில் தமது மகளையும் வைத்துப் பார்த்தால்தான் போலீசின் யோக்கியதையைப் புரிந்துகொள்ள முடியும்.

• அழகு

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14



# மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தலாமா

சென்னையிலுள்ள ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வரும் 30-க்கும் மேற்பட்ட சிறுநீரகம் செயலிழந்த நோயாளிகளுக்கு ஒரேசமயத்தில் ஹெச்.சி.வி (ஹெபடைட்டிஸ் சி வைரஸ்) என்ற கொடிய, உயிருக்கே உலைவைக்கக் கூடிய மஞ்சள்காமாலையை விளைவிக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. டயாலிசிஸ் கருவியையும், அச்சிகிச்சை நடைபெறும் அறையையும் நோய் தொற்று ஏற்படாத வண்ணம் பாதுகாப்பாக வைக்காததாலேயே அந்த முப்பது பேரையும் மஞ்சள் காமாலையை விளைவிக்கக்கூடிய கிருமி எளிதாகத் தாக்கியிருக்கிறது. மாதத்திற்கு இருமுறையோ அதற்கு மேலோ டயாலிசிஸ் சிகிச்சை செய்துகொண்டால்தான் உயிர் பிழைத்திருக்க முடியும் என்ற நிலையில் வாழ்ந்துவரும் இவர்களை, தமது அலட்சியத்தால் மரணத்தில் வாசலில் கொண்டுபோய்த்தள்ளியிருக்கிறது ஸ்டான்லி மருத்துவமனை நிர்வாகம்.

இதனைவிடக் கொடிய சம்பவம் கோவையில் நடந்திருக்கிறது. கோவை மாநகர சுகாதாரத்துறை சார்பில் நடத்தப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு முகாமில் அறுவை சிகிச்சை செய்துகொண்ட கலைவாணி என்ற பெண் பரிதாபமாக உயிரிழந்து போனார். அம்முகாமில் அறுவை சிகிச்சைக்கு உரிய மேசைகளை ஏற்பாடு செய்யாமல், மருத்துவமனையில் நோயாளிகள் அமரும் பெஞ்சுகளை ஒன்றின் மீது ஒன்றாகச் சாய்த்துக் கட்டி அறுவை சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது. இப்படி அலட்சியமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாலேயே கலைவாணிக்கு வலிப்பு ஏற்பட்டு சுயநினைவையும் இழந்து, நினைவு திரும்பாமலேயே பரிதாபமாக இறந்து போனார்.

நோயாளிக்கு வலிப்பு நோய் இருந்ததை மறைத்ததால்தான் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது எனக் கூறி மாநகராட்சியும் மருத்துவர்களும் தப்பிக்க முயன்றதை எதிர்த்து கலைவாணியின் உறவினர்கள் போராட வேண்டி இருந்தது. ஆம் ஆத்மி கட்சியினர் ஹெச்.சி.வி. தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை அணி திரட்டி போராடிய பிறகுதான் இது குறித்து விசாரணை நடத்தவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஸ்டான்லி மருத்துவமனையிலேயே சிகிச்சை அளிக்கவும் மருத்துவமனை நிர்வாகம் ஒத்துக் கொண்டது.

ஒருவேளை இந்த அகால மரணமும் அலட்சியம் நிறைந்த சிகிச்சையும் தனியார் மருத்துவமனைகளில் நடந்திருந்தால், பாதிக்கப்பட்டவர்கள் அந்நிர்வாகத்தை எதிர்த்து சுண்டு விரலைக்கூட நீட்டியிருக்க முடியாது. அது மட்டுமல்ல, பணத்தைக்கட்டிய பிறகுதான் கல்யாணியின் பிணத்தைத்தூக்க விட்டிருப்பார்கள்.

மருத்துவமனையில் நோயாளிகள் அமரும் பெஞ்சுகளை ஒன்றின் மீது ஒன்றாகச் சாய்த்துக் கட்டி அறுவை சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது.



அரசு மருத்துவமனைகளில் மருந்தில்லை, படுக்கை வசதியில்லை, சுத்தம் இல்லை, சுகாதாரமாக இல்லை என ஓராயிரம் குறைபாடுகள் இருப்பது உண்மைதான். ஆனாலும், பிணத்துக்கே வைத்தியம் பார்க்கும் தனியார் மருத்துவமனைகள் அளவிற்கு அரசு மருத்துவமனைகள் கொள்ளைக்கூடாரமாக மாறிவிடவில்லை. அது மட்டுமின்றி, அரசு மருத்துவமனைகளில் காணப்படும் இத்துணை ‘இல்லை’களுக்கும் மூலகாரணம் மருத்துவ சேவை தனியார்மயமாகி வருவதுதான். இத்தனியார்மயத்தை எதிர்த்துப் போராடுவதன் மூலம்தான் அரசு மருத்துவமனைகளில் தரமான சிகிச்சை கிடைப்பதை நாம் உத்தரவாதம் செய்ய முடியும்.